பதிவு எண் 2041 — KUDI ARASU. — தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0	வாரப்பதிப்பு.	வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
6 மாத சந்தா ,, ... ரூ 1-12	ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.	கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0		நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஹு வைகாசி 21மீ உ (3—6—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 6

:: ரஸ்டன் ஹெலிகல் ::

சென்ட்ரிப்யூகல் பம்புகள்.

விவசாயத்துக்கு இன்றியமையாதது.

நிமிஷம் 1க்கு 100 முதல் 4800 காலன் வரை 80 அடி உயரத்திற்கு தண்ணீர் எடுக்கக்கூடியது.

கோயமுத்தூரில் தயாரில் இருக்கின்றன.

- ரஸ்டன்-ஹார்ன்ஸ்பி. -

க்ரூட் ஆயில் இன்ஜின்களும் தயாரில் இருக்கின்றன.

MASSEY & Co LTD ENGINEERS

மாசி அண்ட் கம்பெனி, Ltd,

திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்டு,

கோயமுத்தூர்.

ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதாரஸ்.

கடவுளை வணங்க

பார்ப்பனத்தரகர் வேண்டுமோ!

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று

அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரண்ட ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள், மி. ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும், குறைந்த விலை 4—8—0 தபால் செலவு 0—6—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,

15 A-பீட், ஜி. டி. மதாரஸ்.

டிடக்டாவ்

அல்லது

துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம்.

உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கையறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கூடி கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதாரஸ்.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொணடுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உடலாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம், ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

கண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

ஆனந்த விகடன்

இதற்கு மூன்றும் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங் கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1-0-0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷர்ட் பொத்தான்கள் செட் 12; கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனாம்.

ச. கோ. இ காதர்மீரா சாயபு,
ஹோட்னர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

ரோஜா முத்தையா

ஸ்ரீ சீனிவாச அய்யங்கார்

சீமையிலா ராயல் கமீஷனை

பகிஷ்கரிக்கிறார்!

கைவல்ய சாமியார் எழுதுவது

திருடனைப்பிடிக்கப் பின்னால் துரத்துகையில் முன்னால் ஓடுகிற திருடனும், 'திருடன்! பிடியுங்கள்! பிடியுங்கள்!! என்றே ஓடுகிறான். முன்னால் ஓடுபவன் திருடனா, பின்னால் ஓடுபவன் திருடனா என்பதை ஊரார் தெரிந்துகொள்ள வேண்டும். அது போல, இப்பொழுது, நாயக்கர் பேரிலும் சுயமரியாதையின் பேரிலும், காங்கிரஸ் சாட்டும் குற்றத்தில் ராயல் கமிஷன் ஆதரிப்பு மிக முக்கியமானதாகும். இந்த இரண்டு கட்சிகள் சொல்லுவதையும் கேட்டுவந்திருக்கிறீர்கள். இனியும் சிறிது கவனித்து இரண்டு கட்சிக்காரர்கள் சொல்லுவதையும் நடந்துவரும் அனுபோகங்களையும் கவனித்து தீர்ப்பு கூறும் பொறுப்பு மகா ஜனங்களிடமே கிடக்கிறது. முடிக்கும் தீர்ப்பையும் அதற்கு அனுசாரணையாக இப்பொழுது உங்களுக்குக் கிடைக்கும் நியாயங்களையும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். ஏனெனில் ராயல் கமிஷனை பகிஷ்கரிக்காத தேசத் துரோகிகள் என்கிற குற்றம் சாட்டி எலக்ஷன் சமயத்தில் பார்ப்பனரல்லாதவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க இப்பொழுதிருந்தே ஏற்பாடுகள் ஆரம்பிக்கபபடுகின்றன.

காங்கிரஸ், சுயராஜ்யகட்சியின் பேரால் ஜஸ்டிஸ் கட்சியை 'தேசத் துரோகிகள், உத்தியோக வேட்டைக்கட்சி' என்று தூற்றி பாப்பாரல்லாதாரைக் கொண்டே 'ஜஸ்டிஸ்' கட்சியை ஜெயித்தார்கள். ஒருபக்கம் இப்படித் திட்டவும் மற்ற பக்கங்களிலெல்லாம் பார்ப்பன வேலைகள் உத்தியோக வேலையாகவேயிருந்தது. சர் சி.பி. அய்யர் கோஷ்டி, பார்ப்பார்களுக்காக எல்லா உதவியும் செய்தது. பெரிய பதவிகளெல்லாம் அவர்கள் வசமே இருந்தமையாலும் கவர்ன்மெண்டாரிடம் நெருங்கின பழககமிருந்தமையாலும் பெரிய ஆபீஸ் செட்கிளார்க்குகளெல்லாம் அவர்களாக இருந்தபடியாலும் தங்கள் நோக்கத்திற்குத் தகுந்தபடி எழுதி கையெழுத்து வாங்கும் சமயமும், குற்றத்திற்கு அகப்பட்டுக்கொள்ளாத மார்க்கமும் அவர்களுக்குத் தெரிந்திருந்தபடியாலும் எல்லா உத்தியோகமும் பார்ப்பனர்களுக்கே சொந்தமாயின. இப்பொழுதும் அநேகம் அப்படியே. ஒன்றிரண்டு உத்தியோகங்கள் பார்ப்பாரல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட்டால் 'தேசத்துரோக கட்சி' 'உத்தியோக வேட்டைக் கட்சி' என்று சத்தம் போட நம்மவர்களிலும் சிலரை சேர்த்தே வைத்திருக்கிறார்கள். இபபொழுது அவர்கள் காங்கிரஸ் பேரைச்சொல்லி சுயமரியாதைச் சங்கங்களின பேரில் ஏவப்பட்டிருக்கிறார்கள்.

தனக்கு வந்தால் தெரியுமென்பது போல, ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்ற முன்னணிவகித்த திரு.சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கும், சென்னை கார்ப்பரேஷன் தலைமைக்கு தாம் வருவதை மறுத்து ஸ்ரீஜி. வ. நடேச அய்யரை ஆதரித்த போதுதான் பாப்பார காங்கிரஸ் காரர்களின் வகுப்புத்துவேஷம் விளங்கிற்று. எல்லோரும் அவர்களின் வகுப்புத்துவேஷத்தையும் அக்கிரமத்தையும் உணர்ந்து ஒவ்வொருவரும் அறிக்கை வெளியிட்டார்கள், அதில் காங்கிரஸ்பார்ப்பனர்களின் தன்னலத்தைக் காட்டுவதற்கு வி. வி. விஸ்வநாத சாஸ்திரிகளின் அறிக்கை ஒன்றே போதும்.

அவர் 19-11-27 தேதி 'தமிழ்நாடு' பத்திரிகையில் எழுதுவதாவது:—

"காங்கிரஸானது நகர சபைக் கட்சியாருக்குள்ளே பிராமண பிராமணரல்லாத வகுப்பு வாதத்தைக்கிளப்பி நகரசபைப் பிராமண அங்கத்தினர்கள் தம் நிலைமையைக் கேவலப்படுத்திக் கொண்டது மன்றி தேசத்திற்கும் துரோகம் செய்துவிட்டார்கள். அரசியல் விஷயங்களில் சுயராஜ்யக்கட்சியினரல்லாத ஒருவரை ஆதரிக்கும்படி ஒரு ஓட்டு மிகுதியால் கொஞ்சமேனும் கட்சி மரியாதையின்றி சுயராஜ்யக் கட்சியார் உறுதி செய்து விட்டனர். அவ்வுண்மையை வெளிப்படையாகக் கூறிவிட பிராமணக் கட்சியாருக்கு மரியாதை இல்லாது போனாலும் ஸ்ரீ ஜி. ஏ. நடேசன் பிராமணராயிருப்பது பற்றியே அவர்கள் அவரை ஆதரிக்க முன்வந்தார்கள் என்பது வெளிப்படை. ஸ்ரீ சாமி வெங்கடாசலம் செட்டியார் அபேட்சகராக முன்வந்தால் 'ஜஸ்டிஸ்' கட்சியார் ஆதரிப்பதாக கூறினதினாலேயே கனம் செட்டியாரை அவர்கள் பறக்கணித்து விட்டார்கள் என்க் கூறப்படுகிறது. இது நியாயமான வாதமென்று அறிவுடையோர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தேர்தலில் வெற்றிபெற முடியாத ஒருவரை நிறுத்தினார்கள். கடைசியில் நேர்ந்ததென்ன? ஜஸ்டிஸ் கட்சியார் வெற்றி பெற்றார்கள், காங்கிரஸ் சுயராஜ்யத்தலைவரான சாமி வெங்கிடாசலம் செட்டியார் புறக்கணிக்கப்பட்டு ஊர்நகைப்பிற்கு ஆளாக்கப்பட்டார். மற்றவகுப்பாரை அடக்கியாளுவதே அரசில் பிராமணர்களின் அந்தரங்க மென 'ஜஸ்டிஸ்' கட்சியார் முறை இடுவது ஆச்சரியமல்ல; அதுஉண்மையே." முக்கியமானவரும் பெரிய அந்தஸதிலிருப்பவருமான ஒரு பார்ப்பனரே இப்படிச் சொல்லுவதானால் அவர்களுடைய எண்ணத்தையும் செய்கையையும் 'குடி அரசு' சொல்லுவதில் குற்றமில்லை.

19-11-27 ம் 'தமிழ்நாடு' பத்திரிகை 'வெட்ட வெளிச்சம்' என்று எழுதின தலையங்கத்தில்சொல்லுவதாவது:- 'ஜஸ்டிஸ் கட்சியார் வகுப்புவாதிகளென்று தமிழ்நாட்டில் பலமாக ஆரவாரம் செய்தவர்களில் நமது நண்பர் சத்தியமூர்த்தியும் ஒருவர். கட்டுக்கடங்காத தமது நாவன்மையைக் கொண்டு அகராதியிலுள்ள அடை மொழிகள் அத்தனையும் உபயோகித்து பலத்த குரலில் கடற்கரையில் வகுப்பு வாதத்தைக் கண்டித்து அவர் செய்த பிரசங்கங்களுக்கு அளவேயில்லை. சென்னைகடற்கரையில் மட்டுமல்ல, வெளியில் மட்டுமல்ல, வெளியூர்களிலும் கூட ஜஸ்டிஸ் கட்சியாரையும் தேசீயப்பார்ப்பனரல்லாதாரையும் தங்கள் இஷ்டப்படி ஆடாத எல்லாரையும் வகுப்புவாதிகள் ஜாப்தாவில அவர் சேர்த்து செய்து வந்த ஆரவாரங்களுக்கு அளவே இல்லை. இவ்வளவு பெரிய தேசாபிமானி வகுப்பு வாதத்தில் இறங்கி விட்டதைக் கண்டு பலர் ஆச்சரியப்படலாம். நமக்கு எவ்வித ஆச்சரியமும் ஏற்படவில்லை. கடற்கரைவீரமொழிகளும், கோக்கலே ஹால் சப்த மொழிகளும், பொதுக்கூட்ட ஆசைமொழிகளும் ஒருகாலத்தில் வெளிப்படுமென்பதை நாம் அறிவோம் இன்று அப்படியே எல்லாருக்கும் வெட்டவெளிச்சமாயிற்று. சத்தியமூர்த்தி வகுப்பு வாதத்தைக் கண்டித்து எவ்வளவு அழுத்தமாக வெளியில் பேசியபோதிலும் காரியத்தில் வந்துவிட்டால் தேசாபிமானத்தைவிட வகுப்பு வாதத்தையே முதலில் கவனிப்பார் என்பது நிதர்சனம். காங்கிரஸ் சுயராஜ்ஜிய கட்சியார் வைதீக கட்சியால் ஆளப்படுகின்றவர்கள் என்று நாம் பல தடவைகள் சொல்லிவந்தது இப்பொழுது உண்மையாயிற்று. இனியாவது ஜனங்கள் உண்மையை அறிந்துக கொள்ளுவார்களென்று நினைக்கிறோம்"

வீஷ்மனுக்குச் சிகண்டியை காட்டுவதுபோல ஜஸ்டிஸ் கட்சியைத் திட்டுவதற்கு சாமி வெங்கிடாசலம் செட்டியாரை தூக்கிச்சென்ற காங்கிரஸ்காரர்களைப்பற்றி சாமி வெங்கிடாசலம் செட்டியார் 'தமிழ்நாடு' பத்திரிகையில் எழுதுவதாவது:-

"இனி காங்கிரஸ் கட்சியார் வார்த்தைகளை பொது ஜனங்கள் எப்படி நம்புவார்கள்; நம்புவது சந்தேகந்தான்; என்னையே மோசம் செய்தார்கள்; நானும் வந்துவிட்டேன்; இப்படியே காங்கிரஸிலிருந்து பிராமனரல்லாதவர்கள் மனம் நொந்து போய்விட்டார்கள்" இது ராமசாமி நாயக்கர் எழுதுவதல்ல.

இப்பொழுதும் அந்த மேதாவிகள் தானே காங்கிரஸ் தளகர்த்தர்கள். தலைப்படையிலிருந்து பகிஷ்கார கடல் படைக்குமாற்றப்பட்டிருக்கிறார்கள். சுற்றுப்பக்கத்திலிருந்து காங்கிரஸ் என்று சத்தம் போடுகிறவர்களும் இவர்கள் வகுப்புவாதத்திற்கு வாய்க்கால் உண்டாக்கிக் கொடுப்பவர்கள் தானே. காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் இப்பொழுது அக்கினியில் குளித்து வந்துவிட்டார்களா? இல்லையே! இவர்கள் பகிஷ்காரம் எவ்வளவு சுத்தமுடையதாகவிருக்கும். காங்கிரஸ் என்னும் பேரால் ஜஸ்டிஸ் கட்சியைச்சுட்டி, பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்தைத் தடுத்தது போல் இப்பொழுது காங்கிரஸ்பேரால் சுயமரியாதைச்சங்கத்தை சுட்டி பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்தைத்தடைப்படுத்தவும், சமத்துவம் பழகுவதைத் தடுக்கவும், வருகிற எலக்ஷனில் பாப்பானும் அவர்களை தாங்கிநிற்பவர்களும் தலை எடுக்கவும், பார்ப்பனரல்லாதவர்களே தூண்டப்பட்டிருக்கிறார்கள். முன் ஜஸ்டிஸ் கட்சியை திட்டுவதற்கு யார் நியமிக்கப்பட்டார்களோ அவர்களே சுயமரியாதை சங்கத்தை திட்டுவதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நம் சென்னை மாகாணத்தில் ராயல் கமிஷன் பகிஷ்காரம் எத்தன்மையாக யிருக்கிறதென்பதை கவனிப்போம். சுயமரியாதைச் சங்கம் ராயல் கமிஷன் பகிஷ்காரத்திற்கு விரோதமாக விருக்கிறதென்று நினைப்பவர்கள் அவசியம் தங்கள் சொந்தபுத்தியில் ஆலோசித்துப்பார்க்கவேண்டும். முன்னாடியே ராயல் கமிஷனுக்குபார்ப்பனர்கள் அந்தரங்கமாகவும் பகிரங்கவாகவும் எழுதியனுப்பினவைகள் போக சர்சி. பி. ராமசாமிஅய்யர் கமீஷனுக்கு விருந்தும் செய்தார். அந்த விருந்திற்குகாங்கிரஸ்காரர்களில் குறிப்பிட்ட ஒரு சிலர் தவிர போகாதவர்கள் யார்? அறிமுகம் செய்துவைக்கப்படாத குறிப்பிட்ட பார்ப்பனர்கள் யார்? வக்கீல்கள்யார்? பார்ப்பனர்களுக்கு வேண்டிய காரியங்களை எடுத்துச்சொல்ல சமயம் கிடைத்தவர்கள் போக சமயத்தை உண்டுபண்ணிக்கொள்ள. சர்சி. பி. அய்யரிடம்வற்புறுத்தாதபாப்பார்கள்யார்? விட்டதொட்டதையெல்லாம்சர்சி.பி. அய்யர்போதாதா எடுத்துச் சொல்லுவதற்கு. சைமன் கூட்டத்திற்கு விருந்து செய்து வேண்டிய உபசாரணை நடத்தி கைகுலுக்கி சங்கதிகளைச் சொல்லசமயத்தை உண்டு பண்ணிக் கொடுத்த சர், சி. பி. அய்யருக்கு நன்றி செலுத்துவது போல் காங்கிரஸ்காரர்களுக்குத்தலைவரான ஸ்ரீஎஸ் சீனிவாச அய்யங்கார் சீமைக்குப் போகையில் 'என் வேலையை இனி நீங்களே பார்க்க வேண்டும் அதுவே எனக்கும் திருப்தியாகவிருக்கும்' என்று சொன்னது பகிஷ்காரவீரத்தின் அழகா? இந்த இடத்தில் தர்க்கத்திற்குள் ஞாயத்தைக் கொண்டு வருவதை விட மனித தன்மை பெரிதல்லவா? வக்கீல் வாதத்தின் சாமர்த்தியம்!

காங்கிரசில் முக்கியமானவரும் இந்திய சட்டசபை மெம்பருமான ஸ்ரீ எம்.கே. ஆசாரியார் 'ராயல் கமிஷனைப் பகிஷ்கரிப்பதில் யாதொரு பயனுமில்லை; அதன் முன் சாட்சி சொல்லுவதும் அவசியம் தான்; அதனால் யாதொரு நஷ்டமுமில்லை' என்று பிரசங்கமும் செய்கிறார் என்று பத்திரிகையில்படிக்கிறோம். இந்தப்போக்கின்கருத்தென்ன

(இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க).

இதிகாசம்.

இராமாயணம்—பாலகாண்டம்.

கட்டுரை 11.

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.)

மறுநாள் காலையில் விசுவாமித்திரன் சனக மன்னனை நோக்கி இராமனும் இலக்குவனும் சனகனிடமிருந்த வில்லைப்பார்க்க விரும்புவதாகக் கூறினான். உடனே சனகன் "முன்னொரு காலத்தில் தக்கன் என்பவன் ஓர் யாகம் செய்தான். அந்த யாகத்துக்கு எல்லாத் தேவர்களும் வந்திருந்தார்கள். சர்வேசுவரனுகிய சிவபெருமான் அவ்யாகத்திற்கு அழைக்கப்பெறவில்லை. அதனால் அவர் கடுங்கோபங்கொண்டு வில்லை வளைத்து நாணேற்றி எல்லா தேவர்களுடைய தலைகளை அறுத்துக் கண்ணிவிடுவதாகக் கூறினார். அப்போது எல்லாத் தேவர்களும் அஞ்சி அம்மகாதேவரைச் சரணமடைந்து துதித்தனர் அதனால் சிவபெருமான் சினந்தணிந்து அவர்களிடத்தில் அன்புகொண்டு அவ்வில்லைக் கொடுத்து விட்டார். அவர்கள் அதை என்னுடைய முன்னோருள் ஒருவனுகிய தேவராதனிடம் வைத்து வைக்கும்படி கொடுத்தனர். அவ்வில்லே இது. பிறகு நான் ஓர் கால் யாகம் செய்யும்போது கண்டெடுத்த சீதை என்ற பெண்ணை, இவ்வில்லை வளைத்து நாணேற்றுபவனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாகக் கூறினேன். பல மன்னர் இதை வளைக்க முயன்று அவமானமடைந்து என்னோடு போரிட்டனர் நான் தோல்வியுற்றுப் பின் தேவர்களுடைய உதவியாலே பெற்ற சேனைகளால் அவர்களை வென்றேன். அது முதல் இவ் வில் வளைக்கப்பெறாமலிருக்கிறது. இவர்கள் இதை வளைத்தால் இவர்களுக்குச் சீதையைக் கொடுப்பேன்" என்று கூறினான். அவ்வில் வைத்திருந்த இருப்புப் பெட்டிக்கு எட்டுச்சக்கரங்கள் உண்டு. அதை ஐயாயிரம் பேர்கள் இழுத்து வந்தனர் தேவர்களாலும், அசுரர்களாலும், ராக்ஷசர்களாலும் வேறெவராலும் எடுக்க முடியாத அவ்வில்லை இராமன் ஓர் கரத்தால் தூக்கி நிறுத்தி வளைத்தான். வில்லும் ஒடிந்தது. அவ்வொலிகேட்டு பூமி நடுங்கிற்று. எல்லோரும் மூர்ச்சையடைந்தனர். சனகன் மிக மகிழ்ந்து தனது மகளை அவனுக்குத் திருமணம் முடிக்கத் தீர்மானித்து முனிவனுடைய சம்மதி பெற்று தசரதனை அழைத்துவர அயோத்திக்கு மந்திரிகளை அனுப்பினன்.

அந்தத் தூதர்கள் நான்காம் நாள் அயோத்தியையடைந்து தசரதனைக் கண்டு பல அரசர்களாலும் வளைக்க முடியாத வில்லை இராமன் வளைத்துச் சீதையை மணக்க உரியவனுன செய்தியைக் கூறி மிதிலைக்கு அழைத்தனர். மறுநாள் தசரதன் அயோத்தியை விட்டுப் புறப்பட்டு ஐந்தாம் நாள் மிதிலையையடைந்தான். சனகன் அவனுக்கு முகமன் கூறி உபசரித்தான். தசரதன் தன் மக்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

பின் சனகன் தனது தம்பியாகிய குசத்துவசனை அழைத்துவரத் தூதரை அனுப்பினன். அவர்கள் இந்திரனது கட்டளைப்படி திருமாலை அழைத்துவரச் செல்லும் தேவர்களைப் போலச் சென்று அவனை அழைத்து வந்தனர். சனகனும் குசத்துவசனும் தசரதனை அழைத்துவரச் சொல்ல அம்மன்னவனும் தனது புரோகிதனுடன் வந்து சேர்ந்தனன். தசரதனுடைய வேண்டுகோளினலே வசிட்ட முனிவன் தசரதனுடைய குலக்கிரமத்தைக் கூறினன்

தசரதன் குலமுறை பின்வருமாறு:—பிரமன், மரீசி, காசியபன், சூரியன், மநு, இக்ஷ்வாகு, குக்ஷி, விகுக்ஷி, பாணன், அநரண்யன், பிருது, திரிசங்கு, துந்துமாரன், மாந்தாதா, சுசந்தி, துருவசந்தி, பரதன், அசிதன், சகரன், அசமஞ்சன், அஞ்சுமான், திலீபன், பகீரதன், ககுத்தன், ரகு, பிரவிருத்தன் (இவன் வசிட்டனுல் சபிக்கப்பெற்று ராக்ஷசனானவன்), சங்கணன், சுதர்சனன், அக்கினிவர்ணன், சீக்கிரகன், மரு, பிரசுச்ருகன், அம்பரீடன், நகுடன், யயாதி, நாபாகன், அசன், தசரதன்.

இக்கொடி வழியைக் கேட்ட சனகன் தனது கொடி வழியையும் கூறினன் அது வருமாறு:— நிமி, மிதி, உதாவசு, நந்திவர்த்தனன், சுகேது, தேவராதன், பிருகத்ரதன், மகாவீரன், சுத்ருதி, திருட்டகேது, ஹர்யச்வன், மரு, பிரதிந்தகன், கீர்த்திரதன், தேவமீடன், விபுதன், மகீத்ரகன், கீர்த்திரதன், மகாரோமன், சுவர்ண ரோமன், ஹிரஸ்வரோமன், சனகன். இவ்வாறு கலியாணத்தின்முன் கொடிவழி கூறுவது மரபு.

இக்கொடிவழியைக் கூறி சனகன் "என் மகள் சீதையைக் கேட்டு கிர்ப்பந்தித்த சாங்காச்ய நகர மன்னனைக் கொன்று எனது தம்பி குசத்துவசனை அவ்வூருக்கரசனாக்கினேன். எனது தலைமகள் சீதையை இராமனுக்கும் இளையவள் ஊர்மிளையை இலக்குவனுக்கும் தருகிறேன். இதுவே நிச்சிதார்த்தம்" என்று புகன்றனன். அதுகேட்ட விசுவாமித்திரன் "மிக நன்று உனது தம்பி பெண்களை பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் கொடுக்கவேண்டும்" என்று சொன்னன். சனகனும் அதற்கு இணங்கினன். பின் தசரதன் தான் இறங்கி இருக்கிற இடத்துக்குப் போய் கோதான முதலியன செய்திருந்தான். மேலே கண்ட வரலாற்றை ஆராய்வோம்.

முதலில் சனகன் வில் வரலாறு கூறுகிறான், அதாவது தக்கன் வேள்வியைத் தகர்த்தற்காக இவ்வில்லைச் சிவபெருமான் வளைத்ததாகவும் தேவர் பணியச் சீற்றம் தணிந்து அவ்வில்லை வானவரிடம் தந்ததாகவும் வானவர் அதை சனகன் முன்னோன தேவராதனிடம் தந்ததாகவும் ஆம். வான்மீகி தக்கன் வேள்வி தகர்த்தற்குக் காரணம் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் தராததென்பர். கம்பரோ

"இமையவில் வாங்கிய ஈசன் பங்குறை
உமையினை யிகழ்ந்தனனென்ன வோங்கிய
கமைபறு சினத்தனிக் கார்முகக் கொளாச்
சுமைபுய தக்கனார் வேள்வி சாடவே"

என்ற உமையைத்தக்கன் இகழ்ந்ததே காரணம் என்பர் தேவர்கள் யாகத்தொரு இடையூறுமுடையாதல் பொருட்டுடன் சிவபெருமான் சீற்றம் தணிந்தனர் என்பர் வான்மீகி. கம்பரோ 'தேவர்களுடைய பல்லும் சங்கமும் உடைந்தன; அதனால் அவர்கள் புகாத இடங்களிலெல்லாம் ஓடி ஒளிந்தனர், தக்கன் வேள்வி சிதைந்தவுடன் சிவபெருமான் முனிவுமாறிற்று' என்று கூறுவர். வான்மீகி அவ்வில்லை ஈசன் தேவர்களிடம் தர அவர்கள் தேவராதனிடம் தந்தனனென்பர். கம்பரோ ஈசனே நேரில் தேவராதனிடம் தந்ததாகக் கூறுகிருர்.

இவ் வில் வரலாறு வான்மீகிபாலகாண்டம் அறுபத்தாறாவது சருக்கத்தில் கூறப்பெறுவது. இவ்வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட வரலாறு எழுபத்தைந்தாவது சருக்கத்தில் கூறப்படுகிறது. அதாவது இராமன்முன் தோன்றிய பரசுராமன் அவனை நோக்கி "விசுவகர்மா இரண்டு விற்களைச்செய்தான். அவைகளில் ஒன்றைச் சிவபெருமானும் மற்றொன்றைத் திருமாலும் கொண்டனர். தேவர்கள் சிவவிஷ்ணுக்களின் பலாபலத்தை அறிய எண்ணி நான்முகனைக்கொண்டு அவ்விருவருக்கும் போர் மூட்டிவிட்டனர். அதன்படியே இருவரும் சண்டைசெய்ய சிவபெருமான் வில் முறிந்தது. திருமால் ஓர் சத்தமிட அதைக்கேட்டுச் சிவன் அடங்கி நின்றுவிட்டார். அப்போது தேவர்கள் வேண்டுதலாலே சண்டை நின்றது. தமது முறிந்த வில்லைச் சிவபெருமான் தேவராதனிடம் தந்தனர். திருமால் தமது வில்லை எனது பாட்டனுகிய ருசீகனிடம் தந்தனர். அம்முனி தனது மகனை எனது தந்தை சமதக்கினியிடம் தந்தனன்" என்று கூறினதாக வருகிறது. இவ்விரண்டு வரலாறுகளும் தம்முள் மாறுபடுகின்றன. இப்பின்னைய வரலாற்றையும் கம்பர் பரசுராம படலத்தில் கூறுகின்றார். அதிலும் சில மாறுபாடுகள் காணப்பெறுவன. நான்முகனிடம் தேவர்கள் அவ்விருவிற்களில் வலியதெது என வினவ அவ்விற்களை காரணமாக வற்றி ஈசனுக்கும் திருமாலுக்கும் நான்முகன் சண்டைமூட்டி விட்டானென்று கம்பர் கூறுகிறார். தமது வில் முறிந்தபின் திருமாலுடைய சத்தத்தைக்கேட்டுச் சிவன் அடங்கி நின்றார் என்ற வால்மீகி கூற்றுக்கு மாறாக கம்பர், திரும்பவும் சிவனர் சண்டைதொடங்கினரென்று கூறுகின்றார். மேலும் கம்பரோ சிவனர் தமது வில்லைத் தேவேந்திரன் கையிற் கொடுத்தனரெனக் கூறுகின்றார். இவ்வாறு பல வகையிலும் கம்பர் மாறுகின்றார். நிற்க.

தக்கன் வேள்வியைத் தகர்த்தவுடன் சிவனர் தமது வில்லை தேவர்களிடம் கொடுத்தனரென்பது உண்மையா, அன்றித் திருமாலுடன் போரிட்டு முறிந்த வில்லைத் தேவராதமன்னனிடம் கொடுத்தாரென்பது உண்மையா? மேலும் தேவராதனிடம் தேவர்கள் வில்லைக் கொடுத்தனரென்பது உண்மையா அன்றிச் சிவனரே கொடுத்தனரென்பது உண்மையா? பின்னருள்ள கதை வைணவப்பற்று மிக்கவுடையோரால் கட்டப்பட்டது போலக் காணப்படுகிறது. சீதையின் பிறப்பைப்பற்றி பின்னர் ஆராய்வோம்.

சீதை பிறந்து பெண்ணுகி அவளுடைய அழகில் பல மன்னர் ஈடுபட்டு அவளை மணக்க வந்து அவமானப்பட்டு, சனகனுடன் சண்டையிட்டு முதலில் வென்று பின் தோற்று பின் பலகாலம் ஒருவரும் வராமல் சனகன் தன் மகளுக்கு மணாளன் வாய்ப்பானோ என்றிருக்கிறகாலம் இராமன் பதினாறுவயது வாலிபனுகி வில்லை வளைத்தகாலம். ஆகலின் எவ்வாற்றானும் இராமன் சீதைக்கு இளையவனுகவே காணப்படுகிறான். ஆகையினலே இராமன் தனக்குச் சில ஆண்டுகளேனும், என் பல ஆண்டுகள் வயதில் மூத்தவளாகிய சீதையையே மணந்து கொள்கிறான். சீதையை மணக்க இராமனுக்கு முன்னர் பல தேவர், அசுரர் முதலியோரும் முயன்றிருப்பதாக தெரியவருகிறது.

கம்பர் கூறும் எழுச்சிப்படலம், வரைக்காட்சிப் படலம், பூக்கொய்படலம், நீர் விளையாட்டுப்படலம், உண்டாட்டுப்படலம், எதிர்கோட்படலம், முதலியன அவருடைய கற்பனைகளே. வான்மீகியார் சுருக்கமாக ஐந்தாம் நாள் தசரதன் மிதிலையையடைந்தானென்பதையே கம்பர் பல நூறு கவிகளால் கற்பித்துப் பாடுகின்றார்.

தசரதனை சனகனும் இராமன் முதலியோரும் எதிர் கொண்டனரெனக் கம்பர் கூறுவது வான்மீகி கூற்றுக்கு மாறுபட்டது. உலாவியற்படலமும் கம்பர் கற்பனையே. தசரதனே தன் மக்களிருக்குமிடம் சென்று அவர்களைக்கண்டு மகிழ்கின்றான் என்பர் வான்மீகி.

தசரதன் வேண்டுதலினலே குலமுறையை வசிட்டமுனிவன் கிளத்துகின்றனனென அதன் விபரமெல்லாம் வசிட்டன் வாயாலே வான்மீகி கூறுகிருர். திருமணத்தின் முன் இவ்வாறு குலமுறை கிளத்துவது மரபு என்றும் அவர் வரைந்துளார். இதற்கு மாறாக வில்லை இராமன் முறிப்பதன் முன்னரே குலமுறைகிளத்துப் படலமு

(இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க)

பெண்கல்வி.

(பெண்ணினல்லார் எழுதுவது)

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு"

வெகுகாலமாய் காரணமில்லாத அநேக கொடிய வழக்கங்களை மிகவும் அவசியமென்று எண்ணுகின்றார்கள். படிப்பு விஷயத்திலும் இந்த வழக்கம் குறுக்கே வந்து தடுக்கிறது. பெண்கள் படிப்பது வழக்கத்திற்கு விரோதமென்பார்கள். 'படித்தால் உத்தியோகம் செய்யப் போகிறார்களா, என்ன படித்தாலும் பெண்கள் தானே, படிப்பு எதற்கு? படித்தால் கெட்டு விடுவார்கள், போக்கிரிகளாய் விடுவார்கள்' என்று நமக்குள் சொல்வது சர்வ சாதாரணமே. அந்த வழக்கத்தைமீறி நடத்துகிறவர்களை தூற்றுகிறவர் சிலர். படிப்புக்குக்கூட ஆண் என்றும் பெண் என்றும் வித்தியாசம் உண்டோ? சிருஷ்டியில் இருவருக்கும் மூளையும் மனதும் உணர்ச்சியும் இன்னுமுள்ள முக்கியமான அம்சங்களும் வித்தியாசமின்றி அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்படியிருக்க, பெண்களைச் சரியான காலத்தில் படிக்கவைத்தால் உத்தியோகம் செய்ய வேண்டியதற்கான படிப்புகூட இவர்களால் கற்க முடியுமென்பதை உணரவில்லை போலும்! முன்னாளில் இருந்த ஸ்திரீகள் படித்திருந்தார்களென்று சில புஸ்தகங்களால் தெரியவருகிறது. மேலும் சகல சாஸ்திரங்களுக்கும் இருப்பிடமென்று சொல்லப்படும் சரஸ்வதி பெண்தானே. தமிழில் பெயர் பெற்ற ஒளவை என்னும் கவிமணி பெண் அல்லவா? பகுத்தறிவு இருந்தும் அதை சற்றும் உபயோகப் படுத்தாமல் கண்மூடித்தனமாக வழக்கம், வழக்கம் என்று சொல்லுகிறார்களே! அதன் தாத்பரியம் யாதோ அறிகிலேன். பகுத்தறியும் திறமை தெளிவுபடும் பொருட்டுத் தேர்ந்த கல்வியைப் பெண்கள் அடைய வேண்டியது அவசியமே. இந்த விஷயத்தைக் குறித்து எழுதத் துணிந்ததின் நோக்கம் எல்லாம் நமக்கு இயற்கையில் அமைந்துள்ள பகுத்தறியும் சக்தியை, வழக்கம் என்ற விஷத்தைக் கொடுத்துக் கொன்றுவிடக் கூடாதென்பது தான்.

நமது நாட்டில் கல்விக்குறைவினாலேயே பெண்கள் க்ஷீண தசையை அடைந்திருக்கிறார்கள். இக்குறைவு பூர்த்தியானால் நம் தேசம் முன்னேற்றமடையுமென்பதற்கு ஏதாவது ஐயமுண்டோ! ஆனால் இவ்வுலகில் பெரும்பாலருடைய எண்ணம் எவ்விதமெனில் உயர்தரக் கல்வி ஆண்பிள்ளைகளுக்கு அத்யாவசியமென்றும் அடுப்பூதும் பெண்களாகிய எங்களுக்கு கல்வி அனாவசியமென்றும் அநேகர் அபிப்பிராயம். அது முற்றிலும் தவறென நான் நினைக்கிறேன். அது எவ்விதமெனில், முதலில் தாய் தகப்பன் பணக்காராயிருந்தால் அவர்களுக்கு இஷ்டமிருந்து ஏதோ ஸ்ரீதனம் முதலியவைகள் கொடுத்த போதிலும் அவைகள் இவர்கள் சுவாதீனத்தில் ஒன்றும் இருப்பதில்லை. நவீன நாகரீகப்படி வரதக்ஷிணை எவ்வளவு ரூபாய் கொடுத்த போதிலும் அது அவன் புருஷனுடையதாய் விடுகிறது. ஏதோ சில தனிகர்கள் தம் பெண்களுக்கு 'மஞ்சகாணி' என்று சொல்ப நிலம் கொடுக்கிறார்கள். அதுவும் சுமார் நூறு ஏக்கர் பூமியுடையவர்கள், எல்லாவற்றையும் தங்கள் ஆண் சந்ததிக்கு வைத்து பெண்ணுக்கு ஒன்றிரண்டு ஏக்கர் நிலம் கொடுத்தால் அதுவே மிகவும் பெரிதா நினைத்து தாய் தகப்பனும், சகோதரர்களும் ஏராளமாய் ஸ்ரீதனம் கொடுத்து விட்டதாக நினைக்கிறார்கள். அதன் வரும்படியை தகப்பனுள்ளளவும் தன் பெண்ணுக்குக்கொடுத்து வருவார்கள். அதற்குப் பிறகு அநேகமாய் இவர்களுக்கு கிடைப்பது துர்லபம். ஆனால் மகமதிய மதத்தில் பெண்களுக்கு ஆண்களைப் போல் சொத்தில் பாகம் சமத்துவமாய் இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு கணக்கின் பேரில் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

எப்படி யிருந்த போதிலும் பெண்கள் பிறந்த விடத்தில் பெற்றோர், அவர்கள் அந்தஸ்திற்கு தகுந்த விதமாய் போஷித்து பிறகு தன் பெண் கஷ்டப்படக் கூடாதென்கிற எண்ணத்துடன் தகுந்த இடம் தேடி கலியாணமும் செய்து வைக்கிறார்கள். ஒவ்வொருவரும் கூடியவரையில் மருமகனை வெளி நடவடிக்கைகளிலும், அந்தஸ்து முதலியவைகளிலும் எவ்வளவு தூரம் பார்க்கலாமோ அவ்வளவு பார்த்தும், உட்புகுந்து பார்க்கும் படியான சக்தி மனிதர்களுக்கு இல்லையாகையால் வெளிப் பார்வையில் மாத்திரம் பிரமித்து கடைசியில் உள்ளிருக்கும் குணங்களை அறியாமல் சிலர் ஏமாந்து விடுகிறார்கள். அதிலிருந்து பெண், மாமன், மாமி முதலியோர்களிடத்திலும் புருஷனிடத்திலும் எவ்வளவு பயந்து நடந்த போதிலும் அவர்கள் கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் நடத்தும் கொடுமையை விரித்துரைக்க ஆயிர நாவுபடைத்த ஆதிசேஷனாலும் சொல்லி முடியாதெனில், நான் அதை எங்ஙனம் உரைப்பதென இத்துடன் விடுத்தேன். இவ்வளவு கஷ்டத்துடன் சில காலமோ அல்லது பலகாலமோ சமுசார வாழ்க்கையிலிருந்து மக்கட் பேறடைந்தால், கொஞ்சம் ஐவேஜி உடைய இடத்தில் ஒரு விதமாய் காலம் போக்கலாம். மேற்கண்ட குழந்தையுமில்லாமல் காலவித்தியாசத்தால் இவள் கணவனுக்கு ஏதேனும் விபரீத சம்பவம் நேரிட்டால் மேற்படி பெண்ணின் கதியை யாரென்றுரைப்பது? புருஷனை யிழந்தவளுக்கு மேற்கூறிய விதம் குழந்தைகளில்லாமல் சொத்துக்களிருந்த போதிலும், அந்த சொத்தில் இவளுக்கு ஜீவன உபாயத்திற்கு வேண்டிய அளவு இவளுக்குக் கொடுத்து மிகுதியான ஐவேஜிகளை ஹிந்து சட்டப்பிரகாரம் அவன் மைத்துனர்களோ, அல்லது தகப்பன் தயாதி வகையார்களோ எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். ஐவேஜியுள்ள விடத்திலேயே இவ்வளவு கொடுமையான விதி தர்ம சாஸ்திர பிரகாரம் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இவள் புருஷன் ஏதோ சொற்ப ஜீவனத்திலிருந்து கடைசியில் இறந்தும் போய் விட்டால் அவனுடைய உத்தரகிரியைகளுக்கு இவளே பாத்தியமுடையவள். ஆஸ்தியிருந்த போதிலும் சரி, இல்லாமற்போனாலும்சரி, உத்தரக்கிரியை முதலியவைகளை இவளே நடத்தவேண்டும். இவ்வித கஷ்டத்தில் ஒரு ஸ்திரீ தனியாயிருந்தாலே தன்னுடைய ஏழைமையை நீக்கிக் கொள்ள வழியில்லாமல் அவஸ்தைப்படுவதோடு குழந்தைகளுமிருந்தால் அவள் நிலைமை என்னவாகுமென்பதை நான் சொல்லுவது மிகை. இதைப்படிப்பவர்களே அதைத்தெரிந்து கொள்ளட்டுமென்று விட்டுவிடுகிறேன். மேற்சொன்ன பெண், கல்வியில் தேர்ச்சி பெற்றவளாயிருந்தால், பெண்கள் பாடசாலையிலோ அல்லது ஸ்திரீகள் பார்க்கும்படியானவேறு வேலைகளிலோ அமர்ந்து தன் குடும்பத்தை மரியாதையுடன் கொண்டு செலுத்த வழியுண்டாகும். அப்படிக்கில்லாமற் போனால் ஒரு வீட்டில் ஒழுக்கக்குறைவான வேலையும் செய்து அவர் கொடுக்கும் கூலியைப் பெற்று ஜீவனம் செய்ய நேரிடும். அம்மட்டோ, அதனால்விளையும் அவதூறுகள் எண்ணிறந்தவை. ஆகையால் ஸ்திரீகளுக்கு படிப்பும் சம உரிமையும் இன்றியமையாதனவென்றே கருத வேண்டும். தற்காலம் அநேகமாய் பன்னிரண்டு வயதுக்கு மேற்படாமல் பிராமணவகுப்பினருள் கலியாணம் நடைபெறுகிறது. பிராமணரல்லாதார்களும் ஏறக்குறைய பதினைந்து வயது நிறைவதற்குள் புருஷன் வீட்டில் குடித்தனம் செய்யும்படியாய் விட்டுவிடுகிறார்கள். பெண்கள் படிப்பதாயிருந்த போதிலும் இதற்குள் எவ்வளவு படிக்க முடியும். அவ்விதபடிப்பால் என்ன பிரயோஜனம்? பொழுது போக்கிற்கு ஆகுமேயல்லது வேறு பிரயோசனமில்லை. சுமாராய் இருபது அல்லது பதினெட்டு வயதில் கலியாணம் செய்தால் எல்லாவற்றிற்கும் சௌகரியம், முதலாவது கல்வியில் ஒரு யோக்கியதையை சம்பாதித்துக் கொள்ளலாம். இரண்டாவது தேகமும் டாக்டர்கள் அபிப்பிராயப்படி கூடிய வரையில் வளர்ச்சியடையும். மூன்றாவது கலியாணமென்றால் என்னவென்கிறதையும் ஒருவரை ஒருவர் பார்த்து அவரவருடைய மனோ நிலைமையையும் அறிந்து கொள்ள இடமுண்டாகும். ஆகையால் இப்பொழுது நடக்கும் கலியாணங்கள் பலவிதத்திலும் கெடுதலை விளைவிக்கிறதேயல்லாது நன்மையில்லையென்றே சொல்லலாம். அப்படியே யிருந்த போதிலும் ஏதோ சிலருக்கு அபூர்வமாய் நலத்தைத் தந்தபோதிலும், பெரும்பாலருக்கு துன்பத்தையே விளைவிக்கின்றது. ஆனால் அந்தப் பொறுப்பை தாய் தகப்பனே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதும் என் கருத்தல்ல. மணம் புரிந்த பிறகு அவளுடைய புருஷன் மேற்படி பொறுப்பை ஏற்றுக்கொண்டு தன் பெண்சாதியை படிக்கவைத்து அவள் முன்னேற்றமடையும்படி செய்தாலும் செய்யலாம். அது உண்மையான அன்புடைய சிலர் செய்தால் கைகூடும். ஆனால் பெரும்பாலோர் இதை ஒப்புக்கொள்ளார்கள். எங்ஙனமெனில் தங்கள் சௌகரியத்தையே பெரிதாக நினைத்து அது குறைவற நடக்கும்பொருட்டு மணம் செய்து கொள்ளுகிறார்களே யல்லது நான் மேற் சொல்லிய பிரகாரம் அவர்களுடைய கஷ்ட சுகம் இருவருக்கும் பொதுவென நினைத்து நடப்பதேயில்லை. உதாரணமாக, நீர் வேட்கையடைந்த ஒருவன் தண்ணீரைக் கண்டால் முன் பின் யோசியாமல் ஆவலுடன் தண்ணீரை அருந்துகிறான். அவன் மனதில் நீரைப்பற்றி 'நாம் அதைக் குடித்தால் ஏதாவது அதற்கு சௌகரியமிருக்கிறதா' என்கிற தத்துவத்தை சற்றேனும் சிந்திப்பதே இல்லை. அம்மாதிரியாய் ஆண்மக்கள் தங்களுக்கு குற்றேவல் புரியவே ஸ்திரீகளை உற்பத்தி செய்திருக்கிறதாய் எண்ணுகின்றார்களே யல்லால், அவர்களிருக்கும்போதே மேல்படியார்களுடைய இன்ப துன்பங்களைத் தன்னால் இயன்ற மட்டும் நிவர்த்திசெய்ய வேண்டுமென்பதை கனவிலும் கருதுவதில்லை. ஆனால் நம் தமிழ் பாஷைக்கே உயிர்நிலையாயிருந்த நாயனார் நட்பைப்பற்றி சொன்ன அதிகாரத்தில் "உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கு இடுக்கண் களைவதாம் நட்பு" என புகன்றுள்ளார். நட்பிற் சிறந்த நண்பினரான ஸ்திரீ புருஷர்களே அதை கவனியாமல் அலக்ஷியம் செய்தால் உய்வதெங்ஙனம். வேலியே பயிரை அழித்ததுபோல் தற்காலம் நாங்கள் எவர்களிடத்தில் அடைக்கலம் புகுந்தோமோ அவர்களாலேயே பல கஷ்டங்களுக்கும் உள்ளாகி இருக்கிறோம்.

இது நிற்க, ஸ்திரீகள் தம் கணவரோடு குடும்பம் நடத்தி சமுசார வாழ்க்கையில் சௌகரியமாகவே யிருந்தவர்களாயிருந்தபோதிலும், கல்வி அறிவுடைய ஸ்திரீகளாயிருக்கும் பக்ஷத்தில் தம் புருஷர் உத்தியோக முதலிய வெளிக்காரியங்களை கவனிப்பதோடு விட்டு, வீட்டு வரவு செலவு கணக்கு, குழந்தைகள படிப்பு முதலியவைகளை இவர்களே கவனித்து நடத்துவார்கள். இவ்விதம் கல்வி அறிவுடைய சதிபதிகள் மேற்கண்டபடி வயது வந்தபின் ஒருவரை யொருவர் பார்த்து கடைபாவனைகளைத் தெரிந்துகொண்டபின் மணம் புரிவதே நலம் எவ்விதமெனில்:—

ஸ்ரீ நாயுடுவின் பூர்வஞானம்.

(இரணியன் எழுதுவது.)

ஸ்ரீமான், நாயுடுவின் சுயராஜ்யத்திற்கும் தேசியத்திற்கும் அந்தியகாலம் கிட்டி விட்டபடியால் சிலேட்டுமம் ஏற்பட்டிருக்கின்றபோது ஸ்ரீ வரதராஜுலு நாயுடுக்கு பூர்வஞானம் பிறந்து பிதற்றுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. சுயமரியாதை இயக்கமோ அல்லது ஸ்ரீ நாயக்கரின் பிரசாரமோ தமிழ் நாட்டில் ஸ்ரீ நாயக்கராலும் அவரின் இரண்டொரு சிஷ்யராலும்தான் ஆதரித்துச் செய்யப்படும் கிளர்ச்சி என்றும் இவைகட்குப் பொதுஜன ஆதரவோ செல்வாக்கோ இல்லையென்றும்போலி வேதாந்தம் பேசி சைமன் கமிஷன் வந்திருந்த போது தமது கூலிப்பத்திரிகையிலும் எழுதி சரியாக இன்னும் இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. இப்போது புது ஞானம் தோன்றி உண்மை வெளியாகின்றது. நாட்டிலே தான் செல்வாக்கு பெற்றிருப்பதாகக் கூறும் ஸ்ரீ நாயுடுவுக்கு தம்முடைய 'தமிழ்நாட்டு' வீட்டிலே தனக்கு செல்வாக்கு இல்லையென்று தலையங்கத்திலே எழுதிக்கொண்டார். 'தமிழ்நாடு' ஆபிஸில் உள்ள எல்லா சிப்பந்திகளும் எதிரிகளின் சுயமரியாதைஇயக்கத்தின், எதிரிகளின் சுயமரியாதை செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டு அவர்களுடைய தூண்டுதலினாலே "தமிழ்நாடு" ஆபீசை கற்கள் முதலியவைகளைக் கொண்டு எறிந்து தாக்கியும், "தமிழ்நாடு" ஆபீசிலுள்ளவர்களை அடித்தும் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று கூறினார்.

ஸ்ரீ நாயுடுவும் இனி சும்மாயிருந்தால் கேலி செய்யப் போகிறார்களோ என்று தமது நண்பர்களை யனுப்பி வழிச் செலவிற்குக் கொடுத்து தூத்துக்குடி முதலிய இடங்களில் மகாநாடுகள் நடக்கப் போவதாயும் தம்மையே தலைவராகக் கூப்பிடுவதாக காணப்படுகின்றதென்றும் விளம்பரம் செய்து கொண்டார். தம்முடையபேப்பரிலேயே தம்மைப்பற்றி "டாக்டர் நாயுடு"வும் அம்மகாநாட்டிற்குப் போக ஒருப்படுகின்றார் என்று எழுதிக் கொண்டார்.

இதற்கிடையில் "காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் பாய்ந்து மேய்வது" போல் ஸ்ரீ அய்யங்காரின் கூலிகள் என்று ஸ்ரீ நாயுடுவால் கூறப்பட்ட தனவான்கள் யாவரும் மைலை, அண்ணாமலை, வேதாரண்யம், தூத்துக்குடி போன்ற ஊர்களிலிருந்து வந்து ஸ்ரீ நாயுடுவை அய்யங்கார் ஸ்தானத்தில் வைத்துக் கொண்டு தம்முடைய சிறு ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். இவர்களுக்கு ஸ்ரீ நாயுடு மேஸ்திரியாக விலகி தேசப்பணியை பங்கிட்டுக்கொடுக்கின்றார்.

ஸ்ரீ நாயக்கரையும், அவர் பத்திரிகைகளையும், சுயமரியாதை இயக்கத்தையும் சதா வசை பேசைப் போட்டாவது வியாசங்கள் எழுதி கூலிப்பத்திரிகையை நிரப்ப வேண்டும். 1 அணா 2 அணா விளம்பரக்காரர், பொடி உருண்டை வியாபாரி, ஆகாச வி. பி. கம்பெனி தபால் பெட்டி தனபால் செட்டி முதலியோர்களிடமிருந்து கூலிப் பத்திரிகையின் விளம்பரம் மூலம் காரியசாதிகளுக்கு நல்ல லாபம்தான் என்று கடிதம் வாங்கி வெளியிட வேண்டும். மாயவரம் திருப்பர், கும்பகோணம் கூட்டத்தில் கல்லெறிய வேண்டும். திரும்பிப் பார்த்தால் ஓட்டம் பிடிக்க வேண்டும் என்பவைகள் தான்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அரசியலில் முதலமைச்சர் ஆவாராயின் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று ஸ்ரீ நாயுடு பாட ஆரம்பித்து முன்னே தான் வைத ஆதிதிராவிடர்களை இப்போது துணைக்கு அழைக்கின்றார். பகவத் கீதையைப் படித்து உண்மை ஞானம் பெற்ற சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண பகவானை கொண்டு அவருடைய உபதேசப்படி ஸ்ரீ நாயக்கரை அழிக்க யுத்தத்தில் இறங்குவதாகக் கூறிக்கொள்ளுகின்றார். ஒரு கிராமத்தின் நன்மைக்காக ஒரு குடும்பத்தை அழிக்கலாமென்று கீதையில் மேற்கோள் காட்டி அறிக்கை வெளியிடுகின்றார். (இது கீதையில் எங்கிருக்கிறதோ?) இவ்வறிக்கையின்படி நமது நாட்டின் நன்மைக்காக ஸ்ரீ நாயுடு தம்முடைய குடும்பத்தை அழித்துக் கொண்டாவது தேசியத்தில் வெற்றி காட்டப் போகின்றாராம்.

ஸ்ரீ நாயுடு ஒரு பக்கத்தில் இம்மாதிரி கனவு காணவும், சுயமரியாதை இயக்கத்திற்கு கும்பகோணம், மாயவரம், திருச்சி, திண்டிவனம் செங்கல்பட்டு, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களில் நிறையும் செல்வாக்கும் மகாநாடுகளும் நடப்பதை நினைவில் பார்க்கவும் செய்யும்போது ஸ்ரீ நாயுடு மனம் புழுங்குகின்றார்.

"ஜஸ்டிஸ் கட்சியும், ஸ்ரீ நாயக்கரும், சுயமரியாதை இயக்கமும், குடி அரசும், திராவிடனும் எல்லாம் ஒரு தாயின் மக்கள் (ஒரே கட்சியைச் சேர்ந்தது தான்" என்று சொன்ன ஸ்ரீ நாயுடு உடனே பூர்வஞானம் தோன்றி "இதுவரை ஜஸ்டிஸ் கட்சியை நம்பியிருந்த சர்க்கார் அதற்குத் தேசத்தில் ஆதரவில்லையென்று கண்டு, சுயமரியாதையென்ற அழகிய பெயரால் தேசியத்திற்கு விரோதமான கிளர்ச்சியை சிருஷ்டித்துவிட்டார்கள்" என்று எழுதுகின்றார். இதனால் "தேச விரோதப் பிரசாரம், கிறிஸ்தவப் பிரசாரம், சர்க்கார் பிரசாரம் ஆகிய மூன்றும் நடைபெறுகின்றன" என்கிறார். "ஆதலால் ஸ்ரீ நாயக்கர் பிரசாரத்தில் உள்ள ஆலகால விஷத்தை எடுத்துக்காட்டி ஸ்ரீ நாயக்கரை மடக்க வேண்டியதே காங்கிரசின் முதல் வேலை"யென்று ஸ்ரீ நாயுடு தலையங்கத்தில் அடித்துக் கொள்ளுகிறார். ஆனால் திராவிடனைப் பற்றி கவலை இல்லை என்று சொல்லி விட்டார்.

ஒரு நரி ஆற்றில் அடித்துக்கொண்டு போகும் போது "உலகம் போகுதே, [illegible] போகுதே, ஐயோ!" என்று கூவிக்கொண்டு [illegible] வில் முழுகி முழுகி [illegible]. இதைக் கேட்ட கரையோரத்திலுள்ள ஜனங்கள் உலகத்திற்கு என்ன ஆபத்தோ என்று பயந்து அந்த நரியைத் தூக்கி கரையில் விட்டு "உலகம் போச்சென்று சொன்னாயே அதன் சங்கதி என்ன" என்று கேட்டார்கள். நரி உயிர் தப்பியதும் ஓடுவதற்கு தயார் செய்துகொண்டு தூக்கி விட்டவர்களைப் பார்த்து மகா ஜனங்களே! நான் ஆற்றோடு போயிருந்தால் இந்த உலகம் எனக்குப் போச்சா இல்லையா! இப்பொழுது நான் உயிருடன் இருப்பதினால் எனக்கு அவ்வுலகம் வந்தது. ஆகவால் எனக்கு உலகம் போச்சென்று சொன்னேன்" எனக் கூறி ஓடி விட்டது. இந்தக் கதைபோல் ஸ்ரீ நாயுடு இப்பொழுது "சுயராஜ்யம் போச்சு, பராஜ்யம் ஆச்சு" என்று அலறுவதெல்லாம் நரியின் உபதேசத்தைப் போன்றதுதான்.

ஸ்ரீ நாயுடுவுக்கு உண்மையில் தேசப்பற்றில் நம்பிக்கையிருந்தால் மேலே முன் ஒரு [illegible] கூறப்பட்ட நெல்லை போன்ற [illegible] கொண்டு சுயராஜ்யம் [illegible] ஸ்ரீ நாயக்கரிடம் முட்டிக் கொண்டு தேசியத்தை வளர்க்கிறேன் என்பதில் தான் சூழ்ச்சியிருக்கிறது.

ஸ்ரீ நாயக்கரின் பிரசாரமும் சுயமரியாதை இயக்கமும் பலத்துவிடவே தம்மை யாரும் தலைவராகவோ, தொண்டராகவோ மதித்து கூப்பிடுவதில்லை. தம்முடைய பேப்பரும் கிருஷ்ண பக்ஷம்போல் தேய்ந்து செல்வாக்கு அற்றுவிட்டது. எனவே இதனால் தம்முடைய வியாபாரமும், மின்சாரமும், வரும்படியும் குறைய ஏதுவாயிற்று. இவைகளை தாமாக உயர்த்த முற்பட்டு தன்னால் ஆனமட்டும் முழுபக்கம் மின்சாரம் போட்டு முயற்சித்தார். ஒன்றும் பலிக்கவில்லை. ஆதலால் செல்வாக்கிலும் புகழிலும் அதிகரித்து வருகின்ற சுயமரியாதை இயக்கத்தை பூண்டோடு அழித்தால்தான் தாம் ஜீவிக்க முடியுமென்று இப்போது உறுதி செய்துகொண்டார்.

இவ்வளவுதான் ரகசியம். தேசியம் போச்சு (மின்சாரம் போச்சு) சுயராஜ்யம் போச்சு (வரும்படி போச்சு), பராஜ்யம் ஆச்சு (சுயமரியாதை யாச்சு) என்று கூச்சல் போடுவதெல்லாம் பக்கத்தில் கூறப்பட்ட சங்கதிகள் போச்சு, ஆச்சு என்றதைத்தான் குறிக்கிறது? இதுவரை ஸ்ரீ நாயக்கரையும் சுயமரியாதை இயக்கத்தையும் பற்றி இல்லாத ஒரு அபிப்பிராயம் ஸ்ரீ நாயுடுக்கு இப்பொழுது திடீரென்று தோன்றியதின் சூழ்ச்சி இதைவிட வேறென்ன இருக்கிறது?

சட்டமெம்பரும், மந்திரிகளும், சட்டசபை மெம்பர்களும், சர்க்காரும் எல்லாம் நாயக்கருடைய ஆட்களாம். ஆதலால் சட்டமெம்பரும், பிரதம மந்திரியும் ஸ்ரீ நாயக்கரை தஞ்சையிலும் கோவையிலும் புகழ்கின்றதைக் கேட்டு வயிற்றிலும் வாயிலும் நாயுடு அடித்துக்கொண்டு "தமிழ்நாடு" தலையிலும் அடித்துக்காட்டியிருக்கின்றார்! என்னே பொறாமை என்னே அருமை!!

சட்டமெம்பர் சர். ஸி. பி. அய்யர் காலில் விழுந்து "தமிழ் நாடு" 6000 பேப்பர் போகிறதென்று பொய்யறிக்கை எழுதச்சொல்லி அதை எடுத்து விளம்பரப்படுத்தி கேவலமான முறையில் விளம்பரம் சேர்த்துக்கொள்வதுமல்லாமல், சர்க்கார் தம்முடைய பேப்பரை புகழ்ந்து விட்டதாகக் கூறிக்கொண்டு பெருமையடைந்த ஸ்ரீ நாயுடு, இப்பொழுது ஸ்ரீ நாயக்கரை புகழ்வதில் பொறாமைப்படுவது இயற்கைக் குணமே.

தவிர, 144 உத்தரவு சென்னையில் சமீபத்தில் போடப்பட்ட போது அதை எப்படியாவது கவர்னரிடம் [illegible] நேரில் கெஞ்சிக்கேட்டு ரத்து செய்து தம்முடைய மானத்தைக் காத்துக்கொள்ளலாம் என்று ஸ்ரீ நாயுடு பல பெரிய மனிதர்களைக் கொண்டும், பல பிரபல பிரஸ் ஏஜண்டுகள் மூலமும் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பேட்டி கொடுக்க மறுக்கப்பட்டது இச்சமயம் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ நாயுடு தம்முடைய பொறாமையாலும் சுயநலப் பயித்தியத்தினாலும் அரசியல் ஞானம் சிறிதுமில்லாது உளற ஆரம்பிக்கின்றார். சுயமரியாதை இயக்கமும், ஸ்ரீ நாயக்கர் பிரசாரமும் தமிழ் நாட்டில் மட்டும் நடக்கின்றது. இதை நம்பியா இந்திய சர்க்கார் தங்களுடைய ஆட்சியை இந்தியாவில் நடத்துகின்றார்கள்? இதுபோன்றே இதற்கு முன்னும் ஜஸ்டிஸ் கட்சியாரால் தான் இந்த சர்க்கார் நடந்து வந்ததா? இல்லை இல்லை, இந்த ஸ்தாபனங்கள் சர்க்காருக்குப் பெரியதாய் தென்படாவிட்டாலும், சுயநலக்கிலிபிடித்த ஸ்ரீ நாயுடுக்கு இந்திய சர்க்காரைவிட இப்போது ஸ்ரீ நாயக்கராகிய தனித்த மனிதரும், சுயமரியாதை சங்கமாகிய ஒரு சங்கமும் பெரியதாகத் தோன்றுகிறது. இதனால்தான் சர்க்காரைவிட ஸ்ரீ நாயக்கரை முதலில் தொலைக்க வேண்டுமென்று ஸ்ரீ நாயுடு கூறுகின்றார். இம்மாதிரி பைத்தியக்காரர்க

"உலகில் பெரும் உரிமை கட்டெல்லாம்
நிலவும் மணத்தால் சேரும் உரிமையே
சிறப்புடைத்தாமெனத் தெளிகுவர் யாரும்
குறைப்பிலா வகையில் தொடர்பினைகொள்ளும்
திருமண மக்கள் தேருமிவ் வுரிமையை
மருவிய சிறப்பால் மதித்திருவோரும்
கடையுடை பாவனை நன்குணர்ந்தபின்
அடைவுறுஞ் சதிபதி யாகுதல் நலனே."

சுக்கிலநத்தத்தில்

சுயமரியாதைத் திருமணத் திருவிழா.

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை தாலூக்கா சுக்கில நத்தம் கிராமத்தில் உள்ள ஓர் பிரபலமான பழைய மிராசுதாரரும், மிக்க செல்வாக்குள்ளவரும், பத்து லட்சத்திற் கதிபதியா யிருப்பவருமான ஸ்ரீ ந. சு. ரே. துரைசாமி ரெட்டியார் என்கிற சுப்பா ரெட்டியார் மாளிகையில் இன்று மூன்று திருமணங்கள் ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கர் அவர்களால் வெகு விமரிசையாக சுயமரியாதை முறையில் செய்துவைக்கப்பட்டன. இம்மணங்களின் வைபவத்தைப்பற்றி சொல்லப்புகுமுன் ஷெ ரெட்டியார் குடும்பங்களின் சரித்திரச் சுருக்கத்தையும், அவர்களது பழைய பழக்க வழக்கங்களையும், அவர்களிடம் சுயமரியாதை உதயமான காரணங்களையும் பற்றி சிறிது கூற வேண்டியது அவசியமாகிறது. சரித்திர ஆராய்ச்சியில் இந்த ரெட்டியார் வகுப்பு அரசியலில் மிகுதியும் சம்பந்தப் பட்டிருக்கின்றதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

சுக்கிலநத்தம் கிராமம் நல்ல செழிப்பான பருத்தி விளைகின்ற நன்னாட்டின் நடு நாயகமாய், மதுரையிலிருந்து 32 மைல் தூரத்திலும், விருதுநகரிலிருந்து 15 மைல் தூரத்திலும் உள்ள ஓர் மாடமாளிகைகள் நிறைந்த அழகான சிற்றூராகும். இவ்வூரைச் சுற்றிலும் பல மைல்கள் வரையில் பருத்திச் செடிகளைத் தவிர வேறொன்றும் கண்களில் தென்படாமற் போயினும், இவ்வூரிலுள்ள எல்லோரும் அநேகமாகப் பெரிய பிரபுக்களாயும், பழமையான பிரபல பணக்காரர்களாயும் பாரி மிராசுதாரர்களாயு மிருப்பதால் இவர்களால் கட்டப்பட்ட பெரிய மாடங்களும, மாளிகைகளும், பங்களாக்களும், வீடுகளும், கோயில்களும், சத்திரம் சாவடிகளும் பார்ப்போர் மனதைப் பிரமிக்கச் செய்யும்படியான காக்ஷியாகத் தூரத்தே வரும் பிரயாணிகளுக்குத் தென்பட்டு அவர்களைக் கூப்பிட்டழைப்பதுபோல் தோன்றும். பிரயாணிகளும் வழிபோக்கர்களும் இவ்வியற்கையழைப்பை மறுக்கமுடியாதவராகி சுக்கிலநத்தம் சென்று தங்கள் வழிப் பிரயாணத்தில் ஏற்பட்ட பசி, தாகம், தூக்கமின்மை முதலியவைகளால் ஏற்பட்ட களைப்புகளைப் போக்கிக் கொள்வது வழக்கம்.

பாண்டியநாட்டை திருமலை நாயக்கர் அரசாண்டுவந்த காலத்து வடநாட்டிலிருந்து விவசாயத்தில் நிபுணர்களான சிலரைத் தென்னாட்டில் குடியேறும்படி அனுமதி கொடுத்து உதவி செய்திருந்தார். இவ்வுதவியைப் பெற்று குடியேறினவர்களில் கெண்டிக் கோட்டை ரெட்டியார் என்றும், அயோத்தி ரெட்டியார் என்றும், கோட்டை ரெட்டியார் என்றும் சொல்லப்பட்டபலமுக்கிய பிரிவுகளும் உண்டு. இதில் முக்கியமான முதற் பிரிவைச் சேர்ந்த கெண்டிக்கோட்டை ரெட்டியார்கள் நிறைந்த ஊர்தான் சுக்கிலநத்தமாகும். இந்த கெண்டிக்கோட்டை ரெட்டியார் குலத்தில் பிறந்த ஓர் கௌரவ குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் தோன்றி ஆளுக்கு 4, 5 லட்சத்திற் கதிபதிகளாகவே பாகம் பெற்று தெற்கு வீடு, வடக்கு வீடு, கீழ் வீடு, மேல் வீடு, நடு வீடு என்று 5 மாளிகைகளை தனித்தனியாகக் கட்டிக்கொண்டு ஒற்றுமையாய் தங்கள் விவசாயத்தையும் லேவாதேவியையும் கவனித்து வருகின்றனர்.

இதில் வடக்கு வீட்டைச்சேர்ந்த பெரிய முதலாளியாயும் மிக்க வயோதிகராயும் 60 வயதுள்ள பெரியவராயும் உள்ள பிரஸ்தாப கௌரவ ஸ்ரீமான் துரைசாமி ரெட்டியார் என்கிற சுப்பா ரெட்டியார் அதிக மதப்பற்றுடையவராயும், தெய்வ பக்தி, அடியார் பக்தியிற் சிறந்தவராயும், நற்குணம், நல்லொழுக்கம், ஜீவகாருண்யம், பகுத்தறிவு முதலியன வாய்க்கப் பெற்றவராயும், தனக்குத் தேவையானது போக மீதமுள்ளவற்றையெல்லாம் பார்ப்பனர்களுக்கே பெரிதும் தானமாகவும், தருமமாகவும், சிரார்த்தமாகவும் கொடுத்து அவர்களையே தெய்வமாகவும் நினைத்து 55 வருஷம் வழிபட்டுவந்தார். இப்படிப்பட்ட ஒரு பெரியார் ஒத்துழையாமைக் கிளர்ச்சியின்போது இப்பக்கம் வந்த ஸ்ரீ ஈ. வி. ராமசாமி நாயக்கர் போன்ற தேசாபிமானிகளின் பிரசங்க வாயிலாக காந்தியத்தின் தன்மையை உணர்ந்து கதர் கட்டி காங்கிரசைத் தழுவி தேச முற்போக்கிற்கான காரியங்களிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் காங்கிரசின் புரட்டை அறிந்து அதினின்றும் விலகி அதிலுள்ள குறைகளையும், அரசியல் புரட்டுகளையும் பின்னர் எடுத்துக்கூறியபொழுது ஸ்ரீ சுப்பா ரெட்டியாருக்கு காங்கிரசினிடம் சந்தேகம் உண்டாகி அதில் அதிகம் ஊக்கம் செலுத்தாமல் கதரை மட்டும் கைவிடாமல் சிறிது காலம் செய்வதின்னதென அறியாமல் சும்மாயிருந்தார். சுமார் 2 வருஷங்களுக்கு முன்னர் ஸ்ரீ நாயக்கர் சமய—சமூக விஷயங்களில் அதிகமாகத் தலையிட்டு தீவிர பிரசாரம் செய்வதைக் கேள்விப்பட்டு அவருடைய ‘குடி அரசை’ முதன் முதலில் வரவழைத்துப் படிக்க ஆரம்பித்தார். படிக்க படிக்க தாம் அனுஷ்டித்துவரும் இந்து மதம் என்னும் போரால் உள்ள பொருளற்ற மதச்சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் பற்றி ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தார். பகுத்தறிவைக்கொண்டு பரிசீலனை செய்தார். ஸ்ரீ நாயக்கர் உபதேசத்தின் உட்கருத்தையும், ‘குடி அரசு’ தத்துவத்தின் உண்மையையும் ஸ்ரீ சுப்பா ரெட்டியார் சத்தியமானதெனக் கண்டுகொண்டு அவைகளைப் பின்பற்றி அனுஷ்டானத்தில் கொண்டு வந்து அதன்படி நடக்க ஆரம்பித்து விட்டார். ஸ்ரீ நாயக்கரைக் குருவாகக்கொண்டு ஏகலைவன் கதை மாதிரி குருவைப் பார்க்காமலேயே அவரை தம்முடைய குருவாகவும் வழிகாட்டியாகவும் கருதி, அவரைப் பின்பற்றி, அவர் வழிநடந்து, அவர் கொள்கைப்படிநின்று அவரின் ஊழியத்திற்கு உதவியாகத் தொண்டுசெய்யக்கருதி ஸ்ரீ ரெட்டியார் முற்பட்டு விட்டார் சுயமரியாதைச் சூரியன் உதயம் செய்து ஸ்ரீ ரெட்டியாரின் அஞ்ஞான இருளை யோட்டி மெய்ஞ்ஞான நிலையைக் காட்டிவிட்டது. ஸ்ரீமான்களான தி. கருப்பையா பிள்ளையையும், வா. து. கைலாசம் பிள்ளையையும், சுயமரியாதைத் தொண்டர்களாக்கி சுயமரியாதைப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்து சுமார் 2 வருஷங்களாக உதவி செய்து வருவதுடன் இவர்களின் பிரசாரத்தின் பயனாகவே இத்திருமணங்கள் ஏனையோர்களின் ஆதரவையும் ஏகோபித்த அபிமானத்தையும் பெற்று ஒற்றுமையாக நடைபெறக் காரணமாயிருந்தன. தம்முடைய உறவினர்கள் நிறைந்திருக்கும் சுக்கில நத்தத்தைச் சுற்றியிருக்கும் 116 கிராமங்களிலும் ‘குடி அரசு’ பத்திரிகையை கிராமங்கள் தோறும் ஐந்து பத்தாக அதிகரிக்கச் செய்து படிக்க வைத்து பாமரமக்களையும் விழிக்கச்செய்திருக்கின்றார். ஸ்ரீ நாயக்கர் ‘திராவிடனை’ ஏற்று நடத்த ஆரம்பித்ததை யறிந்து ஏனைய பத்திரிகையை அறவே ஒழித்து ‘திராவிடனை’ அதிகமாகப் பரப்ப முயற்சி செய்து வெற்றியடைந்து வருகின்றார்.

சுமார் 2 வருஷங்களாக சிரார்த்தம் முதலிய அர்த்த மற்றதும் அனாவசியமானதுமான சடங்குகளை அடியோடு நிறுத்தி விட்டார். தர்மம், புண்ணியம் என்று கருதி பார்ப்பனர்களுக்கே கொடுப்பதை முற்றும் நீக்கி விட்டார். ஜாதிமத வித்தியாசமின்றி ஏழைகளாயிருப்பின் எல்லோரையும் சமமாகக் கருதி அவர்களுக்குத் தேவையான எல்லா உதவியையும் தம் சக்திக்கேற்றவாறு செய்து கொண்டு வர ஆரம்பித்திருக்கின்றார். பார்ப்பனர்கள் கையில் தேங்காய் பழம் கொடுத்து அர்ச்சனை முதலியவற்றைச் செய்யும் தெய்வப் பிரார்த்தனைகளையும் நீக்கி, அவைகளைத் தாமே செய்து கொள்ள

ளைப் பின்பற்றினால் உடனே சுயராஜ்யம் வருமா? தவிர, ஸ்ரீ நாயுடுவுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்? இவர் என்ன காங்கிரஸ் தலைவரா? எத்தனையோ திருவாளிகளில் இவர் ஒருவர். அதுவும் பிறரைக் காட்டிக் கொடுத்துப் பெற்றது. மற்றவர்களை விட அறிவாளியும் தீர்க்கதரிசியும் அல்ல. இவரை விட பெரியவர்களும், தேசிய வாதிகளும் தேசியப் பத்திரிகைகளும், ஸ்ரீ நாயக்கருக்கே நேர் விரோதிகளும்கூட ஸ்ரீ நாயக்கர் பிரசாரத்தைப் பற்றி கவலைப்படாமல் மௌனம் சாதித்திருக்கிறார்கள். ஸ்ரீ சத்திய மூர்த்திகூட லாலாகுடியில் ஸ்ரீ நாயக்கரைப்பற்றி பேசும்போது மந்திரிகளைவிட மேலாகவும் சட்டமெம்பரைவிட மேலாகவும் பேசியிருக்கிறார். அதாவது நாயக்கர் உண்மை பேசுகிறவர் என்றும் சுயநலமற்ற தேசாபிமானி யென்றும் அவர் தொண்டைப் பற்றிதான் புகழ்வதே ஒழிய ஒரு சமயத்திலும் குற்றம் சொன்னதில்லை என்றும் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்க கூலிப்பத்திரிகையில் காலித்தனமாக ஸ்ரீ நாயுடு ஸ்ரீ நாயக்கரைப்பற்றி எழுதவேண்டியதன் உண்மைக் கருத்தென்ன? இது சுயநலமா தேசியமா என்பதை நண்பர்களே படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

தவிர, சுயமரியாதை இயக்கம் பஞ்சாப் முதலிய இந்தியாவில் உள்ள பிற இடங்களிலும் சீமையில் லண்டனில் உள்ள பெரிய மனிதர்களிடமும் பரவி வருகிறதாக ஸ்ரீ நாயுடு எழுதியிருக்கின்றார். இது இப்படியே நாயுடுவின் கிலி போல உண்மையாக ஆகவேண்டு மென்பதே நமது நோக்கம்.

“திராவிடன்”

ஆரம்பித்தார். இச்சமயத்தில் அலசந்தாபுரத்தில் ஸ்ரீ நாயக்கரைக்கொண்டு நடத்திய சடங்கொன்றை 'குடி அரசில்' படித்தார். தாமும் தம்முடைய பிற்காலச் சடங்குகளை அம்மாதிரியே செய்து முடிக்கும்படி ஸ்ரீ சுப்பா செட்டியார் தம்முடைய சுமார் 20 வயதுள்ள ஒரே அருமைக்குமாரராகிய திரு அரங்கசாமி செட்டியாருக்குக் கட்டளையிட்டார். தம்முடைய குமாரனையும் 'குடி அரசை'ப் படித்து அதன் கொள்கைப்படி நடக்கவேண்டுமென்றும் உபதேசம் செய்தார். இதைத் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' யென்ற அருள் வாக்கைக் கொண்டு திரு அரங்கசாமியும் 'குடி அரசை'த் தொடர்ந்து படித்து அதன் கட்டளைப்படியே நடக்க ஆரம்பித்தார். ஒரு நாள் தன்னுடைய தந்தையை அணுகி ஸ்ரீ அரங்கசாமி "அப்பா! தாங்கள் உயிருடனிருக்கும்போதே சீர்திருத்தமான சுயமரியாதைப்படி கூடிய திருமணத்தை எனக்கு ஸ்ரீ நாயக்கரைக் கொண்டே செய்வித்து தங்கள் கண்ணாரக்கண்டு பெருமகிழ்ச்சியோடு என்னை ஆசிர்வதிக்க வேண்டும்" என்று பிரியமாக வேண்டிக் கொண்டார். அதற்கு மணமகனின் தந்தை ஸ்ரீ சுப்பா செட்டியார் "அப்பா மகனே! நீ கேட்காமலேயே நான் உனக்கு மணமுடித்து வைக்கவே சதாயோசித்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த பெற்றோர்கள் தம்முடைய பெண்களை சுயமரியாதையுடன் ஸ்ரீ நாயக்கர் ஆசிர்வாதத்தைப் பெற்று உனக்குக் கொடுக்க சம்மதிக்கக்கூடியவர்கள் இல்லையே" என்று கூறி தாம் நல்ல காலத்தை எதிர்பார்த்திருப்பதாக அன்புடன் கூறினார்.

இதைக் கேட்ட மைந்தர் 'குடி அரசைப்' படிக்கும் இரண்டு பெண்களும் அவர்களின் பெற்றோர்களும் தம்முடைய குலத்திலேயே கௌரவமான சம அந்தஸ்துடன் இருப்பதைக் குறிப்பிட்டு அவர்களைக் கேட்டு சம்மதித்தால் அவர்களின் வீட்டுப் பெண்களையே மணமுடிக்கும் படியும், வேறெப் பெண்களும் 'குடி அரசு' கொள்கைக்கு கட்டுப்பட்டவர்கள் வேண்டாமென்றும் கூறிவிட்டார். இவ்வார்த்தையைக் கேட்ட தந்தையார் ஸ்ரீ சுப்பா செட்டியார் அவர்கள் பாவசாமி சுக்கிலநத்தத்திலுள்ள பக்கத்து வீட்டு பெரிய மிராசுதார்களாகிய ஸ்ரீ மு. செ. நா. அழகர்சாமி செட்டியாரையும் ஷை ஊர் மு. கி. ஸ்ரீநிவாச செட்டியார் அவர்களையும் அணுகி தங்களுடைய பெண்களில் ஏதாவதொன்றை திரு அரங்கசாமிக்கு கொடுக்க முடியுமா என்று கேட்டனர். இதைக் கேட்ட மேற்படியார் இருவர்களும் தம்முடைய பெண்ணை தனித்தனியாகப் போட்டி போட்டுக்கொண்டு கொடுக்க சம்மதித்தனர். இதை அறிந்த ஸ்ரீ அழகர்சாமி செட்டியாரின் குமாரத்தி திருமதி காமாக்ஷியும், ஸ்ரீனிவாச செட்டியாரின் குமாரத்தி சௌபாக்கியவதி ரங்கநாயகியம்மாளும் (?) நெருங்கிய உறவும், உயரிய நட்பும் கொண்டிருந்தபடியால் இணை பிரியாமல் தாம் இருவரும் திரு. அரங்கசாமியையே கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்றும், தனித்து திருமணம் செய்துகொள்ளக் கூடாதென்றும் சபதம் செய்து கொண்டனர். இவற்றை அறிந்த பிள்ளை வீட்டினுடையவும், பெண்கள் வீட்டினுடையவும் பெற்றோர்களும் மற்றோர்களும் திகலடைந்தனர்; பிரமை கொண்டனர். ஆச்சரியப்பட்டு செய்வதின்னதென அறியாது பிள்ளையிடம் நிகழ்ந்தவற்றை எடுத்துச் சொல்லினர். திரு. அரங்கசாமியும் 'குடி அரசு' படித்து குடி அரசு பெற்ற இரு பெண்களின் குடிக்கரசாய் விளங்க ஒருப்பட்டு பெரிய தியாக மூர்த்தியாய் ஷை இரு கன்னிகைகளையும் கல்யாணம் செய்துகொள்ள சம்மதித்துவிட்டார். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததேபோல் மணமக்களின் பெற்றோர்கள் உள்ளம் பூரித்து உடல் பெருத்து [illegible] கலியாணத்தை முடித்துவைக்க ஒருமனப்பட்டு சம்மதம் கொடுத்தனர்.

பார்ப்பனர்களின் [illegible] விசாரப்படி அவர்களை நீக்கி ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களைக் கொண்டு இத்திருமணச் சடங்குகளை செய்து வைக்க எண்ணி ஸ்ரீ நாயக்கருக்கு அவருடைய சௌகரியம் [illegible] பொழுது ஸ்ரீ சுப்பா செட்டியார் எழுதிக்கேட்டனர். ஸ்ரீ நாயக்கரும் தமக்குத் தை மாதம் முதல் இவ்வைகாசி வரை பட்ட அசௌகரியத்தினால் ஒவ்வொரு மாதமாகத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்து கடைசியில், 28—5—28ல் மதுரை இரணியூர் மகாநாட்டிற்கடுத்த நாள் வருவதாக ஒப்புக்கொண்டார். இதை மிக்க பொறுமையுடன் பெண் வீட்டாரும், பிள்ளை வீட்டாரும் காத்திருந்து ஏற்றுக்கொண்டு அந்த தேதியில் வேறு பொருத்தமும் பாராமல் முகூர்த்தத்தை வைத்துக்கொண்டார். ஸ்ரீ நாயக்கருக்கும் அவருடைய சிநேகிதர்களுக்கும் திருமண அழைப்பு அனுப்பப்பட்டது. இதையறிந்த ஸ்ரீ சுப்பா செட்டியாரின் சகலர்பாடியும் ஆவல் குரும்பட்டி ஸ்ரீ க. செ. நாராயண செட்டியார் குமாரன் திரு கோபால்சாமி செட்டியாரும் தம்முடைய திருமணத்தை ஸ்ரீ நாயக்கரைக் கொண்டே முடிக்க [illegible] ஆரம்பித்தனர். திரு. அரங்கசாமி செட்டியாருக்கு வாழ்க்கைப்பட இசைந்த இணைபிரியாத இரு பெண்களைப்போல வேறு ஒத்த பண்பும் ஒத்த நட்பும், ஒத்த அழகும் உடைய ஸ்ரீமதிகள் சமலக்ஷ்மியும் (?), சிரோமணியம்மாளும் தாங்களும் இணை பிரியாமல் ஸ்ரீ கோபால்சாமி செட்டியாரையே ஸ்ரீ நாயக்கர் மூலமாக மணமுடித்துக்கொள்ள முடிவு செய்து சம்மதி கொடுத்தனர். இதை மாப்பிள்ளையும் பெருந்தன்மையாக ஏற்றுக்கொண்டு முதல் கல்யாணம் வைத்திருந்த அதே இடத்தில் அதே பந்தலில் அதே மணையில் ஸ்ரீ நாயக்கரைக்கொண்டு முடித்துக்கொள்ள ஏற்பாடு செய்து விட்டனர். இரண்டு முகூர்த்தப் பத்திரிகைகள் அச்சிடப்பட்டு ஆயிரக்கணக்காக பந்து மித்திரர்களுக்கு அனுப்பப்பட்டன. எல்லாரும் இதைக்கண்டு ஆச்சரியமும் திகைப்பும் கொண்டு சுக்கிலநத்தத்தின் சீர்திருத்த முறையை நேரில் காணும்படி இம்முகூர்த்தத்திற்கு ஆணும் பெண்ணுமாக சகலரும் போக முடிவு செய்து விட்டனர்.

சுக்கிலநத்தம் கிராமமானது 23-5-28ல் ஒரு பெரிய திருவிழா நகரம்போல ஆகிவிட்டது. எல்லாத் தெருக்களிலும் பந்தல்கள் போட்டு, வாழைக் கமுகுகள் வரிசையாய் நாட்டி, தோரணம் தொங்கல்கள் எங்கும் கட்டி மிக்க அலங்காரம் செய்திருந்தனர். திருக் கல்யாண மண்டபம் ஸ்ரீ சுப்பா செட்டியாரின் மாளிகைக்கு முன்பு அதி அலங்காரமாய் [illegible] விளங்கும் பல சிறப்புற்ற படங்களுடன் இனிது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ செட்டியாரின் உறவினர்களாகிய 116 கிராமங்களில் உள்ள குடும்பத்தினர் [illegible] திருமண அழைப்புக் கிணங்கி முன்னாடியே சுக்கிலநத்தம் வந்து சேர்ந்தனர். இன்னும் உள்ளூரிலிருந்தும் ஏனைய பிற கிராமங்களிலும் வெளியூர்களிலுமிருந்தும் மிகப் பல நண்பர்களும், உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், வேண்டியவர்களுமாக நூற்றுக்கணக்கானவர்கள் வந்து சேர்ந்தனர்.

27—5—28ல் இரவு மதுரையில் இரணியூர் மகாநாடு முடிந்ததும் ஸ்ரீ. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களையும், திருவாளர்கள் சென்னை ஜெ. எஸ். கண்ணப்பர், [illegible], தண்டபாணி பிள்ளை, திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, பட்டுக்கோட்டை அழகர்சாமி நாயுடு ஆகிய ஐவரையும் ஒரு தனி மோட்டாரில் மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்கு கல்யாண வீட்டார் அழைத்துச்சென்று அங்கிருந்து 28௳ காலை ஊர்வலமாக 2 மைல் தூரமுள்ள சுக்கிலநத்தத்திற்கு பெரிய ஆடம்பரமாக அழைத்துச் சென்றனர். பலவிதமான பாண்டு வாத்தியங்கள், மேள வாத்தியங்களும், ஊது குழல்களும், [illegible] ஊர்வலத்திற்கு முன்னே சென்றுகொண்டிருந்தன. ஊருக்குச் சமீபமாய் ஊர்வலம் வந்த உடனே கல்யாண வீட்டார் சுமார் 1000 பேர்களுடன் ஸ்ரீ நாயக்கர் அவர்களை [illegible] எதிர்கொண்டழைத்து, பூமாலை [illegible] பூம் வழங்கி அவரின் திருவடியில் நமஸ்கரித்து திருமணப் பந்தலுக்கு இட்டுச் சென்றனர். அங்கே இத்திருமணத்தைக்கண்டு களிக்க முன்னாடியே ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தை குட்டிகளும் எள் விழ இடமில்லாமல் நெருங்கி வீற்றிருந்து ஸ்ரீ நாயக்கரின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தனர். சேனைகளும் சேனைகளும் நெருங்கி கைகலந்து யுத்தம் செய்வது போன்று ஊர்வலத் திருக்கூட்டமும் ஏற்கனவே உள்ள திருக் கூட்டத்தில் உட்புகுந்ததும் எல்லோரும் எழுந்து ஒருவரை ஒருவர் தழுவி வந்தனம் கூறி ஒருவர்மேல் ஒருவராக நெருக்கிக் கொண்டு இருக்குமிடத்தை சரிப்படுத்திக்கொண்டு உட்கார்ந்தனர். திருமணப் பந்தலின் நடுவில் 3 மண்டபங்களாக ஒரு மண்டபம் அமைத்து அதில் புஷ்பங்களால் பந்தலிட்டிருந்தனர். வாழைக

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.)

செங்கல்பட்டு ஜில்லா

ஆரம்ப ஆசிரியர் மகா நாடு.

திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கரின் அக்கிராசனப் பிரசங்கம்,

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்த, கம் தாழ்ந்த நிலைக்குக் காரணம் என்ன என்றால், தெய்வ எத்தனம் என்று வெகு சுலபமாக பதில் சொல்லி விடுகின்றார்கள். இப்படி பதில் சொல்லுபவர்களேதான் பெரும்பாலும் தங்களை ஆஸ்திகர்கள் என்றும் தெய்வ நம்பிக்கை உடையவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுகின்றார்கள். இம்மாதிரி தொட்டதற்கெல்லாம் உண்மையான காரணத்தைக் கண்டு பிடிக்காமலும் கண்டு பிடிக்க ஒரு சிறிதாவது முயற்சிக்காமலும் சோம்பேறி ஞானம் பேசுவது தான் நமது மத இயலாகவும் பெரியோரின் ஞானமாகவும் ஆஸ்திகமாகவும் போய்விட்டது. இப்போது முன்னுக்கு வந்திருக்கும் மற்ற நாட்டார் எல்லோரும் தங்கள் புத்திக்கும் முயற்சிக்கும் மதிப்புக் கொடுத்தே மேல் நிலைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலையை முதலில் உபாத்தியாயர்கள் உணரவேண்டும். இந்த நிலைக்கு பிள்ளைகளையும் கொண்டுவர வேண்டும். இம்மாதிரி நிலைமை பெற்ற மக்கள் உள்ள தேசம் எந்த விதத்திலும் முன்னடைந்தே தீரும்.

இன்று இவ்விடம் பல அறிஞர்கள் பல விஷயங்களைப்பற்றி உபந்நியாசம் செய்தார்கள். அவைகளில் கிராம சீர்திருத்தம், இயற்கைப்பாடம், சாரணர் இயக்கம் முதலிய விஷயங்கள் முக்கியமானவை. அவைகளைப்பற்றி எனது அபிப்பிராயங்களையும் சிறிது சொல்கிறேன். உபந்யாசகர் தமிழ் நாட்டில் மாத்திரம் 27 லட்சம் கிராமங்கள் இருப்பதாகச் சொன்னார்கள்.

கிராம சீர்திருத்தம்.

அவைகள் உண்மையாகவே இருக்கலாம். அக்கிராமத்தின் நன்மைக்கும் கிராம வாசிகள் முன்னேற்றத்திற்கும் இதுவரை அரசாங்கமோ அரசியல் இயக்கமோ கிராம சீர்திருத்தக்காரர்களோ அரசியல் ஜனப்பிரதிநிதிகளோ ஏதாவது ஒரு சிறிது நன்மை செய்திருக்கிறார்களா? ஆனால் ஒவ்வொருவரும் தம்தம் நலனுக்காக வேண்டி கிராமத்தார்கள் முன்னேற்றத்திற்கு பாடுபடுவதாகச் சொல்லியே மக்களை ஏமாற்றி பிழைப்பை வலுப்படுத்தியோ தாங்கள் ஓட்டுப் பெற்றோ மக்களின் நம்பிக்கை பெற்றோ சுயநலமடைந்து வருகிறார்கள். கிராமத்தின் நிலைமைகள் மாத்திரம் நாளுக்கு நாள் கீழ்நோக்கிக் கொண்டே போகின்றது. உதாரணமாக எங்கள் ஜில்லாக்களில் அனேக கிராமங்கள் அக்கிராமச் சொத்தைவிட அதிகமான கடனுக்கு ஆளாகி கிராம மிராசுதார்கள் வெளிநாட்டு லேவாதேவிக்காரர்களுக்கு தங்கள் சொத்துக்கள் முழுவதையும் அடமானம் செய்திருக்கிறார்கள். இதற்கு காரணம் விளைவு இல்லை என்று சொல்லிவிட முடியாது. அல்லது விளை பொருள்களுக்கு விலை இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. இவற்றுள் அனேக கிராமங்கள் வருஷம் மூன்று போகம் விளையக்கூடிய தண்ணீர் வசதிகளையும் நிலத்தேட்டத்தையும் நிரந்தரமாய் உடையவைகள். நெல், வாழை, கரும்பு, பருத்தி, புகையிலை, மஞ்சள் முதலிய விலை உயர்ந்த விளை பொருள்களையே அதிகமாக வெள்ளாமை உடைய பூமிகளாகவே இருந்து வருகின்றன. இப்பூமிகளை உடைய விவசாயிகளும் லேசான மிராசுதார்கள் அல்ல. அதாவது ஒவ்வொரு மிராசுதாரனும் வருஷம் ஒன்றுக்கு 1000 சலகை 2000 சலகை 3000 சலகை என்கின்ற எண்ணிக்கையான தானியவருவாய் உடையவர்கள் [ஒரு சலகை நெல் 12 ரூபாய்விலை பெறுமானது.)

இப்படிப்பட்ட மிராசுதார்களே 10 ஆயிரம், 50 ஆயிரம், ஒருலட்சம், 2லட்சம் ரூபாய்கள் 100க்கு 10 முதல் 15 வரை வட்டியுள்ள கடனாளிகளாக இருக்கின்றார்கள் என்றால் சிறிய மிராசுதார்களைப் பற்றி விளக்க வேண்டுமா? கிராம சீர்திருத்தம் என்பது வீதி கட்டுவதும் பள்ளிக்கூடம் கட்டுவதும் பஜனை மடம் உண்டாக்குவதும் உத்சவங்கள் செய்விப்பதும் அதிகமாக வெள்ளாமை விளையச் செய்வதுமான காரியங்களைச் செய்து விட்டால் போதும் என்று பலர் நினைக்கிறார்கள். இக்காரியங்களினால் எந்தக் கிராமமும் முற்போக்கடைந்து விடாது. கிராமக்குடித்தனக்காரருக்கு பகுத்தறிவையும், சிக்கனத்தையும், ஏழை மக்கள் நிலைமையையும், ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டும். கிராமவாசிகள் கள்ளுக்கடை ஒப்பந்தத்தில் குத்தகைக்கு எடுத்து சுவாமி கோவில்கட்டுகிறார்கள். பரம்பரையாய் திருடுகின்ற ஜாதியார் என்கின்றவர்களுக்கு திருட அனுமதி கொடுத்து, அவர்களை போலீசார் கண்டு பிடித்து தண்டிக்க இடம்கொடுக்காமல் இருப்பதாக வாக்களித்து அபயம்கொடுத்து அவர்களிடம் திருட்டில் பங்கு வாங்கி உத்சவம் செய்கிறார்கள். வெறும் புராணப்படிப்பைச் சொல்லிக் கொடுத்து தங்கள் பணங்காசையெல்லாம் பஜனைக்கும், உற்சவத்திற்கும் கல்யாணத்துக்கும் கருமாதிக்கும் கும்பாபிஷேகம் முதலியகாரியங்களுக்கும் செலவுசெய்யச் செய்வதும் யாத்திரைக்கும் உற்சவத்திற்கும் சமாராதனைக்கும் செலவு செய்து அவற்றில் போட்டிபோட்டுத் தங்கள் வரும்படியையும் மேற்கொண்டு கடன்வாங்கியும் செலவுசெய்ய பழகிவிடுகிறார்கள். மற்றும் பக்தி என்றும் மதம் என்றும் முட்டாள்தனமாக சிரைத்துக்கொண்டு பட்டை நாமங்கள் போட்டுக் கொண்டும் சாம்பலைப்பூசிக் கொண்டும் குடும்பத்தைக் கவனிக்காமல் பாஷாண்டிகளாய் திருடுவதும் புது நாகரீகம் என்னும் பேரால் தங்கள் வாழ்க்கைச்செலவை அதிகப்படுத்திக் கொண்டு மோட்டார் வண்டி என்றும் அனுபவிக்க உயர்ந்த சாமான்கள் என்றும் உயர்ந்த ஆடைகள் என்றும் பல வழிகளில் தங்கள் தேவைகளுக்கு மேலும் தங்கள் அனுபவிக்க வேண்டிய சுகத்திற்கு மேலும் போட்டி போட்டுக் கொண்டு முட்டாள் தனமாக தங்கள்பணங்களைச் செலவுசெய்துவிடுகின்றார்கள் போதாக்குறைக்கு அரசியல்புரட்டால் ஏற்பட்ட தொல்லையாகிய ஜனப்பிரதிநிதித்துவம் என்று சொல்லப்படும் ஸ்தானங்களாகிய யூனியன் பஞ்சாயத்து, தாலூகா ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி சட்டசபை முதலிய ஸ்தானங்களின் தேர்தல்களுக்கும் போட்டி போட்டுக் கொண்டு 1000, 5000, 10000, 50000 ரூபாய்கள் வரை தேர்தல்கள் செலவும் அவைகளினால் தங்கள் வாழ்க்கை கவனிப்பு கெடுதலும் ஏற்படுகின்றன. மற்றபடி ஒழுக்கங்களிலும் மிராசுதாரர்களாயிருக்கிறவர்கள் தாசி வேசி வைப்பு முதலிய விஷயங்களில் ஈடுபட்டு தங்கள் வீட்டு பெண்களை கவனியாமலும் அவர்களுக்கு வாழ்க்கையில் இன்பமில்லாமல் கொடுமைப்படுத்துவதும் அதனால் இம்மாதிரி மிராசுதாரர்கள் வீட்டுப் பெண்கள் பெரிதும் தங்கள் இயற்கை உணர்ச்சியை கட்டுப்படுத்த சக்தியற்றவர்களாகி தங்கள் வேலையாட்கள் வெளியாட்கள் முதலானவர்களுடன் இன்பம் அனுபவிக்க துணிவு கொள்ளவேண்டி ஏற்படுவதும், இதனால் குடும்பகவனம் குறைந்து அவரவர்கள் இஷ்டம்போல் அவரவர்கள் கையில் சிக்கின பணத்தை பாழாக்குவதுமான வழிகளால் அநேக குடும்பங்கள் கெடுவதும், மற்றும் விவகார வியாஜ்யங்கள் முதலியகாரியங்களில் வக்கீல்களுக்கும் அதிகாரிகளுக்குமாக தங்கள் பொருள்களை அள்ளிக்கொடுத்து பாப்பராவதும், அதிகாரிகள் சிநேகத்திற்காகவும் பட்டம், பெருமை, முதலியவைகளுக்காகவும் பொருள்களை கவலையின்றி வாரி இறைத்து கடன்காரர்களாவதும் ஆகிய எத்தனையோ விதங்களில் கிராமங்களும் கிராம மிராசுதாரர்களும் 100-க்கு 80-பேருக்கு மேலாக கடன்காரர்களாகவும் ஒழுக்கமில்லாதவர்களாகவும் குடும்பங்களில் கவலை இல்லாதவர்களாகவும் இருந்து வருவதை நாம் தினமும் பார்த்து வருகின்றோம்.

இக்குறைகள் நீங்கினாலன்றி வேறு எந்த காரணத்தினாலாவது நமது கிராமங்கள் முற்போக்கடைந்துவிட முடியுமா என்று கேட்கின்றேன்.

எனவே இக்குறைகள் நீங்க எந்த அரசியலோ, மத இயலோ, கிராம சீர்திருத்த இயலோ, இதுவரையில் ஏதாவது செய்து வந்திருக்கிறதா என்று கேட்கின்றேன்.

உண்மையாய் ஏதாவது ஒரு கிராமம் சீர்திருத்தமடைய வேண்டுமானால் மேற்கண்ட குற்றங்கள் நீங்கத்தகுந்த கொள்கையை கொண்டதான கிராம சீர்திருத்தத்தன்மை ஏற்பட்டாலொழியவேறு எந்த விதத்திலும் சீர்திருத்தம் ஏற்படாது. இவைகள் எல்லாம் என்னுடைய 35-வருஷ கிராம வாசிகளுடையவும் மிராசுதாரர்களுடையவும் சிநேக அனுபவத்தினாலேயே சொல்லுகிறேன். இந்த மேற்கண்ட காரணங்களால் வருஷம் பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம், ரூபாய் வரும்படி உள்ள பெரிய பெரிய குடும்பங்கள் கடனுக்கும் சொத்துக்கும் சரி என்றும் சொத்துக்கு மேற்பட்ட கடன் என்றும் சொல்லும்படியான நிலையில் இருந்துவருகின்றது.

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

சுயமரியாதை இயக்கம்.

நாடெங்கும் பெரிய முழக்கம்.

சுயமரியாதை வீரர்களின் திக்விஜயம் அதிவிமரிசையான வரவேற்பும் ஆடம்பரமான உபசாரங்களும்

சுயமரியாதை வீரர்களான ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஜே எஸ் கண்ணப்பர், கி.ஆ. பெ. விஸ்வநாதம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை, அழகர்சாமி நாயுடு, எஸ். இராமநாதம்பிள்ளை, எம். எ பி எல் ஆகியோர்கள் மதுரை இளைஞர் மகாநாட்டிற்கு 25 தேதி காலையில் வந்திறங்கினர் தலைவர் டாக்டர் நடேச முதலியார் எல் எம் எஸ் அவர்களும் அதே வண்டியில் மதுரை வந்திறங்கினர். சரியாக பகல் 12 மணிக்கு மிக வெயிலாக இருந்தும் சுமார் 1000க்கு மேற்பட்ட மகாஜனங்கள் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேளவாத்தியங்கள் முழங்க, கோவில் பூச்சக்கர கொடைகளும், கொடிகளும், தோரணங்களும் விருதுகளும் முன் செல்ல பின்னே இரண்டு யானைகளும் அதற்குப்பின்னே ஒட்டகங்களும், அதன் பின்னே குதிரைகளும் அணிவகுத்துச் செல்ல மோட்டாரில் எல்லா தலைவர்களையும் மதுரையம்பதியில் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட தெருக்களின் வழியே ஊர் வலமாய் அழைத்துச் சென்ற காட்சியைப்பார்த்தோர் சுயமரியாதை இயக்கத்தின் பெருமையை உணராமலிரார்.

மகாநாட்டு கொட்டகை மிக அழகாகவும் கதர் கைத்தொழில் காட்சி பொருள்களுடன் மிக விமரிசையாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது மதுரை இராமனாதபுரம் ஜில்லாக்களில் உள்ள பல பிரபல பார்ப்பனரல்லாத தலைவர்களும், தொண்டர்களும, இளைஞர்களும் சுமார் 3000 க்கு மேற்பட்டு வந்திருந்தார்கள். வெளி ஜில்லாத் தலைவர்களும் ஸ்ரீமான் வி ஒ சிதம்பரம் பிள்ளையுட்பட பலர் வந்திருந்தார்கள். இதை ஓர் பெரிய மகாண மகா நாடென்றே கூறலாம். இம் மாதிரி மகாநாட்டிற்கு காங்கிரஸ்மகாநாடுகளுக்கும் உள்ள வித்யாசம்மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைப்போல் காணப்பட்டது

சாப்பாட்டு வசதிகளோ சொல்லும் தரமன்று. 26, 27, தேதிகளில் இரண்டு நாளும் ஸ்ரீ தங்கமயில் நாடார் தலைமையில் நாடார் குல நண்பர்களைக் கொண்டு செய்து வைக்கப்பட்ட ஏற்பாடுகளை மெச்சாதவர்கள் இல்லை. ஒவ்வொரு வேளையும் வடை பாயாசத்துடன் உண்டி நாலு விதத்திலறு சுவைத்திறத்துடன் ஒத்ததாய் பக்குவமறிந்து காலா காலத்தில் வேண்டிய மட்டும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இலவசமாய் ஸ்ரீமான் எம டி சுப்பிரமணிய முதலியார் வீட்டில் சாதிமத பேதமின்றி சமபந்தியில் பரிமாறப் பட்டன. ஸ்னானத்திற்குரிய தண்ணீரில் பன்னீர் கலந்திருந்தது. குடிக்கும் தண்ணீ ரெல்லாம் ஷர்பத்தாகவும் பன்னீராகவும் இருந்தது. ஒவ்வொரு வேளையும் பாயசத்துடன விருந்து சாப்பாடாகவே இருந்தது நெய்யெல்லாம் தண்ணீராகவே கருதப்பட்டு வழங்கப்பட்டது இவற்றில் ஒரே குறை தான் காணப்பட்டதென ஸ்ரீ விஸ்வநாதப்பிள்ளை கூறினர் அது வைகாசி அலையும் ஜலத்தில் பன்னீர் ஊற்றப்படாமல் இருந்ததே யாகும் இம்மாதிரி சாப்பாட்டுடன் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தை யாரே அழிக்கவும் அசைக்கவும் கனவு காண்பவர்!

மகாநாட்டில் முதல் நாள் திரு நடேச முதலியாரும் மறுநாள் திரு நாயக்கரும் தலைமை வகித்துச் செய்த தீர்மானங்களின் முக்கியங்களும் பிரசங்கம் செய்தவர்களின் பெருமைகளும் அளந்து கூறமுடியாது ஒரு பெரியகாங்கிரஸ்கூட செய்து முடிக்காதபல முக்கியதீர்மானங்களை ஏகமனதாகச்செய்து அனுஷ்டானத்திற்கொண்டுவந்திருக்கின்றனர் பார்ப்பனரல்லாதாருவதிகளும் வர்களுக்காட்டுகின்ற உணர்ச்சியும ஊக்கமும சுயமரியாதை இயக்கத்தை பலப்படுத்தி சுதந்தரத்தையும் சுயராஜ்யத்தையும் சீக்கிரம் கொண்டு வந்து கொடுக்குமென்பதில் என்ன சந்தேகம்,

28—5—28.

ஸ்ரீ நாயக்கர் ஸ்ரீ தண்டபாணி பிள்ளையும், ஸ்ரீ கண்ணப்பர், ஸ்ரீ விஸ்வநாதப் பிள்ளை, ஸ்ரீ அழகர்சாமி நாயுடு, ஆகிய ஐவரும் இன்று முழுதும் சங்கிலி ரதத்தில் பெரிய ஊர் வலத்திடை சென்று 3 திருமணங்களை நடத்தி வைத்து மாலையில் ஒரு மகாநாட்டில் பிரசங்கம் செய்தார் சுமார் 10000 பேர் அப்பிரசங்கத்திற்கு வந்திருந்தார்கள், இந்தப் பிரசங்கத்தின் பயனாய் 116 கிராமங்கள் திருந்தி சுயமரியாதையை அடைந்து பார்ப்பனப்புரோகிதர்களை ஒழித்து நல்வழி பெற்றிருக்கின்றன.

29—5—28.

இன்று காலை அருப்புக்கோட்டைக்கு சுயமரியாதை வீரர்கள் விஜயம் செய்தனர். மாலை இரண்டு குதிரை பூட்டிய பெரியதொரு இரதத்தில் ஸ்ரீமான்களான நாயக்கர், கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை, விஸ்வநாதபிள்ளை அழகர்சாமி நாயுடு லட்சுமணபிள்ளை ஆகியவர்களை ஆரோகணிக்கச் செய்து வாத்தியங்கள் முழங்க பெரிய தெருக்கள் வழியாக ஊர் வலமாக அழைத்துச் சென்றனர். 5000 ஜனங்கள் அடங்கிய மகா நாடொன்றில் நாடார்குலமித்திரன் பத்திராதிபர் தலைமையில் சுயமரியாதை வீரர்கள் இரவு 11 மணி வரை பிரசங்கம் செய்தார். பெரிய உணர்ச்சி அருப்புக்கோட்டையில் தோன்றிவிட்டது

அருப்புக்கோட்டை மகாநாட்டில் காங்கிரஸ்வாதியான ஸ்ரீமான் லட்சுமணபிள்ளை பேசும்போது தாம் இதுவரை காங்கிரஸிற்காகப் பாடுபட்டு ஒரு பயனும் விளையவில்லை. என்றும் காங்கிரஸ் தலைவர்கள் தொண்டர்களைக் காட்டிகொடுத்து சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டு தன் நலம் கருதுகிறார்கள் என்றும் தாம் இன்று முதல் அப்பேர்ப்பட்ட அயோக்கியர்களின் கூட்டத்தை விட்டு இம்மகா நாட்டார் முன்னிலையில் சுயமரியாதை இயக்கத்தில்சேர்ந்து விட்டதாயும இனி தாம் இதிலேயே வேலை செய்யப்போவதாயும் கூறிசபதம்செய்துகொண்டு ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அவரை திரு விசுவநாதபிள்ளை சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக வரவேற்று நல்வரவு கூறினர்

கள்ளிக்குடி 30-5-28

இன்று காலை சுயமரியாதை வீரர்கள் அருப்புக் கோட்டையிலிருந்து 25 மைல் உள்ள கள்ளிக் குடிக்கு மோட்டாரிலும் டிரெயினிலுமாக பிரயாணம் செய்து வந்து சேர்ந்தனர். இங்கே மிகவும் ஆடம்பரமாக இவர்கள், பெரிய மில் சொந்தக்காரர்களும் பிரபல பணக்காரர்களுமான ஸ்ரீமான்கள் கே. வி. ராமச்சந்திர ரெட்டியார், வி. இராமன் பணிக்கர் முதலியோர்களால்எதிர்கொண்டழைக்கப்பட்டு மாலையிடப்பட்டு ஊர்வலமாய்ப் போய் அவர்கள் ஜாகையிலிறக்கிபகலில் அறுசுவையுண்டியுடன் மேற்படியார்களால்விருந்தளிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டு வந்தனங்கள் கூறி மாலை 3 மணிக்கு திரு கண்ணப்பர் பிறந்த ஊராகிய 7 மைல் தூரமுள்ள குன்னத்தூருக்கு புறப்பட்டு விட்டார்கள். மாலை 5 மணிக்கு குன்னத்தூருக்கு வீரர்கள் யாவரும் வந்து சேர்ந்தார்கள்.

குன்னத்தூர் 30-5-28

இன்று மாலை 5 மணிக்கு ஸ்ரீமான்கள், நாயக்கர், கண்ணப்பர், விஸ்வநாதபிள்ளை தண்டபாணி பிள்ளை, அழகர்சாமி நாயுடு, லட்சுமணப் பிள்ளை ஆகியவர்களை சுமார் 5000 ஜனங்கள் தாரை, தம்பட்டம், பாண்டு மேளம் முதலிய சகலவித இன்னிசைக் கருவிகளுடன் கொடி, குடை முதலிய விருதுகளுடன் எதிர்கொண்டழைத்து மாலையிட்டு ஜெ கோஷத்துடன் ஊர்வலமாக சுற்றிச்சென்று தேவாங்க சமூகத்தினரால் அளிக்கப்பட்ட சிற்றுண்டிகளை வழங்கி உபசரித்தனர். சரியாக மாலை 6 மணிக்கு சுமார் 3000 ஆண்களும் 2000 பெண்களும் கூடிய பெரியதொரு மகாநாட்டில் திரு. கண்ணப்பரை தலைமை வகிக்கும்படி மகா ஜனங்கள் வேண்டிக்கொண்டனர். அதன்படியே தலைமை வகித்து முகவுரைகூறி ஸ்ரீ நாயக்கரையும் மற்றவர்களையும் பேசும்படி தலைவர் கட்டளையிட்டார். ஸ்ரீ கண்ணப்பருக்கு பிறந்த ஊரில் இவ்வளவு செல்வாக்கும், கௌரவமும், இருப்பதை ஸ்ரீ நாயக்கரும், ஸ்ரீ தண்டபாணி பிள்ளையும், மிகுதியும பாராட்டிப் பேசி சுயமரியாதை சொற்பொழிவு நிகழ்த்தினர். சரியாக 11-மணிக்குள் எல்லோரும் பேசி முடிந்தபின் ஒரு பெரிய விருந்து சமபந்தியாக நடைபெற்றது.

இவ்வாறு ஸ்ரீ நாயக்கர் சுயமரியாதைப் பிரசாரம் எவ்வளவு தீவிரமாகவும், வேகமாகவும், தமிழ் நாட்டில் பரவி வருகிறதென்பதை நேயர்கள் கவனித்து தாங்களும் அதில் ஈடுபட்டு நன்மையடையக் கோரப்படுகின்றனர்.

விருது நகர்.(31—5—28)

இன்று சுயமரியாதை வீரர்கள் குன்னத்தூரிலிருந்து மாலை விருது நகர் சேர்ந்தார்கள். பெரிய ஆடம்பரமான வரவேற்பும் மீட்டிங்கும் ஏற்பாடு செய்திருந்தபடி மிகவும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

சுயமரியாதை இயக்கத்தின் இடி முழக்கம்.

'திராவிடனில்'
திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை எழுதுகிறார்.

—)❋(—

முன்னுரை.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு சென்ற சில நாட்களாக சுயமரியாதைக் கிலி பிடித்து பைத்தியங் கொண்ட பாமரர்களைப்போல இல்லாததும் பொல்லாததுமான சொற்களை தமது பத்திரிகையில் உபயோகித்து பிரசுரித்து வருவதை பலரும் நன்கறியமுடியும். ஒரு காலத்தில் தேசியப்போராட்டத்தில் சிறந்து விளங்குவாரென்று ஒருவரும் எதிர்பார்க்க முடியாது. தேசிய இயக்கத்தில் படுபேபொழுது வெள்ளையர்களின் ஆதிக்கத்தை ஒழித்தால்தான் நம் நாடு விடுதலையடையும் என்று போர் முழக்கம் செய்தார். அதற்குப்பிறகு குருகுல போராட்டகாலத்தில் தேசியத்தைவிட்டு பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை ஒழித்தால்தான் நம் நாடு விடுதலையடையும் என்று கர்ஜித்தார். அதற்குப்பிறகு ஸ்ரீமான் நாயக்கரைப் போன்ற சிறந்த தியாக மூர்த்திகளை ஒழித்தால்தான் நம் நாடு விடுதலையடையும் என்று இடி முழக்கம் செய்தார். சமீபகாலத்தில் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையைப் போன்ற உண்மைத் தொண்டர்களை ஒழித்தால்தான் நம் நாடு விடுதலையடையும் என்று தமது பத்திரிகையில், பத்தி, பத்தியாய் எழுதினர். அதற்குப்பிறகு ஸ்ரீமான் மாயவரம் சுப்பிரமணியம் பிள்ளையைப் போன்ற தேசபக்தர்களின் மண்டைகளை உடைத்தால்தான் நம் நாடு விடுதலையடையும், என்று கூறி ரூபாய் பத்தாயிரம் இதற்காக ஒதுக்கி வைத்திருப்பதாயும் வீரமுழக்கம் செய்தார். இப்பொழுது சுயமரியாதை இயக்கத்தை தன்னால் ஒழிக்க முடியாவிடில் 'தானே ஒழிந்தால்தான் இந்நாடு விடுதலையடையும்' என்று தம் பத்திரிகைத் தலையங்கத்திலும் எழுதிவிட்டார். ஸ்ரீமான் நாயுடுகாரின் இத்தகைய முடிவு நாம் எதிர்பார்த்ததே யாகும். இவ்வித முடிவிற்கு அவர் வருவாரென்று மாயவரம் பொதுக் கூட்டத்தில் எனது முடிவுரையில் கூறி சில தினங்கள் கூட ஆகவில்லை பாவம்! ஸ்ரீமான் நாயுடுவின் இத்தகைய பிற்போக்கான அறிவின் தன்மையைக்கண்டு பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் வருந்துகின்றார்கள்.

"சுயமரியாதை இயக்கம் ஒழியவேண்டும் அல்லது தான் ஒழியவேண்டும்" என்று ஸ்ரீமான் நாயுடு கூறுவதில் அறியாமையைத தவிர வேறொன்றிருப்பதாக நமக்குப் புலப்படவில்லை. சுயமரியாதை இயக்கம், ஏழைகளிடத்தும், பணக்காரர்களிடத்தும், உத்தியோகஸ்தர்களிடத்தும், வியாபாரிகளிடத்தும், இளைஞர்களிடத்திலும், முதியோர்களிடத்தும், பெண்களிடத்தும், புலவர்களிடத்தும், தொழிலாளிகளிடத்தும், ஜமீன்தார்களிடத்தும்; அரசர்களிடத்துமாக சிறிய கிராமமுதல் பெரிய பட்டணம் வரை நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும், வேரூன்றி பரவிவிட்டது.

இவ்வியக்கத்தை இனி எக்காலத்திலும் எவராலும், எவ்வகையிலும், அழிக்கமுடியாது. அப்படி அழித்துவிடலாம் என்று எண்ணுவது சமுத்திரத்தண்ணீரை இரைத்துவிடலாம் என்பதைவிட மிக்க மோசமானது. சூரியன் ஐஸ்கட்டியைப் போன்று குளிர்ந்து விடுவான் என்றும் சந்திரன் சுடர்விட்டெரிகின்ற அக்கினியைப்போல் பொங்கி எழுவான் என்றும் இப்பரந்த பூமியைப் பாயைப்போல் சுருட்டி விடலாமென்றும் எண்ணுகின்ற அறிவற்றவன் கூட பார்ப்பனக்கொடுமை நிறைந்த இந்நாட்டில் சுயமரியாதை இயக்கம் அழிந்துவிடும் என்று கருதமுடியாது என்பதை ஸ்ரீமான் நாயுடுவுக்கு அறிவுறுத்துகின்றேன்.

இனி சுயமரியாதை இயக்கம் என்றால் என்ன என்னபதைப் பற்றியாவது ஸ்ரீமான் நாயுடு உணர்ந்தாரா? இல்லையா? அல்லது உணர்ந்தும் பார்ப்பனர்கள் தன்னை தலைவர் என்று கூறுவதற்காக நம் சமூகத்தைக் காட்டிக்கொடுத்து வருகின்றாரா? என்பதைப்பற்றி பலத்த ஐயப்பாடு தோன்றுகின்றது. எது எப்படி இருந்தாலும் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களைப்பற்றி பொது மக்களில் ஸ்ரீமான் நாயுடுவைப் போன்ற சிலர் அறிந்துகொள்ளுமாறு கீழே குறிக்கின்றோம். இவற்றுள் ஆக்கல் வேலை அழித்தல் வேலை என இரண்டு. அழித்தல் வேலை 10 அதிகாரத்தையும் ஆக்கல் வேலை 12 அதிகாரத்தையும் உடையது. முதலில் அழித்தல் வேலையைப்பற்றி கூறுகின்றோம்.

1 சமூக இயல்.

1 திருமண நாளில் மணமக்கள் இன்னதென்று உணர முடியாத புரோகிதச் சடங்கை ஒழித்தல்

2. இறந்தவர்களைத் திருப்தி செய்ய திதி என்ற பெயரால் பார்ப்பனர் வயிற்றை நிரப்புவதைத் தடுத்தல்

3. மாணச் சடங்கு, தீண்டல் கழித்தல், குழந்தை பிறப்புச் சடங்கு, பள்ளியில் வைத்தல், சாந்தி முகூர்த்தம் செய்தல் முதலிய பல சடங்குகளுக்கும் பார்ப்பனர் அவசியம் என்பதை ஒழித்தல்.

4. பார்ப்பனர்களுக்கு மட்டும் சோறு போடுகின்ற சத்திரம் சாவடிகளின் கொள்கைகளை அழித்தல்.

5. பார்ப்பனர்களுக்குத் தானம் கொடுத்தால்தான் இறைவன் முத்தி அளிப்பான் என்ற எண்ணத்தை ஒழித்தல்.

6. தகப்பன் செய்கின்ற பாவம் பிள்ளை செய்கின்ற பிராமண தானத்தால் தீர்ந்துவிடுமென்ற மூட எண்ணத்தை ஒழித்தல்.

7. மனிதனுக்கு மனிதன் மோட்சத்தைக் கொடுக்க முடியுமென்றும் மந்திரங்களினலும் மற்ற வகையாலும் புத்திரப் பேறுகளைப் பெறலாம் என்றும் எண்ணி பெரும் பொருள் செலவிடுகின்ற எண்ணத்தை அழித்தல்.

8. மனிதனுக்கு மனிதன் பிறப்பினால் உயர்வு தாழ்வு கூறுவதைத் தடுத்தல்.

9. சூத்திரன் என்ற சொல்லுக்கு தாசி மகன் என்ற பொருளாதலின் அச்சொல் உபயோகிக்கப் படுவதை பலவகையிலும் தடுத்தல்.

10. சிறு பெண்களை பெரிய வயதுடையவர்களுக்கு மணம் புரிவதைத் தடுத்தல்.

11. நாய், கழுதை, பன்றி முதலியவைகள் நடக்கும் தெருக்களில் மனித வகுப்பில் பிறந்தவனை நடக்கவிடாமல் தடுப்பதைத் தடுத்தல்.

12. மனிதனுக்கு மனிதன் சாமி! என்றழைக்கின்ற கிரப்பந்தமான அநீதியை அறவே ஒழித்தல்.

2. அரசியல்.

1. சுயராஜ்யம் பெற்ற பின்னர்தான் சுயமரியாதை உண்டாகும் என்று கூறுகின்ற 'தேசாபிமானி"களின் வஞ்சகச் செயல்களை விளக்குதல்.

2. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு எதிரிடையாயுள்ள எந்தக் கூட்டத்தையும் எந்தத் தனி மனிதனையும் பகிஷ்கரித்தல்.

3. அரசியல் ஸ்தாபனம்தான் காங்கிரஸ் ஸ்தாபனம் என்று நெடுங்காலமாய் மக்களுக்குக் கூறி ஏமாற்றிவந்த இக் காங்கிரஸ் புரட்டை வெளிப்படுத்தல்.

3. ஆலய இயல்.

1. ஆலயங்கள் கட்டுவதிலும் கும்பாபிஷேகங்கள் செய்வதிலும் திருவிழாக்கள் நடத்துவதிலும் அனுவசியமாக பொருள்கள் செலவிடுவதைத் தடுத்தல்.

2. இந்து மதத்தினர் என்று கூறுபவர்களிலேயே சிலரை ஆலயத்தில் புகவிடாதபடி தடுப்பதை ஒழித்தல்.

3. ஆலயங்களில் ஆலயத் தொண்டிற்கென்று சில பெண்களை பொட்டுக் கட்டி அவர்களை ஆலயத்துள் நடனம் புரியச் செய்வதைத் தடுத்தல்.

4. குறிப்பிட்ட ஒரு வகுப்பில் பிறந்தவர்கள்தான் கோவிலில் பூசை புரிய உரிமை உடையவர்கள் என்பதாகிய குருட்டு வழக்கத்தை ஒழித்தல்.

5. கோவில்களில் அர்ச்சனை செய்வதாக பார்ப்பனருக்கு நான்கு அணா இரண்டணா கொடுத்து செய்வதில் வடமொழி தவிர வேறு மொழிகளை கடவுள் அறியாரென்றும் பார்ப்பனன் அறிமுகப் படுத்தாவிடில் கடவுள் நம்மை அறியாரென்றும் நாம் கருதுவதாக முடியுமாதலின் அத்தகைய குருட்டு வழக்கத்தை அடியோடு ஒழித்தல்.

6. பிரசாதங்களை வழங்குவதில் பிறப்பால் செல்வத்தால் பதவியால் வித்தியாசங்கருதி முன்பின்னாக வழங்குவதைத் தடுத்தல்.

4. பத்திரிகை இயல்.

1. தேசத்தின் பெயராலோ சுயராஜ்யத்தின் பெயராலோ மக்களின் பெயராலோ பார்பபனர்களால் நடத்தப்படுகிற எவ்வித பத்திரிகைகளையும் பகிஷ்கரித்தல்.

2. சுயமரியாதை இயக்கத்துக்கு விரோதமாகவும் பார்ப்பனர்களின் கொடுங்கோன்மைக்கு ஆதரவாகவும் பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படுகிற எவ்வித பத்திரிகைகளையும் பகிஷ்கரித்தல்.

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஸு வைகாசி-மீ 21-உ

சுயமரியாதைத் திருமணங்கள்.

இந்த வாரம் அநேக இடங்களில் இருந்து சுயமரியாதைத் திருமணங்கள் நடந்ததாக சமாச்சாரங்கள் வந்தவண்ணமாகவே இருக்கின்றன. ஆனாலும் அவற்றில் பெரிதும் பார்ப்பனர்களை விலக்கி நடத்தியதாக மாத்திரம் தெரிய வருகின்றனவே யல்லாமல் மற்றப்படி அவை முழுவதும் சுயமரியாதைத் தத்துவப்படி நடைபெற்றிருப்பதாக சொல்லுவதற்கில்லாமலிருப்பதற்கு வருந்துகின்றோம். ராமநாதபுரம்ஜில்லா சுக்கிலநத்தத்தில் நடந்த மூன்று திருமணங்களையும் மதுரையில் நடந்த ஒரு திருமணத்தையுமே பரிபூரண சுயமரியாதைத் திருமணங்களென்று சொல்லலாம். சுயமரியாதை திருமணத்திற்கும் அது அல்லாத திருமணத்திற்கும் நாம் குறிப்பிடும் வேறுபாடுகள் என்னவெனில்,

சுயமரியாதை அற்ற திருமணமென்பது

1. மற்றவர்களைக் காட்டிலும் ஜாதியாலோ சமயத்தாலோ தன்னை உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளுகிற ஆச்சாரியன் என்பவனைக்கொண்டு மணச்சடங்கு நடத்துவது.

2. மணமக்களுக்கு மணமக்கள் அறியாத பாஷையில் சடங்கு வாக்கியங்களைச் சொல்வது.

3. மணமக்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பொருள் விளங்காத சடங்குகளை செய்விப்பது.

4. இன்னின்ன காரியத்திற்காக இன்னின்னவைகளை செய்கிறோம் என்கின்ற தறிப்பில்லாமல், வழக்கம், பழக்கம், பெரியவாள் காலத்திலேற்பட்டது, என்கின்ற குருட்டு நம்பிக்கையின் பேரில் காரியங்களைச் செய்வது ஆகிய இவைகளும் மற்றும் இது போன்ற நடவடிக்கைகளும் கொண்ட மணங்களை சுயமரியாதையற்ற மணங்கள் என்றே சொல்லலாம்.

தவிர மணமக்கள் விஷயத்திலும் போதிய வயது முதலிய பொருத்தமில்லாததும், பெண்ணின் சம்மதமோ அல்லது ஆணின் சம்மதமோ இல்லாமல் பெற்றோர்கள் தீர்மானம் செய்து விட்டார்களாதலால் கட்டுபட்டுத்தான் தீரவேண்டும் என்கின்ற நிர்ப்பந்த முறையில் நடப்பதும் சுயமரியாதை யற்ற மணங்கள் என்றே சொல்லலாம்.

இங்கிலையில் சுக்கிலநத்தத் திருமணங்கள் சுயமரியாதைத் திருமணமென்றே சொல்ல வேண்டும். முதலாவது, மணமக்கள் ஒருவரை ஒருவர் அன்பும் காதலும் கொண்டு தாங்களாகவே சம்மதங் கொண்டவர்கள். இரண்டாவது, திருமணத்தின் போது முன் சொன்ன குற்றங்களில்லாமல் பரிசுத்தத் தன்மையாகவே நடைபெற்றன. அதாவது மணமக்களை வெகு சாதாரண உடையில் சுமார் 2000 பந்துக்களும் பொது மக்களும் நிறைந்த கூட்டத்தின் நடுவில் கொண்டு வந்து இருத்தி மணமகளின் பெற்றோர் எழுந்து சபையாரை நோக்கி "இன்று இங்கு எழுந்தருளியிருக்கும் பெரியாரான திருவாளர் ராமசாமி நாயக்கரவர்களை எனது மகனின் திருமணத்தை இனிது நடத்திவைக்கும்படி நான் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கேட்டுக்கொண்டார். திரு. நாயக்கர் எழுந்து சபையோரைப் பார்த்து "மணமகனின் தந்தையார் வேண்டியபடி நாம் நடத்தி வைக்கப்போகும் திருமணமானது இனிது நடைபெறவேண்டும்" என்றும் "மணமக்களும் சுற்றத்தாரும் எல்லாப் பேறும் பெற்று இன்பமாய் நீடூழி வாழவேண்டும்" என்றும் எல்லாம் வல்ல சக்தியை இறைஞ்சி ஆசீர்வதிக்கும் படியாய் வேண்டிக்கொண்டார். சுற்றத்தாரும் பொது மக்களும் ஒரு நிமிஷம் அவரவர் வழிபடும் சக்தியை பிரார்த்தித்து ஆசீர்வதித்தார்கள். பிறகு நாயக்கர் மணமகளைப்பார்த்து சொல்லும்படி கேட்டுக்கொண்டதாவது.—

"எல்லாம் வல்ல சக்தியின் அருளால் நமது இல்லற வாழ்க்கைக்கு அரிய துணையாக தங்களைப் பெறுகிறேன். தங்களைப் பேணுவதில் தங்களுடைய தாய் தந்தைகளைப் போலவும் இல்லறத்தை நடத்துவதில் தங்களுக்கு உண்மையான அமைச்சாகவும் அருமைத் தோழியாகவும் இருந்து வருவதோடு என்மனதாலும் சொல்லாலும் செயலாலும் தாங்கள் செல்லும் நல்வழியில் தங்கள் உள்ளம் மகிழ்ச்சி யடையும்படியாக யான் எச்செயலையும் செய்யவும் உடன் படுகிறேன், நாம் இருவரும் உடலும் உயிரும் போலவும் கண்ணும் இமையும் போலவும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க அருள் புரியுமாறு எல்லாம் வல்ல சக்தியை வணங்கி இம்மாலையைத் தங்களுக்கு சூட்டுகின்றேன்' என்று சொல்லி மணமகள் மணமகனுக்கு மாலை சூட்டினார். அதுபோலவே மணமகனும் சொல்லி மங்கல நாணை மணமகளுக்கு பூட்டினார். மற்றும் ஒருமுறை சபையோர் ஆசீர்வதித்தார்கள், சிலர் எழுந்து நின்று இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி ஆசீர்வதித்தார்கள். மணமக்கள் மணத்தை ஒப்புக்கொண்டதற்கறிகுறியாக மாலைகளை மாற்றிக் கொண்டார்கள். கடைசியாக மணமக்கள் எழுந்து நின்று தங்களுக்கு திருமணம் செய்வித்ததற்காக வணக்கம் செய்வதின் மூலம் நன்றி செலுத்திவிட்டு இருவரும் "நமது இல்லற வாழ்க்கையை ஒழுங்காக நடத்தவும், காதலின்பத்தை அனுபவிக்கவும், உலகிலுள்ள மக்கட்கு நம்மாலான உதவி புரியவும், குடும்ப வாழ்க்கையை ஏற்று நடத்தச்செல்வோம்" என்று சொல்லிக் கொண்டே நடந்து அம்மியை மிதித்துவிட்டு வீட்டிற்குச் சென்றார்கள்.

[குறிப்பு:— இந்த இடத்தில் அம்மியை மிதிப்பதற்கும் மணவரையைச் சுற்றுவதற்கும் பொருள் இன்னதென்று விளங்கவில்லையானாலும் இந்த லாப்படி இவ்விரு சடங்கும் செய்தால் தான் மணம் செல்லுபடியாகும் என இருப்பதால் இவற்றைச் செய்ய வேண்டி நேரிட்டது]

மணமக்களின் பெற்றோர்கள் இம்மாதிரி திருமணம் நடத்த வெகு ஆவலோடு இருந்தார்கள் என்பதையும் மற்றபடி மூடப்பழக்கவழக்கங்களில் அவர்களுக்கு நம்பிக்கையில்லையென்பதையும் பொதுஜனங்கள் உணர்வதற்கு ஒருசிறு உதாரணமே போதுமானது. அதாவது மணமகளின் பெற்றோர் பலலட்சத்திற்கு அதிபதிகளாயிருந்தும் மணமக்களுக்கு புதுஉடைகூட உடுத்துவிக்காமலும், மணப்பெண்ணுக்கு சாதாரணமாய் அணிந்திருக்கும் அணியைவிட விசேஷ நகையொன்றும் பூட்டாமலும், மணமகன் சாதாரண வேஷ்டியுடனும் ஒரு சிறுதுண்டை மேல் வேஷ்டியாக அணிந்திருந்ததோடு ஒரு காசளவு பொன்னோ வெள்ளியோ அணியாமலும் வெகு இயற்கையழகோடு வந்து வீற்றிருந்தார்கள். நிற்க திருமணச் சடங்கு தொடங்கும்போது ஒரு பெரிய அம்மையார் மணமக்களின் முன்பாக ஒரு குத்து விளக்கை வைத்து விளக்கு ஏற்ற நெருப்புக்குச்சியை உரைக்கும் போது மணமக்களின் தகப்பனாரான ஸ்ரீ துரைசாமிசெட்டியார் எழுந்து "எதற்காக இங்கு விளக்குப் பற்றவைக்க வேண்டும்? பகல் 11 மணி நேரத்துக்கு இங்கு இருட்டாகவா இருக்கிறது? அனாவசியமாக அர்த்தமில்லாததைச் செய்யாதீர்கள்" என்று தடுத்துவிட்டார். தவிர வேறு எவ்வித சடங்கையும் வைத்துக் கொள்ளவில்லை. மற்றபடி ஒரே ஒரு சடங்கில்தான் எல்லோரும் ஈடுபட்டிருந்தார்கள். அதாவது பகல் 12-மணி முதல் இரவு 2-மணி வரையிலும் வந்திருந்த சுமார் 5000 பேருக்குக்குறையாமல் சாப்பாடு போட்டவண்ணமாகவே இருந்தார்கள். பலர் மூட்டை கட்டிக்கொண்டு போனவண்ணமாகவே இருந்தார்கள். ஒரு ஊர்வலமும் நடந்தது.

நிற்க மறுநாள் காலையில் நாயக்கரும் அவர்கள் சகாக்களும் செட்டியார் அவர்களிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது செட்டியார் சொன்னதாவது:—

"தாங்கள் இங்கு வந்தது எனக்கு மிகப் பெருமையும் திருப்தியும் அளிக்கத்தக்கதாய் இருக்கிறது. தங்களால் நடத்தி வைக்கப்பட்ட இத்திருமணங்களைப் பற்றி என் சுற்றத்தார்களும் நண்பர்களும் நேற்றுப் பகல் 11-மணி முதல் மாலை 6-மணி வரை குற்றம் சொல்லிக்கொண்டும் பரிகாசம் செய்து

கொண்டும் இருந்தார்கள். ஆனால் நேற்று மாலை 6-மணி முதல் 10-மணி வரை நிகழ்த்திய தங்களுடையவும் தங்கள்சகாக்களுடையவும் பிரசங்கங்களைக் கேட்ட பின்பு ஒவ்வொருவரும் திருப்தியடைந்ததோடு இனி தாங்கள் செய்யப்போகும் ஒவ்வொரு சடங்கையும் இப்படியே செய்வதாக தீர்மானித்துக்கொண்டும் முதல் முதல் இச்சடங்கை நானே செய்து காட்டிய பாக்கியம் பெற்றதற்காக என்னை பாராட்டிவிட்டும் சென்றார்கள்."

எனவே நம் நாட்டில் நடக்கும் திருமணங்களில் முக்கியமாக கவனிக்கவேண்டியதென்னவெனில், அர்த்த மற்ற சடங்குகளை விலக்குவதும் ஆடம்பரமற்ற முறையில் அதாவது அனாவசியமான வழியில் பெருமைக்காக பணத்தைச் செலவாக்காமல் இருப்பதும் கல்யாணங்களை பலநாட்கள் நீடித்து நடத்தாமல் ஒரே நாளில் முடிப்பதும் ஆகிய காரியங்களை முக்கியமாகக் கொண்டு ஒவ்வொருவரும் நடக்க வேண்டுமென்பதற்காகவே அம்மாதிரி நடத்திய ஒரு பெரியாரின் செயலை ஆதாரமாகக்கொண்டு இத்தலையங்கம் எழுதியிருக்கிறோம்.

'குடி அரசு' வாசகர்களுக்கு அறிவிப்பு

சென்ற சில நாட்களாக அதாவது பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகமானதிலிருந்து நமது அச்சு யந்திரம் அதிக வேகமாகவும் அதிக நேரமும் வேலை செய்ய நேர்ந்திருப்பதால் அடிக்கடி சீர்கெட்டு தொந்தரவு கொடுத்து வருவதினிமித்தம் நமது பத்திரிகை சரியான காலத்தில் வெளியிடப்பட முடியாமல் இருக்கிறது. இரவும் பகலுமாய் வேலை செய்தாலும் எப்படியும் ஒன்றிரண்டு நாள் தாமதமேற்பட நேரிடுகிறது. ஆதலால் இன்னும் ஒரு புது யந்திரம் வாங்கும் வரை 'குடி அரசு' வாசகர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்.

ஸ்ரீ நாயக்கர்.

சமீப காலமாக ஏற்பட்ட தொடர்ச்சியான பிரசார நிகழ்ச்சியாலும் மகாநாடுகளுக்கும் திருமணங்களுக்கும் மற்ற அழைப்புகளுக்கும்செல்ல நேரிட்டபடியாலும உடல் நலம் கெட்டு உஷ்ணம் அதிகரித்து சென்ற இரண்டு மூன்று நாட்களாக வயிற்றுக்கடுப்பும் ஜுரமும் கண்டு உடல் நலிவு கொண்டிருக்கிறது. டாக்டர்கள் ஒரு மாதத்திற்கு ஓய்வெடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்துவதால் நீலகிரிக்கோ அல்லது கொடைக்கானலுக்கோ அல்லது குற்றாலத்திற்கோ கூடிய சீக்கிரம் அவசியம் செல்லவேண்டியிருப்பதால் மற்ற அழைப்புகளுக்கும் ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளுக்கும் வரஇயலாமைக்கு வருந்துகிறார்.

குறிப்பு.

சென்ற வாரத்தலையங்கத்தில் குறிப்பிட்டபடி ராமநாதபுரம் ஜில்லாவுக்கு திரு கருப்பையா பிள்ளையும், திருநெல்வேலி ஜில்லாவுக்கு திரு. லெக்ஷ்மண பிள்ளையும், சுயமரியாதைப் பிரசாரத்தொண்டர்களாக இருக்க சம்மதித்திருக்கிறார்கள். இனி--மதுரை, சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, சென்னை ஆகிய ஜில்லாக்களுக்கு மாத்திரம் பிரசாரகர்களை சிபார்சு செய்யும்படி வேண்டுகிறோம்.

மதுரை ராமனாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லா இளைஞர் மகாநாடு.

மே 26, 27-தேதிகளில் மதுரையில் திருவாளர் சென்னை டாக்டர் சி. நடேச முதலியார் அவர்கள் தலைமையில் நடை பெற்ற மதுரை ராமனாதபுரம் ஜில்லா பார்ப்பனால்லா இளைஞர்மகாநாட்டின் நடவடிக்கைகளும் தீர்மானங்களும் இடமின்மையால் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

லால்குடி தாலூகா சுயமரியாதை மகாநாடு,

இம்மகாநாடு 9, 10—6—28 சனி, ஞாயிறு களில் லாலுகுடி ஹைஸ்கூலில் மதுரை திருவாளர் பி. டி. இராஜன் பாரிஸ்டர் எம். எல். சி, அவர்கள் தலைமையின் கீழ் மிகச்சிறப்பாக நடைபெறும். மகாநாட்டிற்கு நமது இயக்கத்தின் தலைவர்களான திருவாளர் வைக்கம் வீரர் அவர்கள், திரு கண்ணப்பர், திரு அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள், திரு சூரியா, திரு தண்டபாணிப் பிள்ளை முதலிய பலரும் விஜயம் செய்வார்கள். மகாநாட்டு வேலைகள் வெகு தீவிரமாக நடைபெறுகின்றது என நமது லாலுகுடி நிருபர் அறிவிக்கிறார்.

பார்ப்பனீயம் ஒழிந்தது.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா புளுதி பட்டியில் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் வருடந்தோறும் பிராமணர்களுக்கு மாத்திரம் போஜனமும் தட்சணையும் அளிப்பது வழக்கம். பனிரெண்டு வருடமாய் நடந்து வந்த இப்பக்ஷ பாதமான வழக்கம் இவ்வருடம் நிறுத்தப்பட்டு சென்ற 21—5—28 தேதியன்று இவ்வூர் திருவாளர் முத்தாண்டி செட்டியார் வகையாரால் சுமார் 500 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டு ஊர்வலமும் விமரிசையாக நடத்தப்பட்டது.

தனவணிக இளைஞர் சங்க காரியதரிசி.

பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்.

தென்காசி தாலூகா. இலஞ்சி திருவாளர் ஐ. எஸ். அகிலாண்டம் பிள்ளை அவர்கள் செல்வன் ஏ. சிதம்பரம்பிள்ளைக்கும், திருநெல்வேலி தாலூகா போர்டு பிரசிடெண்டு திருவாளர் ஐ. சி. ஈஸ்வரன் பிள்ளையவர்கள் செல்வி அறம் வளர்த்தம்மாளுக்கும் நிகழும் விபவ வருடம் வைகாசி மாதம் 8 தேதி திங்கள் கிழமையன்று மணமகள் இல்லத்தில் பார்ப்பனரை ஒழித்து சிறப்புறத்திருமணம் நடத்தப்பட்டது.

எம். பி ஆர். சுப்பையா முதலியார்)

பார்ப்பனீய மொழிந்த கருமாதி.

பண்ருட்டி வர்த்தகம் திருவாளர் ம. சு. ராமாநுஜம் பிள்ளை அவர்கள் சித்திரை 23-ல் காலஞ்சென்ற தமது தந்தையாகிய ம. சுப்பராயப்பிள்ளை அவர்களின் கருமாதியை பார்ப்பனரை நீக்கி செய்து வைத்தார் மற்ற கிரியைகளும் அதன்படியே செய்யப்பட்டன.

ஒரு நிருபர்.

புதிய அகராதி

—◎)❋(◎—

1. பெருந்திருடன்—கலியாணம் வேண்டாம் என்று கூறிப் பெண்களை இழிவு படுத்துபவன்.

2. மந்திரவாதி—ஏமாந்த சோணகிரிகளிடம் பணம் பறிக்கும் எத்துக்காரன்.

3. வைத்தியர்—உலகில் அதிக ஜனங்கள் நிறைந்துவிடாதபடி தடுப்பதற்குத் தோன்றிய உத்தியோகஸ்தர்கள்.

4. ஜோஸ்யன்—புத்தி புள்ளவனையும் குருடனாக்க வந்த ஜகஜாலபுரட்டன்

5. பால்ய விதவை—இரக்கமற்ற பாவிகள் பலரிருக்கிறார்களென்பதைக் காட்டிக் கொள்ள ஏற்படுத்திய உருவச்சிலை.

6. திராவிடன—பிராமனரல்லாதார் முன்னேற்றம் அடைய வழி

7 குடி அரசு—மூட நம்பிக்கையையும் குருட்டு பழக்க வழக்கங்களையும் பார்ப்பனரின்தாசையும் ஒழிக்க வழிகாட்டி.

12. காப்பிகிளப்—சில தடி பிராமணரால் ஏற்படுத்தப்பட்ட பகிரங்கக் கள்ளுக்கடை; குருட்டுபிராமண ஆசாரத்தை உடைத்தெரிய கடவுளால் அனுப்பப் பட்டகாதகன்

13. பஞ்சாங்கக்காரன்—நல்லாருடைய இழவு, கலியாணம், கருமாதி. ஆகிய எல்லாவற்றிலும்கலந்து கொண்டு பாவ மூட்டைகட்டி அனுப்புகிற தபால் அதிகாரி.

12. சத்திரம்:க்கப்பிராமணர்—பொய் பேசப் பழத்தற்கு கண்டு பிடிக்கப்பட்ட குறுக்கு வழி

13. திருவிழா—தனித்தனியாகப் பிரிந்து நின்ற பஞ்சமகாபாதகங்களும் கூடிய மகா கான்பரன்ஸ்.

14. சீட்டுக்கட்டு—பொழுது சீக்கிரம் தொலைவதற்கு சோம்பேறிகளால் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு சித்திர படம்புராணம்

15. பிள்ளைகளை புது வைத்தல்—பெண்கள் ஊர் பயணம் போவதற்காக கண்டு பிடித்த குறுக்கு வழி.

எம். சின்னையர்.

இந்தியர் இலங்கையர் ஓட்டல் லிமிடெட்.

80, அம்பாங் ஸ்றீட், கோலாலம்பூர்

அன்பு நிறைந்த சகோதர சகோதரிகளனைவருக்குந்தெரிவிக்கவேண்டியதென்னவெனில், பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்தும், [illegible] ஏற்பாற்றிக் கொள்ளும் பொருட்டும் 'இந்தியர் இலங்கையர் ஓட்டல், லிமிடெட்' என்ற பெயருடன் ஒரு கூட்டுக் கம்பெனி ஏற்படுத்தி, இக்கோலாலம்பூர், அம்பாங் ஸ்றீட் 80ம் நம்பருள்ள கட்டிடத்தில் காப்பி, பலகாரம் [illegible] வதற்கு வசதியான [illegible] போதிய வசதிகள் [illegible] நாளது விபவ [illegible] வைகாசி மாதம் 8ந் தேதி முதல் [illegible] தங்கள் [illegible] செய்து மேன்மேலும் [illegible] வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

[illegible]

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

5 பிரதிநிதி இயல்.

1. யூனியன் போர்டு முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு ஜனங்கள் தங்களுக்குப் பிரதிநிதியாக பூனைகளைத் தேர்ந்தெடுக்கனும் புலிகளைப்போல் பார்ப்பனரல்லாதார்கள் பார்ப்பனர்களை கூலியாகவோ பிரதிநிதியாகவோ தேர்ந்தெடுத்தனுப்புவதைத் தடுத்தல்.

2 ஓட்டரின் அருமையையும் பெருமையையும் அறியாமல் கயிற்றுக்கோ சாட்சண்ணியத்திற்கோ செல்வாக்கிற்கோ பொருளுக்கோ கொடுக்கப்பட்டு வருவதைத் தடுத்தல்

6. வேதசாஸ்திர புராண இயல்

1 வடமொழியில் கூறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் நாலு வேதங்களும் தமிழ் மக்களுக்கு உரியதானதல்ல வென்பதை வெளிப்படுத்தல்.

2 மக்களுக்குள் பலவித ஜாதிப்பிரிவினைகளை ஏற்படுத்தி ஜாதிக்கொரு நீதி கூறுவதிலும் பார்ப்பனீயத்துக்கு உயிர் கொடுத்து வளர்ப்பதிலும் நம்மை அடிமை வாழ்விலேயே அழுத்துவதிலும் மிகத் தலை சிறந்து விளங்குகின்ற மனுஸ்மிருதி போன்ற சாஸ்திரங்களைத் தீயிட்டுக்கொளுத்தல்.

3 கடவுளின் மகிமையையும் ஸ்தலங்களின் தன்மையையும் தீர்த்தங்களின் தன்மையையும் பொருள் வருவாயைக் கருதி மிகைப்படுத்திக் கூறி எண்ணி யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாத வகையில் புலவர்களால் எழுதப்பெற்றதும் பாடப்பெற்றதுமான ஆபாசமான பொய்கள் நிறைந்த புராணங்களை நாட்டு வழக்கமாக நம்புவதைத் தடுத்தல்

[7.] வியாபார இயல்.

1. பார்ப்பனர் உஜாதி பிரித்து வித்தியாசம் கற்பித்து நடத்தப் பெறுகிற காப்பிக் கிளப்புகளில் நமமவர்கள் சாப்பிடுவதைத் தடுத்தல்.

8 குரு இயல்.

-1 உலகத்தில் ஒரு கண்டத்தில் உள்ள ஒரு சிறிய தேசம், அதிலும் ஒரு பாகத்தில், ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு மட்டும், அதிலும் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு மட்டும், அதிலும் ஐயங்கார், சாஸ்திரி, சர்மா முதலிய வாக்ளை யுடைய ஸ்மார்த்த பிராமணர்களுக்கு மட்டும் குருவாய் விளங்குகின்ற ஒரு மனிதனை "லோக குரு" அல்லது "ஜகத் குரு" என்று கூறும்படி பார்ப்பனர் செய்து வருவதைத் தடுத்தல்

2 "மதம்" என்பதே இன்னதென அறியாதவனும், உத்தியோகங்களிலிருந்து வருபவனும், தனது சிஷ்யர்களுக்கு மத போதனை செய்ய முடியாதவனும் வருடா வருடம் தக்கபடி வரிகளை மட்டும் வசூலிக்க வருபவனுமாகிய ஒரு பிராமணனை குலகுரு என்று கூறி பெயரை எடுத்து வருவதை யும் வணங்குவதையும் நிறுத்துதல்.

3 சமயத்தலைவன் என்பதற்காக முன்னோர்கள் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்தமான ஸ்தாபனங்களைப் பலவழியில் அவ்வெண்ணத்தை பேரடியோடு மறந்து பொன்னுபரணங்களைப் பூண்டு பீதாம்பரங்களை யுடுத்தி பசுவின் கட்டிப்பாலையுண்டு, பட்டுப்பஞ்சணையில் உறங்கி இவ்வுலக போகங்களை அனுபவித்து எஞ்சிய பொருள்களைகொள்ளைக்கும், கூத்திக்கும், கள்ளுக்கும், கலவிக்கும் கலகத்திற்கும் செலவு செய்து வாழ்கின்றமனித உருவங்களை 'சமயகுரு' என்பதை மறுத்தல்

4, எக்குடி எவ்வாறு கெட்டாலும் தன் குடி தனி சிறந்து வாழட்டும்'' என்பதே பெருங்குணமாக உடைய ஒரு கூட்டத்தை புரோகித குரு'' என்று கூறுவதை ஒழித்தல்.

5. "பக்தி" என்பது இன்னதென அறியாதவர்களையும் விவாகம் ஆகாத சிறுவர்களையும், பெருவியாதியுடையவர்களையும், ஒழுக்கமில்லாதவர்களையும் பொருளாசையே மிகுதியாகக் கொண்டவர்களையும் "பிராமணன்" என்ற ஒரு காரணத்திற்காக மக்களின் பக்திக்குரிய பரிசுத்தஸ்தலங்களில் வைத்து "கோவில் குரு" என்று வணங்கி வருவதை நிறுத்துதல்.

9 நீதி இயல்,

1. நாளுக்கு நாள் மக்களுக்குள் ஏற்பட்டு வருகின்ற பொறாமை தீய குணம் வேற்றுமை முதலியவைகளை அழித்தல்.

2. ஒரு குடும்பத்திற்குள்ளாகவோ ஒரு வகுப்பிற்குள்ளாகவோ ஒரு கிராமத்திற்குள்ளாகவோ நேரிடுகின்ற பிணக்குகளுக் கெல்லாம் கோர்ட்டுக்குப் போக விடாதபடி தடுத்தல்.

3 கோர்ட்டுக்குப் போவதைத்தவிர வேறுவழியில்லை என்று கருதுகிறவர்கள் பார்ப்பன வக்கில்களை வைத்து வழக்காடுவதை ஒழித்தல்.

10 கடவுள் இயல்.

மனிதன் எவ்வளவு அயோக்கியத் தனங்களையும், பாவங்களையும் செய்தாலும் கோவிலைச் கட்டுவதினாலோ குளத்தில் நீராடுவதினாலோ பார்ப்பானுக்கு பொருள் கொடுப்பதினாலோ கடவுள் மன்னித்துவிடுவாரென்ற முட்டாள் தனத்தை ஒழித்தல்,

2. இராமாயணத்தைப் படித்து பட்டாபிஷேகத்தை நடத்தினால் தான் இறைவன் குழந்தைகளைக் கொடுப்பானென்று வைணவக் குருமார்கள் சொல்லுவதிலும், இராமாயணத்தை பலமுறை படித்து சீதைக்குப் பலதடவை கல்யாணம் பண்ணினாலும் பலனொன்றுமில்லை. பெரிய புராணம் படிக்கக் கேட்டாலும் புத்திரப் பேற்றை இறைவன் அளிப்பான் என்று சைவக்குருமார்கள் சொல்லுவதிலும் பொருட் செலவைத் தவிர இறைவன் சம்மந்தம் சிறிதுமில்லை யென்பதை வெளிப்படுத்தல்.

3. அபிஷேகமும் அர்ச்சனையும் பார்ப்பனன் மூலம் பொருள் கொடுத்துச் செய்கின்ற அயோக்கியனுக்கு கடவுள் மோட்சத்தைக் கொடுப்பார் என்றும், அவ்வாறு செய்யாத யோக்கியனுக்கு கடவுள் நரகத்தைக் கொடுப்பார் என்னும் மூடவழக்கத்தையும்.

4 பாபிகளுடைய தலைம்பிரைப் பெற்றுக் கொண்டு கடவுள் திருப்தி அடைகிறார் என்ற மூட எண்ணத்தை ஒழித்தல்.

(ஆக்கல் வேலையின்னும் வெளிவரும்)

முடிவுரை

மேலே கூறப்பட்ட 10 அதிகாரங்கள் கொண்ட அழித்தல் வேலைகளையும் இக்காலத்தில் சட்டவரம்பிற்கு உட்பட்டுமக்களின் சமாதான நிலைக்கு பங்க மேற்படாத வகையிலேயே செய்வதாகும். இவ்வியக்கம் பார்ப்பனரல்லாத மக்களின் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதிலும் மக்களின் அறிவு நிலையை வளர்ப்பதிலும் கடவுள் தலையில் சுமத்தப்பட்ட முட்டாள் தனத்தை ஒழிப்பதிலும் நோக்கமாகக் கொண்டு ஈரோடு வைக்கம் வீரரும் 'குடி அரசு' ஆசிரியரும் தன்னலத்தியாகியும், வீர புருஷருமாகிய உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்றதாகும்.

ஆகவே இது எந்த மதத்தையும் அழித்து விட்டு வேறொரு மதம் ஸ்தாபிப்பதற்காகவோ எந்த வகுப்பின் மீதாவது எந்த தனி மனிதன் மேலாவது பொறாமையோ, துவேஷமோ, குரோதமோ கொண்டோ இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பெறவில்லை யென்பதை மிக்க அழுத்தமாகக் கூறுகிறோம்.

இத்தகைய கொள்கைகளைநாஸ்திகமென்றோ? மதத்துவேஷமென்றோ? பார்ப்பன நிந்தையென்றோ எவர்களேனும் கூறுவதாயிருந்தால் அத்தகைய நாஸ்திகத்தையும் துவேஷத்தையும் நிந்தையையும் மக்களின் நலத்தைக் கருதி முழுமனதுடன் வரவேற்கத் தயாராயிருக்கிறோம்,

ஸ்ரீமான் நாயுடு மேலே கூறப்பட்டுள்ள பத்து இயல்களில் எந்த அதிகாரத்தில் எந்த இலக்கமிட்ட கொள்கைகளை அழிக்கவிருப்பமில்லை யென்றும், எந்தக் கொள்கைகள் நம் நாட்டில் பல்லாண்டு பல்லாண்டுகளாக நீடித்திருக்க விரும்புகிறாரென்றும், பொது ஜனங்கள் அறிந்து கொள்ளவேண்டும். இவை அனைத்தையுமே ஸ்ரீமான் நாயுடுகாரு ஒப்புக் கொள்வதானாலும், மறுப்பதானாலும் ஒரு பத்திரிகாசிரியர் என்ற நியாயமான முறையில் தெளிவாய்விளக்கிவிடவேண்டும். இவையிரண்டு மில்லாமல் மறுபடியும் 'நாயக்கர் பிரசாரம்' என்றோ 'நாஸ்திகத்தன'மென்றோ "தமிழ்நாடு" பத்திரிகையிலெழுதுமானால் அது சிறிதும் கலப்பில்லாத சுத்தமான அயோக்கியத்தனந்தானென்று பொதுஜனங்கள் கருத முடியுமென்பதை நாம் கண்டிப்பாய்க் கூறுகிறோம்.

இப்புனிதமான சுயமரியாதை இயக்கத்தை எந்த மனிதனும் எந்தக்கூட்டமும் அழிக்க முடியாது என்பதை உணர்ந்து ஸ்ரீமான் நாயுடுகாரு தனதுதொழிலைநடத்திக்கொண்டிருப்பதே மிகச் சிறந்ததாகும். அவ்வாறில்லாமல் இவ்வியக்கத்தை அழிக்க முடியாமையினால் அவர் கூறியது போலதன்னையே அழித்துக்கொள்ளவிரும்புவாரானால் அதைப்பற்றி பார்ப்பனரல்லாதார் வருந்துவதிற் பலனொன்றுமில்லை யென்பதே நமது முடிவான எண்ணம்.

சி. ஆ. பெ. விசுவநாதபிள்ளை
ஜில்லா சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி,
திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீநாயக்கர் விஜயம் திருச்சியில் சுயமரியாதைத் திருமணம்

திருச்சி எடத்தெருவைச் சேர்ந்த மஞ்சணக்காரத் தெருவில் உள்ள திருவாளர் பெ. லெட்சுமண நாயுடு அவர்களின் சகோதரர் தெ. இராமசாமி நாயுடு அவர்களின் குமாரர் திருவாளர் பெருமாள் நாயுடு அவர்களுக்கும் திருச்செல்வி இராமாநுஜம்மாளுக்கும் மே 24 காலை 11 மணிக்குபிராமணீயமொழிந்த திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மணமகன் முழுதும் கதருடையே அணிந்திருந்தது போற்றத்தக்கது. திருமணம்முடிந்ததும் 'திராவிடன்' பத்திரிகைக்கு ரூ. 2—0—0 ம் 'குடிஅரசு' பத்திரிகைக்கு ரூ 2—0—0 ம் திருமண ஞாபகார்த்த நன்கொடையாக திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதபிள்ளை அவர்களிடம் கொடுக்கப்பெற்றது. திருமணத்திற்குசோட்டிவீருந்து வைக்கம் வீரர் உயர் திரு நாயக்கர் அவர்களும் திருவாளர்கள் கி ஆ பெ விசுவநாதபிள்ளை, செ. திருமலைசாமி செட்டியார், கலியப்பெருமாள்நாயுடு, பரமசிவஞ் செட்டியார், பூவாளூர்பொன்னம்பலனார், சுயமரியாதைத் தொண்டர்சரவணதாசர், லூர்துசாமிபிள்ளை முதலிய பல கனவான்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இன்று மாலை திருமணப்பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தபடி ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் மணப்பந்தலில் "சடங்குகளும் சன்மார்க்கமும்" என்பது பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என நமது நிருபர் எழுதுகிறார்.

கோயமுத்தூர் ஜில்லா குடியானவர் சங்கம்.

சென்ற பிப்ரவரி மாதம் 8-ந்தேதியில் கூடிய மேற்படி சங்கத்தின் 3-வது தீர்மானத்தை சர்க்கார் ஆதரிக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகையால் நமது ஜில்லா முக்கிய குடித்தனக்காரர் தங்கள் தங்கள் கிராமங்களிலும், சுற்றுப் பக்கங்களிலும், உள்ள நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களை ஏற்படுத்த வேண்டியதைப் பற்றியும், புதியதாய் ஏற்படுத்த வசதிகளிருப்பதைப் பற்றியும் சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதினால் அவைகளைப் பற்றி சர்க்காரில் கூடிய சீக்கிரம் பரிசோதிக்கச் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர்.
கௌரவகாரியதரிசி,
27-5-28 கோயமுத்தூர்.

திருச்சி டிஸ்ட்ரிக்ட் போர்டு தலைவர்

இப்போர்டின் தலைவராக சென்னை சட்டசபை உறுப்பினரும் திருச்சி முனிசிபல்சேர்மெனும், பிரபல வக்கீலுமாகிய திருவாளர் டி. எம். நாராயணசாமிபிள்ளை எம்.ஏ.பி.எல். எம். எல். சி அவர்கள்போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் திருச்சிசுயமரியாதைச் சங்கத்தினர் இருபதின்மர் கூடி திரு பிள்ளை அவர்களைக்கண்டு, மாலைசூட்டி தங்கள் மகிழ்ச்சியை அறிவித்து வந்தார்களென திரு மு. சுப்பிரமணிய பிள்ளை அறிவிக்கிறார்.

வேளாள வாலிபர் முதலாவது மகா நாடு, கொடுமுடி.

சில வேளாள வாலிபர் நன்முயற்சியால் அடுத்த 9—6—28-ந்தேதியன்று கொடுமுடியில் வேளாள வாலிபர் மகாநாடு கூடுவதாக அறிய பெரிதும் மகிழ்வுற்றேன்.

மகாநாடுகளால், எதிர்பார்க்குமளவு பலன் இதுவரையும் எய்தாமல் போயினும், பலர் ஒருவிடத்தில் சந்தித்து அவரவர் கருத்துக்களை வெளிப்படுத்தி, உணர்ந்து, நேசமுற ஏதுவாகும் என்றும் நமது காரியத்திற்கு முதற்படி ஆகிற தென்றும் உணர்ந்து யானும் அம் மகாநாட்டுக்குப் போக எண்ணியிருக்கிறேன்.

ஒவ்வொரு சமூகமும், பிறசமூகத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, முடிவில் சமரசமேற்பட்டு, நாடு செழித்தோங்கவேண்டுமென்ற ஆர்வமிக்க உணர்வால், யான் கீழ்காணும் தீர்மான மொன்றை வேளாள வாலிப மகாநாட்டுக் காரியதரிசிக்கு அனுப்பியிருக்கின்றேன் :—

குருக்கள்

நமதுசமூகத்துக்குகுருக்களாகவிருக்கும் ஒருகூட்டத்தார், நம்மைவிடத்தம்மை உயர்ந்த வகுப்பினரென எண்ணிக்கொண்டு, நம்முடன் உண்ணல், மணத்தல், முதலியவற்றில் கலப்பில்லாமலும்; நம்மிடம் பணம் பறிப்பதையே தமது குலதர்மமாகக் கொண்டு, குரு உபதேசம் போன்ற இகபரசாதனங்களில் நமது சகோதரர்களுக்கு எவ்வித்திலும் உதவாமலும், பிறவியில் உயர்வு, தாழ்வு கற்பித்து பொது ஜன சமூகத்தை பாழ்படுத்துவதுடன் நில்லாமல், நம்மிலும் சிலரை உயர்ந்தவரென்றும், சிலரைத்தாழ்ந்தவரென்றும், கற்பித்தும், திரணயித்தும், நமது சமூகமான்புக்கும், சுயமரியாதைக்கும் பங்க முண்டுபண்ணி வருவதாலும் வெகு காலத்துக்கு முன்பே விலக்கப்பட்டிருக்கவேண்டிய இக்குருக்கள் கூட்டத்தாரை இன்றுடனாவது விலக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

எனது கருத்துக்களை ஆதரிக்கும் நண்பர்கள் மேலர் வஜாபம் செய்து, என்னைத்தனிமைக்கப் போர்புரிய விடாமல், போரைநடத்தியும், போருக்குதவியும் வெற்றிபெறமுயலுமாறு மிகவும பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அய்யாமுத்து.

நாடார் மகாஜன சங்க 12 ம் மகாநாடு.

இம் மகாநாடு அருப்புக்கோட்டையில் 1928-ஞ ஜூலை-மீ 4, 5, 6-உ களுக்கு விபவ-ஞ ஆனி-மீ 21, 22, 23-உ களில் நடைபெறும்.

கனம் டாக்டர், P. சுப்பராயன் M. A., B. C. L., L. L. D, அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள். பிரசிடெண்ட்:— பொறையார் ஸ்ரீமான் வீ கனகசபை நாடாரவர்கள், ஜெனரல் செக்ரெட்டரி:—கு. ஆ. முத்து நாடார், உபசாரணைக் கமிட்டி சேர்மன்:— ப. உ. சிதம்பர நாடார்.

ஆரணியில் கோயில் குருக்களின் போக்கிரித்தனம்

ஆரணி கோயிலில் பொது ஜனங்களுக்கு பானத்துக்கு உதவக்கூடிய நல்ல ஜலக் கிணறு ஒன்று இருக்கின்றது அதில், ஆரணி டவுனிலுள்ளபிராமணரல்லாத ஸ்திரீகள் நூற்றுக்கணக்காகச் சென்று அன்றாடம் ஜலம் எடுத்து வருவது வழக்கம். சில தினங்களாக கோயில் குருக்கள் ஒருவன் சதா கோயில் வாசற்படியை மூடிக்கொண்டும சில சமயங்களில் கோயிலின் கிட்டிக் கதவை மாத்திரம் திறந்து கொண்டும், பெண்களுக்கு இடைஞ்சல் செய்துவருகிறான். தலையின் பேரில் குடத்தை வைத்துக்கொண்டு கிட்டி கதவை பெண்கள் எப்படி தாண்ட முடியும். இதைப்பற்றி ஊரில் பலத்த கொதிப்பு இருந்துவருகின்றது. உள்ளூர் சேர்மன ஜனாப் அப்துல்சுக்கூர் சாயபு அவர்களிடம பலர் சென்று முறையிட்டுக்கொண்டதின்பேரில், அவர் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதாயும் இதைப்பற்றி கோயில் தர்மகர்த்தா ஸ்ரீமான் டி. சின்னயநாயுடுவுக்கும் சொல்லி தக்க ஏற்பாடுசெய்யுபடி திட்டமசெய்வதாயும்அறிவித்தாகக் கேள்விப்படுகிறோம. பிராமணரல்லாதார்பணத்தை கொண்டு சகலமும் நடைபெறும் ஓர் கோயிலில் வஞ்சகப்பார்ப்பனக் குருக்கள் செய்யும அக்கிரமத்தை அடக்க உடனே உள்ளூர் சேர்மெனும தர்மகர்த்தாவும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வாரென்று எதிர்பார்த்திருக்கிறோம். என்று நமது நண்பர் ஒருவர் எழுதுகிறார்.

கோயமுத்தூர் ஜில்லா விவசாய சங்கம் 22-5-28 தேதி தீர்மானங்கள்.

1. இவ்வருடம திருப்பூர் கால் நடைக் கண்காட்சி நடைபெறுக.

2. 1928-வருஷத்திய கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டதை அங்கீகரித்துக்கொள்ளப் பட்டது.

3. திருப்பூர் போலிகாலைக்காக கட்டிய கொட்டகைக்கு ரூ 241 சாங்ஷன் செய்யப்பட்டது.வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், கௌரவ-காரியதரிசி.

இனாம்! இனாம்

மூனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பிளேடு மாசிஞ்சிர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன்பேனா இனாமாய் அனுப்பப்படும். கெடியாரம் விலை ரூ 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

9-ம் பக்கத் தொடர்ச்சி.

இயற்கைப் பாடம்.

(நமது நிருபர்.)

இனி இயற்கைப் பாடம் என்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகின்றேன் இந்த இயற்கைப் பாடம் என்பதை நமது சிறு குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பதைப் பற்றி உபாத்தியாயர்கள் மிகவும் கவலை எடுத்துக் கொள்ள வேண்டியது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மிக்க அவசியமான தாகும். ஆனால் அநேக உபாத்தியாயர்களுக்கு இயற்கை தத்துவம் இன்னதென்றே தெரியாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

நமது மக்களின் அறிவு வளர்ச்சி பெருமையடைய முடியாததற்குக் காரணம் இயற்கையின் தத்துவம் இன்னதென்று அறிய முடியாமல்போனதேயாகும்.

மேல் நாட்டார்கள் (குறிப்பாக வெள்ளைக்காரர்கள்) நமபால் தெய்வத்தன்மை யென்றும், அதிசயம் என்றும், அற்புதம் என்றும், சொல்லத்தக்கதான அநேக ஆச்சரியப்படத்தக்க காரியங்களை செய்துக்கொண்டும் இனியும் அநேக ஆச்சரியங்களைக்கண்டுபிடித்துக்கொண்டும் வருவதற்கு அவர்கள் இயற்கையின் தத்துவத்தை அறிவதில் பெரிதும் கவலை எடுத்துக்கொண்டதே காரணமாகும்.

நமது பிள்ளைகளுக்கு நாம் இயற்கையின் தத்துவம் சொல்லிக் கொடுப்பதின் போக்கியதையும் மேல் நாட்டார் தங்கள் பிள்ளைகளுக்கு இயற்கையின் தத்துவத்தை சொல்லிக்கொடுப்பதின் யோக்கியதையும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமானது. நாம் நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கும்போதே "எல்லாம் கடவுள் செயல்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது; கடவுள் சம்மதமில்லாமல் நம்மால் ஒரு காரியமும் செய்யமுடியாது. ஆகையால் இதில் நம்பிக்கைவைத்து எல்லா பொறுப்பும் கடவுள் மீது போட்டுவிட்டு பக்தியாயிருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொடுக்கின்றோம் மேல் நாட்டார் அப்படிக்கில்லாமல் "மனிதனால் செய்யக்கூடாத காரியம் ஒன்றும் இல்லை. முயற்சி செய்; பலனடைவாய். உனது சக்தியில் நீ சந்தேகம் கொள்ளாதே; உன்னால் ஆகுமோ ஆகாதோ வென்று பயப்படாதே சகல அற்புதங்களும், அதிசயங்களும், உனது நம்பிக்கைக்குள்ளும், உனது முயற்சிக்குள்ளும், சிக்கிக்கிடக்கின்றது" என்று சொல்லிக் கொடுக்கின்றார்.

மழை பெய்யாவிட்டால் பார்ப்பானுக்கு பணம் கொடுத்து வருண ஜெபம் செய்யவேண்டும் என்று நாம் சொல்லிக் கொடுக்கின்றோம்

மேல் நாட்டார் மழை பெய்யாததற்கு மேகத்தில் உள்ள கோளாறு என்ன என்று கண்டுபிடித்து மேகத்தை கலக்கிவிட்டு மழை பெய்யச் செய்யும்படி சொல்லிக்கொடுக்கிறார்கள்

ஆயிரக்கணக்கான அறியத்தக்க அறிவுப் பெருக்கத்தை நாம் முழுமைதைகளை பழக்குவதில்லை.

முழுமைதையை இயற்கை விசாரணையில் இறங்கவொட்டாமல் தடுக்க அவைகளை நாஸ்திகம் என்றும், அதிகப்பிரசங்கம் என்றும் பயப்படுத்தி அடக்கி விடுகின்றோம்.

இவ்விதம் அடக்கும் தன்மையை பெரும்பாலும் நாம் மதத்தின் பேரால் செய்கின்றோம். நமது நாட்டின் அடிமைத்தன்மைக்கு இம்மாதிரி மதத்தின் பேரால் கடவுள் தண்டிப்பாரென்றும் பாவம் வரும் என்றும் நாஸ்திகம் ஆகும் என்றும், சொல்லி பயப்படுத்தி மக்களை முட்டாள்களாக்கிய கொடுமையேதான் முக்கிய காரணமாகும்.

மதத்தையும் கடவுளையும் நினைத்ததற்கெல்லாம், எடுத்ததற்கெல்லாம், தொட்டதற்கெல்லாம், சம்மந்தப்படுத்தி 'எல்லாம் கடவுள் செயல்; எல்லாம் கடவுள் செயல்' என்பதையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கும் தன்மையை அடியோடு நிறுத்தி விடவேண்டும்

☞ பணப்புதையலைவிட அறிவுப்புதையல் மிக்க மேலானது.
சமத்துவம், சகோதரத்துவம், சுயேச்சை, சுயமரியாதை,
முதலியவைகளைப் போதிக்கும்

"விதவா விவாக விளக்கம்"

"சர்வ வருண சமரச விளக்கம்."

என்னும் இரண்டு அரிய பெரிய நூல்கள் வெளிவந்து விட்டன!

திரிசிரபுரம் விதவாவிவாஹ சங்கத்தின் மாபெருந் தலைவர் உயர் திருவாளர். சி. பி. ராஜகோபால பாரதியார் அவர்களால் இனிய நடையில், ஆராய்ச்சி முறையில் எழுதப்பெற்றவை. மக்கட் பிறவி யெடுத்த ஒவ்வொருவரும் இந்நூல்களைப் படித்து உணரவேண்டும். ஒவ்வொரு வரியிலும் சிறந்த கருத்துக்கள் பல பொலிந்து ததும்புகின்றன. எத்தகைய அறிவையுடைய மக்களுக்கும் இந்நூல்கள் தகுந்த உணவையும், உணர்ச்சியையும் அளிக்கும்.

தமிழ்ப் புலமையிலும் அநுபவ அறிவிலும், ஆராய்ச்சித் துறையிலும் சிறந்த புலவர் பெருமக்களாகிய திருவாளர்கள் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், பி. ஏ., எல். டி., பி. டி. ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள், எம். ஏ., எல். டி., எஸ். எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள். எம், ஏ., பி. எல்., சமஸ்கிருத வித்வான் ஆர். வாசுதேவ சர்மா அவர்கள், எம். ஏ., பி, எல்., ஜெ. வெங்கடாஜலபதி அவர்கள், பி. ஏ., எல் டி., தமிழாசிரியர் அ. சிவப்பிரகாசனார், சேலம் வக்கீல் அனந்தாச்சாரியார் அவர்கள், பி ஏ., பி. எல்., திரிசிபுரம் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், விருதை சிவஞானயோகிகள், வித்வான் அமிர்தம் சுந்தரநாத பிள்ளை அவர்கள், கோவை இந்து சகோதரி சங்கக் காரியதரிசி திருச்செல்வி கோ. மீனாக்ஷியம்மாள் அவர்கள் ஆகிய சிறந்த அறிவாளிகளின் மதிப்புரையுடன்கூடி வெளிவந்துள்ளன.

திராவிடன், குடி அரசு, தமிழ்நாடு, சுதேசமித்திரன், ஆதிதிராவிட காவலன், ஆனந்த குணபோதினி, யதார்த்தவசனி, நாடார்குல மித்திரன், முதலிய தமிழ்மொழிப் பத்திரிகைகளும், சமூகப் பத்திரிகைகளும், சமயப் பத்திரிகைகளும், அரசியல் பத்திரிகைகளும், இந்நூல்களைப்பற்றி சிறந்த மதிப்புரைகளை எழுதி ஆதரித்திருக்கின்றன.

முடிவாகக் கூறுமிடத்து இந்நூல்களைப் பாராதவர்கள் கண்களைப் பெற்றதனாலாய பெரும்பேற்றைப் பெறாதவர்களாகவே கருதப்படுவார்கள். உடனே முந்துங்கள். மிகச் சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. இந்நூல்களில் ஆசிரியரவர்களின் அழகு பொருந்திய வயோதிகத் திருவுருவம் பொலிந்து விளங்குகின்றது.

விதவா விவாக விளக்கம் 120-பக்கங்களுடையது விலை	ரூ.	0—8—0
சர்வவருண சமரச விளக்கம் 190-பக்கங்களடங்கியது	,,	1—0—0
இவை இரண்டும் ஒரேகாலத்தில் வாங்குபவர்களுக்கு	,,	1—6—0

வி, பி. தபால் செலவு வேறு, வியாபாரிகள் கமிஷனுக்கு எழுதவும்.

C. R. பராங்குசம்,
24, சௌந்திரபாண்டியம் பிள்ளைத் தெரு,
திருச்சினாப்பள்ளி.

இதைப் படித்தபின்னர் படிக்காதவர்களுக்கு கொடுப்பதில் பெரும புண்யமுண்டு.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன்-மீ 1-உ விருது நகரிலிருந்து சுயமரியாதை வீரர்கள் புறப்பட்டு நாகப்பட்டணத்திற்கு தேசபக்த சமாஜத்தின் மகா நாட்டிற்கு 2, 3-உ களில் சென்று பிரசாரம் செய்து 4-உ கும்மகோணம் சாக்கோட்டை சென்று சொற்பொழிவு நிகழ்த்தி 5-உ களில் சென்னைக்கு செல்லுவார்கள். இரண்டொரு தினம் கழித்து மறுபடியும் திருச்சி ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

நமது நிருபர்.

முன் விலை ரூ. 14. இப்போழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும், தென்னை, பனை, ஈச்ச முதலியவைக ளின் குலைகளும் கட்டப்பட்டிருந்தன.

சரியாக காலை 10-மணிக்கு ஸ்ரீ நாயக்கர் அவர்கள் திருக்கலியாணச் சடங்கை ஆரம் பித்தனர். பந்தலின் நடுவில் போடப்பட் டிருந்த திருமணையில் ஸ்ரீ சுப்பா செட்டியா ரின் ஒரே அருமைப்புதல்வனும் திரு. அர ங்கசாமி செட்டியாரும் தமது வலது கை யில் ஸ்ரீமதி ராகம்மாளையும், இடது கையில் ஸ்ரீமதி ரத்தினத்தாயம்மாளையும் பிடித்துக் கொண்டு வலமாக வந்து ஸ்ரீ நாயக்கரை வணங்கி நடுவில் மாப்பிள்ளையும் இருமருங் கிலும் இரு பெண்களுமாக ஆசனத்தமர்ந் தனர். பெரிய பணக்காரர் வீட்டுக் கலியா ணமாயினும், மணமக்கள் [illegible] ஆடம்பரமான [illegible] பரணமும் இல்லாமல் இயற்கையான [illegible] புடனும், அழகுடனும் விளங்கினர். மாப் பிள்ளைக்கு, இடையில் சாதாரண கதர் வே ஷ்டி ஒன்றும் அதற்குமேல் புனிதமாக்கப் பட்ட கதர் அங்கவஸ்திரம் ஒன்றும் தான் தூய்மையாய் விளங்கின. மேலே யாதொரு சொக்காயும் இல்லாமல் இயற் கையாய் ஒரு பூமாலையுடன் மாப்பிள்ளை இரு ந்தனர். இரு பெண்களும் ஒரே மாதிரி சில பணிகள் பூண்டு, மஞ்சள் நனைத்த கதர்ப் புடவை ஒன்றையும், கதர் ரவிக்கை யொ ன்றையும் அணிந்து கொண்டிருந்த காக்ஷி, விண்டவர்க்கே சாக்ஷி. கலியாணத்திற்காக அக்கினியோ, ஓமமோ ஒன்றும் வளர்க்கப் படவில்லை. திருவிளக்கோ, கற்பூரமோ ஒன் றும் காணப்படவில்லை. தேங்காயோ மற்றவைகளோ ஒன்றும் உடைக்கப்பட வில்லை. ஸ்ரீ நாயக்கர் சந்நிதானத்தில் இவைகளெல்லாம் அநுவசிய மெனக்கருதி விடப்பட்டது. ஸ்ரீ சுப்பா செட்டியார் ஆனந்தபரவசராகி கூட்டத்தின் முன் எழு ந்து நின்று, இத்திருமணத்தை சிறப்பாகச் செய்து வைத்து தமது திருக்குமாரனை ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஸ்ரீ நாயக்க ரை மிகவும் பணிவுடன் மாலையிட்டு மரியா தை செய்து கேட்டுக்கொண்டனர். ஸ்ரீ நா யக்கரும் இவ்வேண்டுகோட்கிணங்கி [illegible] பரவசப்பட்டு [illegible] ஆநந்த பாஷ்பம் பொங்க [illegible] எல் லாம் வல்ல சர்வ சக்தியை நோக்கி பிரா ர்த்தனம் செய்து தமது முகவுரையுடன் திரும ணச்சடங்கை ஆரம்பித்தனர். பெண்களி ன் பெற்றோர்களையும், பிள்ளையின் பெற்றோர் களையும் இத்திருமணத்திற்குச் சம்மதமா என்று கேட்டு அவர்கள் வாக்குறுதியைப் பெற்ற பின்னர், பெண்களிடத்தும் பிள்ளை யிடத்தும் அப்படியே அவர்களின் சம்மதி யையும் அறிந்த பின்னர், இவ்வுலக வாழ் வில் ஒருவரை யொருவர் விட்டுப்பிரியாமல் சுகதுக்கங்களிலும் சமத்துவமாய் சுயமரியா தையுடன் வாழவேண்டுமென்ற வாக்குறுதி யை மணமக்களின் வாயிலிருந்தே சொல் லும்படி செய்து, பலராலும் ஆசீர்வதிக்கப் பட்ட திருமாங்கலியத்தை ஸ்ரீ நாயக்கர் தமது திருக்கரத்தால் எடுத்து மாப்பிள்ளை கையில் கொடுத்து மணப்பெண்களின் திருக்கழுத் தில் கட்டும்படி செய்தார். (இதை விபர மாக மற்றொரிடத்தில் காண்க)

தாலிகள் கட்டப்படும்பொழுது பொழிந் த புஷ்பமாரியும், சந்தனமழையும், பன்னீர்ச் சுனையும் வந்திருப்பவர்களின் உடலையும் உ டையையும் நனைத்துவிட்டன. வாத்திய கோஷங்கள் மேக இடியை ஒத்து காது களைச் செவிடுபடுத்தின. 'சுயமரியாதைக்கு ஜே! வைக்கம் வீரருக்கு ஜே!' என்ற மின் னல்கள் இடையிடையே தோன்றிக் கொ ண்டிருந்தன. தாலி கட்டியதும் மாப்பிள் ளையும் பெண்களும் திரு. நாயக்கரை திரு வலம் வந்து நமஸ்கரித்து கைகூப்பி வணங் கி நின்றனர். அவர்களை, சர்வ சக்தியை வேண்டி ஸ்ரீ நாயக்கர் நீடூழிகாலம் பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் கொண்டு சுகமாகப் பெருவாழ்வு வாழ்ந்து சுயமரியாதையுடன் இருக்கவேண்டுமென்று ஆசீர்வதித்தார். ஸ்ரீ ஜே. எஸ். கண்ணப்பர் எழுந்து பல்லா ண்டு பாடி மணமக்களை மனமுவந்து வாழ்த் தினர். திரு. விஸ்வநாத பிள்ளை எழுந்து [illegible] நுட்பமணியுடன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் இருந்தாற்போல் மணமக்கள் இருக்கவேண் டுமென்று கேட்டுக் கொண்டார். ஸ்ரீ தண் டபாணி பிள்ளை எழுந்து வள்ளி தெய்வயா னையை ஒத்த இரு பெண்களுடன் மாப்பி ள்ளை எப்பொழுதும் ஸ்ரீ சுப்பிரமண்யரைப் போன்று சூரத்தனமாய் விளங்கி, ஆசாரத் தையும், பாபிகளையும், [illegible] ஒழி த்து எப்பொழுதும் வெற்றிக்கொடியுடன் சுயமரியாதை பெற்று சுகமாய் வாழவேண் டுமென்றும், திரு. அழகர்சாமி நாயுடு தம்பதிகள் தாம் பிறந்த நாட்டிற்கும் தம் முடைய வீட்டிற்கும், இல்லறவாழ்க்கை யின் நல்லறம் நடத்தி நல்ல வழிகாட்டியாய் விளங்க வேண்டுமென்றும் வாழ்த்துக்கள் கூறி முடித்தனர். சந்தனம், தாம்பூலம், கற்கண்டு, பழம், தேங்காய்கள் வினியோ கிக்கப்பட்டவுடன் இத்திருக் கலியாணம் இனிதுடன் இனிது நிறைவேறியது. பின் னர் பெண்களும் மாப்பிள்ளையும் தமது இல்லத்திற்கேகினர்.

இரண்டாவது திருமணம்.

முதல் திருமணம் நடந்த அதே பந்தலில் அதே [illegible] அதே மணையில் இரண்டாவ து திருமணமும் சரியாக 11-மணிக் கு ஸ்ரீ நாயக்கர் அவர்களாலேயே ஆரம்பிக்க ப்பட்டது. முன்போலவே திரு கோபால்சா மி செட்டியார் தமது வலப்பக்கத்தில் ஸ்ரீமதி கமலத்தம்மாளையும், இடப் பக்கத்தில் சிரோ மணியம்மாளையும் கைக்கொண்டு திருமணை யில் வந்து அமர்ந்தார். இவர்களும் முன் னவர்களைப்போலவே முழுதும் கதருடை யே தரித்திருந்தனர். இதையும் முன் போ லவே ஸ்ரீ நாயக்கர் மனமுவந்து பொறுமை யுடன் ஆசீர்வதித்து திருமங்கலநாணைக் கொடுத்து கட்டும்படி செய்வித்து, தமது நன்மக்களைக்கொண்டு வாழ்த்தியனுப்பினர். இத்திருமணமும் இனிது நிறைவேறியது.

3-வது திருமணம்.

இந்த இரண்டு திருமணங்களின் நடை முறையையும், சிறப்பையும், தெய்வீகத் தன் மையும் பார்த்துக்கொண்டிருந்த சக்கில நத்தத்தில் அதே 28-உ பார்ப்பனக்கிளை [illegible] கொண்டு [illegible] ஏற்பாடு செய் திருந்த சிரஞ்சீவி மாரி செட்டியார் என்ற [illegible] வாலிபன் தம்முடைய திருமணத்தையும் சுயமரியாதையுடன் ஸ்ரீ நாயக்கரைக்கொ ண்டே செய்விக்க [illegible] தவறினாலும், பாவ [illegible] நேரத் துடன் [illegible] முடிவு பெற்றதும் தம்முடைய திருமணத் தையும் முடித்துவைக்கும்படி ஸ்ரீ நாயக்கரை வேண்டிக்கொண்டார். ஸ்ரீ நாயக்கரும் அதற் குச் சம்மதிக்கவே, ஸ்ரீ சுப்பா செட்டியா ரும் அந்த திருமணத்தையும் தம்முடைய பந்தலிலேயே நடைபெறச் செய்ய [illegible] அளித்தனர். இதைக்கேட்டு மாப்பிள்ளை அளவிலா மகிழ்ச்சி [illegible] ஸ்ரீமதி சீதா லக்ஷ்மியம்மாளை [illegible] தொண்டு [illegible] மூன்றாவது திரு மணங்கள் நடந்த இடத்திலேயே [illegible] அதே இடத்திலேயே மணையில் வந்து உட்கார்ந் தனர். சரியாக 12-மணிக்கு ஸ்ரீ நாயக்கர் முன் இரு கலியாணங்களைப் போலவே இதையும் சிறப்பாகச் செய்வித்து ஆசீர்வா தம் செய்து வாழ்த்தினர். இம்மாதிரி இம் மூன்று திருமணங்களும் வெகு சிறப்புடன் நடைபெற்றது. அங்கு வந்திருந்த சுமார் 5000 ஜனங்களும் கண்டு களித்து ஆச்சரி யப்பட்டனர். இதுவரை இம்மாதிரி எந்த திருமணமும் இவ்வளவு சிறப்புடன் நடை பெற்றதில்லை யென [illegible] கூறி சந் தோஷித்தனர். சில வைதிகக் கிழவர்கள் மட்டும் இப்படி பழய முறைகளுக்கெல்லாம் விரோதமாய் [illegible] பழய முறைகளை நீக்கி செய்தால் என்ன விளையுமோ? என்ன விளையுமோ? என பயப் பட்டு பல வீட்டுத் திண்ணைகளில் உட்கார் ந்து குசுகுசு என்று பேசிக்கொண்டிருந்த னர்.

28உ பகல் 12-15 மணிக்கு மதுரையிலி ருந்து ஒரு தனி மோட்டார் [illegible] சக்கிலநத்தத்திற்கு ஸ்ரீ நாயக்கரை தேடிக் கொண்டு வந்தது. காரணம் [illegible] மதுரையில் 28உ அதே முகூர்த்தத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு [illegible] குடும்பத் தில் திருமணத்தை [illegible] ஸ்ரீ திருவேங்கடசாமி நாயுடு தம்முடைய கல் யாணத்தையும் ஸ்ரீ நாயக்கரைக்கொண்டு செய்விக்க வேண்டுமென்று பிடிவாதமாகக்கொ ண்டு மோட்டாரை [illegible] கூட் டி வரும்படி செய்தார். [illegible] இதைக் கேட்டதும் ஸ்ரீ நாய க்கர் கொஞ்சமும் [illegible] காட்டாது சந்தோஷமாய் [illegible] சாப்பிடாமலேயே [illegible] உட னே மோட்டாரில் ஏறிக்கொண்டு 4-வது கல்யாணம் செய்து வைக்க புறப்பட்டு விட் டார். சாப்பாட்டைத் [illegible] ஸ்ரீ கண் ணப்பரும் ஸ்ரீ நாயக்கருடன் [illegible] சென்றார். 32 மைல் [illegible] வழி யில் [illegible] 1-30 மணிக்கு மதுரை [illegible] திரு மணத்தையும் [illegible] முடித்து தம்பதிகளை ஆசீர்வதித்து 3 மணிக்கு அங்கேயே உணவு [illegible] மோட்டாரில் மறு 32 மைல் [illegible] சக்கில நத்

தத்திற்கு மாலை 5 மணிக்கு வந்து சேர்ந்த னர்.

பிரம்மாண்டமான பெரியமகாநாடு.

28-ந்தேதி மாலை சுமார் 5 மணிக்கு சுக்கிலநத்தம் பெரிய குளத்தின் பள்ளத்தாக்கான மைதானத்தில் ஒரு பெரிய மகாநாடு கூடியது. சுமார் 10000 ஜனங்களுக்கு மேல் சர்வ ஜாதி மதத்தினரும் சமத்துவத்துடன் பல சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் வந்து கூடியிருந்தனர்.

திரு. கண்ணப்பர் அக்கிராசனராகத் தெரிந்தெடுத்தனர். ஸ்ரீ நாயக்கர் சுயமரியாதைத் திருக்கலியாணத்தைப் பற்றியும் சமய—சமூக சீர்திருத்தத்தைப் பற்றியும் 3 மணி நேரம் மிக உருக்கமாகப் பேசி முடித்தனர். சிறியோரும் பெரியோரும் இதைக் கேட்டபின் சந்தேக விபரீதம் தோன்றாமல் ஸ்ரீ நாயக்கர் வசமாயினர். தமது உள்ளத்தில் ஸ்ரீ நாயக்கர் உபதேசத்தை குருமொழியென, பசுமரத்தாணி போல் பதிய வைத்துக் கொண்டனர். அதன் பின்னர் ஸ்ரீமான்களான தண்டபாணி பிள்ளையும், செல்வநாத பிள்ளையும், அழகர்சாமி நாயுடுவும் பேசியபின் தலைவர் முடிவுரையுடன் இரவு 11-மணிக்கு மகாநாடு முடிவு பெற்று விருந்து நடந்தது.

29-ந்தேதி காலையில் சுக்கிலநத்தம் ஸ்ரீ சுப்பா ரெட்டியார் ஸ்ரீ நாயக்கருக்கு நமஸ்கரித்து விடைகொடுத்தனுப்பும்போது இத்திருமணப் பந்தமாய் லிருந்த சந்தேகமும் விபரீத புத்தியும் நேற்று மாலையில் செய்த பிரசங்கத்தால் அறவே ஒழிந்து விட்டதென்றும் இனி தம்முடைய 116 கிராமங்களில் உள்ள பந்துக்கள் எல்லாம் இம்மாதிரியே தம்முடைய வீடுகளில் செய்யப்படும் சடங்குகளை பார்ப்பனர்களை நீக்கி நாமாகவே கொண்டே செய்வித்து சுயமரியாதையுடன் இருப்பதாக வாக்குறுதி செய்து கொண்டார்களென்றும் கூறி ஸ்ரீ நாயக்கருக்கு நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டார். ஸ்ரீ நாயக்கரும் அவர் தம் நண்பர்களும் 28-ந்தேதி மாலை அருப்புக்கோட்டையில் பிரசாரம் செய்யப்புறப்பட்டனர்.

சுக்கிலநத்தத்தில் 28௳ கல்யாணத்திற்காகவும் ஸ்ரீ நாயக்கரின் சுயமரியாதைப் பிரசங்கத்திற்காகவும் வந்திருந்த அத்தனை ஆயிரம் ஜனங்களுக்கும் அவர்கள் தகுதியறிந்து குறைவில்லாமல் சமபந்தியாக விருந்தளித்து திருப்தியளித்த ஸ்ரீ சுப்பா ரெட்டியாரின் திறமையையும், தியாகத்தையும் போற்றாதாரில்லை. இந்த ஒரு பணக்காரர் வீட்டுக் கல்யாணம் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களையும் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபடுத்திவிட்டதென்று கூறுதல் மிகையாகாது. இந்த பெரிய கலியாணத்துக்கு காரணமாயிருந்த 60 வயதுள்ள சீர்திருத்தக்காரரான ஸ்ரீ சுப்பா ரெட்டியாருக்கும் அவர் தம் திருக்குமாரர் ஸ்ரீ ஆரங்கசாமி தம்பதிகளுக்கும் மேன் மேலும் ஆண்டவன் அருள் சுரந்து எல்லாம் வல்ல இறைவனை எல்லாரும் வேண்டி அவரவர் பணிகளைப் பற்றுக் கொண்டு போயினர். சுபம்.

நமது நிரூபர்.

பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவர்!
பழநியில் கீர்த்திவாய்ந்த வைத்திய ஆசிரியர்!!

ஐந்து தலைமுறையாய் அனுபவமுள்ளதும், மஹானின் அனுக்கிரகம் பெற்றதுமான பெரிய முறைகளால் தயாரித்த சிறந்த ஔஷதங்கள் எங்களிடத்தில்தான் கிடைக்கும். கர்ம விறாதிகளைக் கண்டிப்பது எது? ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கின பழநி சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம் ஒன்று தான்.

இது அபூர்வ சத்தி வாய்ந்தது தீராத நாட்பட்ட தீமிர், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெரு வயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொறிகள், பத்துகள், தடிப்புகள், கபால நீர் பிளவை, ஆராத குளிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீங்கும். அனுபவத்தில் கைகண்டது.

100-வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50. 50-வேளை ரூ. 25.

ஏழைகளுக்கு பாதி விலை.

நற்சாட்சிகளில் சில:—

ஐயா, எனக்கு வயது 35. இரண்டு வருஷகாலமாய் குஷ்ட வியாதி வலது கால் பெருவிரலில் குளிபுண், குண்டி பின்புறத்தில் கருமேகம், முதுகில் வெள்ளைப்புள்ளிகள், வலது கையிலும் இடது கையிலும் பத்துகள், தேகத்தில் மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல் இவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டு மதராஸ், ராயபுரம் ஆஸ்பத்திரியில் 17 மாதங்கள்வரை ஏற்றியும் இன்னும் அநேக இங்கிலீஷ் மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் தங்கள் மருந்துகளின் குணங்களையும், பிரக்யாதியையும் கேள்விப்பட்டு நேரில் வந்து 50 வேளை குருதாம்பர பஸ்பமும் அதற்கு அனுபானமும் பெற்று சாப்பிட்டதில் குணமாய் இருக்கிறது.

கோவிந்த நாயர், குடுவாயூர், பாலக்காடு தாலூகா.

குருதாம்பர பஸ்பம், தருவித்து 60 வயதுள்ள ஸ்திரீக்கு மேகநீரினால் முழங்கால், பாதம், கணுக்கால் இவைகளில் வீக்கமும், உபத்திரவமுமிருந்து அதற்கு 10-வேளை கொடுத்ததில் பூரண சௌக்கியமாயிற்று.

எஸ். கே. நாராயணசாமி நாயுடு,
எப். டி. சென்னை, காளியாம்பாடி போஸ்டு, வேலூர் தாலூகா.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். **C. மலையப்பசாமி.** நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

13-ம் வருடம் பிறந்துவிட்டது! 13-ம் வருடம் பிறந்துவிட்டது!

“ஆனந்தபோதினி”

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

48 பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.

தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.

13 வருடங்களாக நடைபெற்று வருவது.

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத் தக்கது.

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1.

பினாங், சிங்கப்பூர், கெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1-4.

மாதிரி காப்பி இனாம். விலாசம்:— ‘ஆனந்தபோதினி’ ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

சுயமரியாதைத் திருமணம்.

நிகழும் விபவ ஆண்டு வைகாசித்திங்கள் 11-ம் நாள் காலை எனது தமயனார் திருவாளர் பெ. இராமசாமிநாயுடு அவர்களின் இளைய குமாரன் திரு பெருமாள் நாயுடுக்கும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் கே சுந்தரராஜுலு நாயுடு அவர்களின் தலைமகள் திருச் செல்வி ராமானுஜம்மாளுக்கும் திருச்சி பாலக்கரை எடத்தெருவைச் சேர்ந்த மஞ்சனக்காரத் தெருவில் 64 நெம்பர் கதவிலக்கமுள்ள மனையில் பார்ப்பனீய மற்ற சுயமரியாதைத்திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பெ. லெட்சுமணநாயுடு.

பெண்கள்

ஆவலாய் விரும்பக் கூடியது! உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், ஆரஞ்சி, கருப்பு, கெம்பு, ஸ்நப்தலர்கள், கெட்டிச்சாயம், கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத்தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. ஷை பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. ஷை உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சன்னடி புடவை ரூ. 4—8—0. புதிய கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.
Laxmi Colth Store, MADURA.

மதன ராஜதீப ஹல்வா.

தங்கரேக், வெள்ளிரேக்குகளும், உயர்ந்த பழவர்க்கங்களும், வித்துக்களும், உயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இந்த மதன ராஜதீப ஹல்வாவின் குணங்கள் அடியில் கண்டிருக்கும் கடிதங்களால் நன்கு விளங்கும். ஷை கடிதங்களும் அதிகமாய் புகழ்வதையும் குறைத்து சாராம்சத்தை மட்டும் குறிப்பிட்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஏ. டி. பன்னீர் செல்வம் பார்-அட்-லா அவர்களால்:—

நான் மதனராஜதீப ஹல்வாவை சாப்பிட ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள்ளேயே எனக்கு வேலை செய்ய முன்னிருந்த அசட்டைக் குணம் மாறி எவ்வளவு வேலையானாலும், செய்யக்கூடிய ஊக்கத்தைக் கொடுக்கிறதென உணர்ந்தேன். இது தாது புஷ்டி உண்டாக்குவதிலும், சரீரம் களைத்துப்போய் சக்தியற்றிருப்போருக்கும் குணம் கொடுப்பதில் இதைவிட வேறு எதையும் ஒப்பிட்டுச் சொல்லமுடியாது.

(ஒப்பம்) ஏ. டி. பன்னீர் செல்வம். 31—8—27.

தஞ்சை ஜில்லா மாயவரம் தாலூகா சேங்குடி அ. பக்கிரிசாமி ராவுத்தர் அவர்களால்:—

நான் சிங்கப்பூரில் மார்த்து பிரீச்ரோட்டில் 676, 705 நெ. கடைகளில் இருந்தேன். வெகு நாளாய் இளைப்பும், இருமலும், நீர் ரோகமும் (அதிக நீர் பிரிவது) மாய் இருந்து தேகம் மெலிந்து விட்டபடியால் ஊர் வந்துவிட்டேன். பலவித மருந்துகள் சாப்பிட்டும் குணமில்லாமல் ஜனாப் ஹக்கீம் ம. அ. ஷம்சுதீன் சாஹிப் அவர்கள் தயாரித்திருக்கும் மதனராஜ தீப ஹல்வா சாப்பிட்டேன்; இதுவரை 1½ சேர் சாப்பிட்டிருக்கிறேன். என் தேகத்தை முன் கண்டவர்கள் இப்போது ஆச்சரியப்படுகிறார்கள். இருமல் இல்லை, இளைப்பு இல்லை, நீர் பிரிவதும் இல்லாமல் தேக திடமாயும், வீரிய விர்த்தியாயும் தாது புஷ்டியும் அடைந்து சுகமாக இருக்கிறேன். கூடிய சீக்கிரம் சிங்கப்பூர் ஷை கடைக்கு பயணம் புறப்பட இருக்கிறேன். ஷை ஹல்வாவின் உயர்வு என்னால் கடிததில் எழுத முடியாது! தேக புஷ்டி உண்டாக்கி, தேகதிடம் தருவதில் இதைவிட உயர்வானது வேறு ஒன்று இருக்கும் என்று என்னால் சொல்ல முடியாது. 3—4—28.

(ஒப்பம்) அ. பக்கிர்சா ராவுத்தர்.

மகா-௱-௱-ஸ்ரீ ஆர். எம். கே. ஆர். சாமி புரோக்கர் அவர்கள் C/o மிஸ்டர் கே. ஏ. ஐ. தாஸ்
இன்ஸ்பெகடர், ஜெனரல் ஆப், ஸிவில் ஹாஸ்பிடல்ஸ் ஆபீஸ், இரங்கூன்.

தங்கள் மதன ராஜதீப ஹல்வா ஒருவாரமாக சாப்பிட்டு வருகிறேன்; ஆனால் என் தேகம் முன்னிருந்த நிலைமைக்கு இப்போது சுருசுருப்பு, மல சுத்தம், பசி தாகமும் உண்டாக்கி தேக அசதி முதலியன நிவர்த்தியாகி வருகிறது என்பதை தங்களுக்கு ரொம்ப அன்புடனும், மன சந்தோஷத்துடனும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். (ஒப்பம்) ஆர். எம். கே. சாமி, புரோக்கர். 17—2—28.

சேலம் ஜில்லா ஆரகளூர் ஜனாப், கோ. மீ. கா. முகம்மது மீருன் சாகிப் அவர்களால்:—

மதன ராஜதீப ஹல்வாவில் அரைச் சேர் சாப்பிட்டதில் உஷ்ணம் தணிந்தது, மலச்சிக்கல் நீங்கிற்று, வாயுவை கண்டித்தது. தூக்கம் நன்றாய் வருகிறது. கைகால் அசதி நீங்கிற்று. தாதுவிருத்தி அதிகரிக்கிறது.

(ஒப்பம்) கோ. மீ. கா. முகம்மதுமீருன் சாகிப். 2—10—27.

குற்றாலம் அஞ்சாலவாத்தலை சைஸ்மில் மகா-௱-௱-ஸ்ரீ நாராயணசாமி செட்டியார் அவர்களால்:—

எனக்கு நல்ல பசி இல்லாமையும், தூக்கமின்மையும், நடக்க சக்திக்குறைவும், மலச்சிக்கலும், தேகம் இளைத்தும் இருந்தது. மதனராஜதீப ஹல்வா சாப்பிட்டதில் ஷை துர்க்குணங்கள் யாவும் நீங்கி, நல்ல தாது புஷ்டி, வீரிய விர்த்தி உண்டாகி இருக்கிறது.

(ஒப்பம்) நாராயணசாமி செட்டியார். 8—2—28.

மாயவரம் கீழவீதி ஹைக்கோர்ட் வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ எம். வேங்கடாசலம் பிள்ளை அவர்களால்:—

மதனராஜ தீப ஹல்வாவை நான் சாப்பிட்டுக் கொண்டு வருகிறேன். மெலிந்த தேகத்தையும் தளர்ந்த நரம்புகளையும் வலுப்படுத்தி இயற்கையால் நேருகிற ஓய்வை நீக்கி தேக திடத்தைக் கொடுப்பதில் இது நிகரற்றது.

(ஒப்பம்) எம். ஏ. வெங்கிடாசலம் பிள்ளை. 5—12—27.

மாயவரம் First Grade Pleader மகா-௱-௱-ஸ்ரீ எஸ். ஏ. ஸ்ரீனிவாச ஸர்மா அவர்களால்:—

மதனராஜதீப ஹல்வாவை நான் உபயோகித்து வருகிறேன். அதனால் ஓய்வு நிவர்த்தியும், தேகத்தில் சுருசுருப்பும், பலமும் ஏற்படுகிறது. இது மிகவும் சிலாக்கியமான மருந்து. (ஒப்பம்) எஸ். ஏ. ஸ்ரீனிவாச ஸர்மா. 6—12—27.

நீடூர் மதரஸா மானேஜர் ஜனாப் ஹாஜி மௌல்வி எம். அப்துல்கரீம் சாகிப் அவர்களால்:—

தங்கள் ஹல்வா ஒரு சேர் சாப்பிட்டதில் இப்போது என் சரீர வலுவும், நரம்பின் முறுக்கும், வெகுகாலம் இலகலா யிருந்துவந்த மலம் இருகலாயும், மெலிந்த தேகம் பெருத்தும் நீண்ட நாளாயிருந்த வயிற்றிரைச்சலின் தொல்தமும், ஜீரணப் பெருக்கும் எனக்கு உண்டாகி சுகமாயிருக்கிறதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். (ஒப்பம்) எம். அப்துல்கரீம், நீடூர். 2—10—27

நாகர் கோவில் கிருஷ்ணன் கோவிலில் இருக்கும் ஆயுர்வேத வைதிய ஆராய்ச்சியுடையவர்
விஷ வைத்தியர் இரத்தின வியாபாரி ஜனாப், பீ. சையத் அகமத் சாகிப் அவர்களால்:—

மதன ராஜதீப ஹல்வாவை நான் உபயோகித்ததில் என் சரீரத்தில் கேற்பட்டிருந்த நரம்பிசுவுகளுக்கு ஆச்சர்ய நிவர்த்தி உண்டாய் என்றுமில்லா பலமும் சுருசுருப்பும் மனதிற்கு உற்சாகமும் ஏற்பட்டு விட்டது. ஆகவே இந்த ஹல்வாவை ஒரு மண்டலம் உபயோகிப்பவர்கள் சுவசனம், ஹிருத்ரோகம், பிலீஹம், சோபை, அதிசாரம், கிரஹணி விஹாரம், மூத்திரஹஸ்மரி, காமலா என்னும் உதர ரோகம் முதலியவைகளைக் கண்டிப்பதில் கிராகேப முடையது என, எனது அனுபோகத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உள்ள எனது கிர்தாகூண்ய அபிப்பிராயம். (ஒப்பம்) பீ. சையத் அகமத் சாகிப். 15—12—27.

தரங்கம்பாடி யூனியன் போர்டு பிரசிடெண்டு மகா-௱-௱-ஸ்ரீ கே. ஸி. ராஜதுரை செட்டியார் அவர்களால்:—

மதன ராஜதீப ஹல்வாவினால் என் உடலிருந்த வலி நீங்கிற்று, கெட்ட இரத்தம் சுத்தமடைந்தது. முழங்கால் வலி நீங்கிற்று, எவ்வளவு தூரமானாலும் என்னால் நன்றாய் நடக்க முடிகிறது, நன்றாய் பசி எடுக்கிறது. மூத்திரக் கெடுதலும் நீங்கிற்று.

(ஒப்பம்) கே. ஸி. ராஜதுரை. 12—12—27.

முக்கிய குறிப்பு:— அளவுக்குமீறி அதிகம் பெருத்த தேகிகட்கும், அதிகமான பித்தமயக்க முடையோருக்கும் இது அதிக பயன்தராது. 48-நாள் உபயோகிக்கக்கூடிய ஹல்வா சேர் 1-க்கு விலை ரூ. 12. ஷை சேர் ½-க்கு விலை ரூ. 6—4—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியோகம்)

மலாய் தேசம் முதலிய வெளிநாடுகளுக்கு தபால் செலவுடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

விலாசம்:— ஹக்கீம் ம. அ. ஷம்சுதீன் சாஹிப்,
புதுபள்ளிவாசல் தெரு, மாயவரம், தஞ்சாவூர் ஜில்லா, (தென்னிந்தியா)

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு

உலகமெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK

இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

தாளகபற்பம்.

இருமலுக்கு அனுபத்தில் கைகண்டது.

உத்திரவாத முள்ளது. புகையாது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது. மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைக்கும் [illegible]

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கண்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும் 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான 8 மாதகாலமாய் ரத்தகாச வியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயந்திரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும் ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே விசப்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளிப்படுகொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் நாற்றத்துடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கபம் இருக்கும். [illegible] சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சக்தியில்லை. இந்த நிலைமையில் [illegible] ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். செல்லிஷங் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப் பார்த்து, நானும் இந்தப்படியே கஷ்டப்பட்டேன், தங்களுடைய தாளகபஸ்பம் சாப்பிட்டு சௌக்கியமடைந்தேன் என்று தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழு நாள் கல்ல [illegible] நிம்மதியில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும், இருமல், வாந்தி, கபம் விழுவதும், நாற்றம் வீசுவதும் அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். [illegible] பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நல்ல நிலைமையிலிருக்கிறேன், தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுள்ள வியாதியில் போன உயிரைக் காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொள் என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வந்து தரிசித்தேன். [illegible], ராமநாட்: 10—12—24.

ஆஸ்துமா என்ற [illegible] நமது தாளபஸ்பம், வகையாக சேர்த்து 20-நாள் சாப்பிட்டு [illegible] புகழ்ந்து எழுதியவைகள்:— அகண்ட பரிபூரண மண்டலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், [illegible] என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலதம்பமாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்த்மா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் வேரடி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூரபத்மனுடைய சைமன்யங்களும், சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன் சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலே நீங்கள் "தெய்வம் மானுஷ ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனாக வைத்துக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு நிரோத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிக்கெல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கி [illegible] நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பி யிருக்கிறேன். ஆ. வைகலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே, மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26—வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டு பிடித்தவர்.

ரிஜிஸ்டர்

TRADE MARK

இம் மருந்துகள் மூதல்தரமான தேவ ஒளஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்சிலும 25-3-23-ல் சென்னையில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானல்,

பழனி ஆர். எம். கே.

தங்க பஸ்பம்

நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து! மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இந்நிலமைக்கிருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை நோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் விரிபத்தையும், பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இந்நிலமைக்கிருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்தி வாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம், செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம், பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய் 00. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொம வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரதிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும் காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் நமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர் எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூபாய் 50 க்கு வி. பி. செய்யவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்.— தங்களின் அருமையும் பெருமையுமான தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குக்கொடுத்தேன். அவரின எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால், அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாமபர பஸ்பம் 80—வெள்ளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம், தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி. செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும், மனத்திருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அனேகருக்கு அனுபோக அத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன். தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம் இவைகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது.) P- Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம்:— "சித்தர்" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29. பிராட்வே, மதராஸ்.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

கனம் சீனிவாச அய்யங்கார் சீமைக்குப் போனதைப் பற்றி கவனிப்போம். இங்குதான் இவர்களின் பூர்வீக மனுஷத் தன்மை யற்ற தன்மைகளால் தேசத்தை அன்னியர்களுக்கு அடிமைப் படுத்திக் கொடுத்த தங்கள் புத்தியின் சாமர்த்தியம் விளங்கும். மோசம் செய்து ஒருவனைக் கெடுக்கவேண்டிய இடத்திலெல்லாம் கடவுள் பார்ப்பன வேஷம் எடுத்து வந்ததாகவே புராணங்களிலுள்ள கதைகளெல்லாம் சொல்லுகின்றன. பார்ப்பன வேஷமெடுக்காவிட்டால் வஞ்சனை நடக்காதுபோலும். ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் சீமைக்குப் போவது தேக சவுக்கியத்திற்கு என்னும் காரணம் பகிரங்கமாகச் சொல்லப்பட்டாலும் அந்தரங்க காரணங்கள் வேறாகுமென்பதை பாப்பாரக் காங்கிரஸ் வாதிகள் உணர்வார்கள். இந்தியா கவர்மெண்டுக்கு அவரை நன்றாகத் தெரியும். இங்கிருந்து அவர் புறப்படுகையில் வழியனுப்பினவர்களின் வார்த்தையும் சீமையில் இறங்கினதும் ராய்ட்டரிடம் அவர் சொன்னதையும் படித்தவர்களுக்கு எல்லா சந்தேகமும் இப்பொழுது தீர்ந்திருக்கும். சேர்வராய மலை, நீலகிரி, குடக்கானல், சிம்லா முதலிய இடங்கள் குளிர்ச்சியாகவும் சௌக்கியமாகவும் வாசம் செய்வதற்கிருக்க நம் தேகதத்துவ அணுக்களுக்கும் ஆகாரங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஒத்துவராத சீமைக்குப் போவது தேக சுகத்திற்குத் தானா? வெள்ளைக்காரனுக்கு வேட்டையாடுவதும் மீன்பிடிப்பதும் உறைந்த பனிக்கட்டிகளில் ஓடி ஆடி சறுக்கி விழுவதுமே ஓய்வெடுத்துக்கொள்ளும் காலங்களின் வேலை. இதிலொன்றிலும் இவருடைய தேக சவுக்கியமும் ஆசையு மிருக்காது. சீமையிலேயேதான் ஆப்ரேஷன் செய்ய வேண்டிய டாக்டர் இருக்கிறார்கள் எனவோ அங்கு செய்துகொள்ள வேண்டுமெனவோ சந்தர்ப்பமுமில்லை. பார்ப்பனரல்லாதவர்களிடம் நல்லெண்ணமுடைய சில வெள்ளைக்காரர்களிடமும் சைமன் கூட்டத்தாரிடமும் அவர்கள் கூட்டாளிகளிடமும் மெழுக வேண்டியதை மெழுகவும், "கவர்னர் கனம் பனக்கால் பேச்சைக் கேட்கிறார்; நாங்களே உங்களைத் தாங்குகிறோம்; இனியும் தாங்குவோம்; வரும் அரசாங்கத்தை யெல்லாம் நிலைக்கச் செய்வதற்கு நாங்களே கர்த்தா; எங்களை லா மெம்பர் பதவியிலிருந்து எப்படி நீக்கலாம்; பகிஷ்கார மென்பதே எங்கள் கையிலிருக்கிறது; நான் விசாரித்தால் காங்கிரசில் எதையும் மாற்றுவேன்; எதையும் கொண்டு வருவேன்; இதெல்லாம் உங்களுக்கும் தெரியும்" என்றும, இன்னும் பலவும் இந்தியா மந்திரியிடம் பேசி, தன் மானமும் போய், தேச மரியாதையையும் கெடுத்து, பகிஷ்காரம் மாற்றும் வெளிப்பட்டு. "இவர்தானா நாம் அனுப்பின ராயல் கமிஷனை பகிஷ்கரிக்கும் வீரர்களின் தலைவர்! இரண்டாம் தடவை ராயல் கமிஷன் இந்தியாவிற்கு போவதற்குள் இவ்வளவு அவசரமாக பகிஷ்காரத் தலைவர் இங்கு எதற்காக ஓடிவந்தார்" என்று நினைத்து இந்திய மந்திரி "ஆகட்டும் நீங்கள் போங்கள், சென்னை கவர்னரைப்பற்றி நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று சொன்னதாக தாமே திருப்திப்பட்டு இந்தியா மந்திரியின் ஆளிடம் விடைபெற்று வருவதுதான் சீமைக்குப்போன சீக்கின் (வியாதியின்) குணமோ!

ஸ்ரீசீனிவாச அய்யங்கார் சீமைக்குவருவது ராயல் கமிஷனுக்குத் தெரியாதா? அங்கு இவருக்கு விருந்தில்லையா? இல்லா விட்டாலும் எற்பாடு பண்ணிக் கொள்ள மாட்டாரா? சர். சி. பி. அய்யரும் ஸ்ரீமதி பெசண்டு அம்மாளும் சிபார்சு செய்யாமலா இருக்கிறார்கள்? வேறு விருந்துக்காகவாவது போகமாட்டாரா? விருந்துப் பேச்சு நடக்காதா? சைமன் கூட்டத்தார் வீட்டுக்குப் போகாவிட்டாலும் வெளியில் விளையாடும் இடங்களிலாவது பார்க்கமாட்டாரா? அங்கு தானாகவே போகமாட்டாரா? அவர்களிடம் பேசாவிட்டாலும், அவர் காது கேட்க சத்தம் போடாவிட்டாலும், அவர்கள் சிநேகிதர்களிடமாவது சங்கதிகளை சொல்லமாட்டாரா? சொல்ல ஏற்பாடு செய்துகொள்ளமாட்டாரா? இந்தியாவிற்கு வரும் சைமன் இனி நடக்கவேண்டிய மாதிரிக்கும் பகிஷ்கார தலைவரான இவர் நடந்துகொள்ளவேண்டிய மாதிரிக்கும் சம்மந்தாசம்மந்தங்கள் சொல்லப்படமாட்டாதா? இந்தியாவில் ஏற்படப்போகும் கமிட்டிகளுக்கு அங்கத்தினர்களின் பேர் இப்பொழுதே சீமையில் பேசம்படியாகத் தூண்டமாட்டாரா? என்பதை சனசமூகங்களே தெரிந்து கொள்ளட்டும். இவர் காங்கிரசில், அநேக தப்பு செய்து விட்டேன் என்று ஒத்துக்கொண்டவர்; இனி சரியாய் காங்கிரஸ்காரர்கள் நடப்பதற்கு கமிட்டி ஏற்படுத்தினவர்; ஆனால் இவருக்கு மேல் கமிட்டியாருமில்லை. இவர் சீமையில் செய்யும் வேலை காங்கிரஸ்காரர்களுக்கு சம்மதம். இந்த நிலைமையி லிருந்துகொண்டு ஆளுக்குத் தகுந்தபடி பேசிவரும் பகிஷ்காரக்காரர்கள் அடுத்த எலக்ஷனில் பார்ப்பனரல்லாதாரை தூற்றுவதற்கு ராயல் கமிஷனை எதுவாக்கிக் கொள்ளுவதானால் அதைவிட கேவலத் தன்மையிருக்க முடியாது. கமிஷனை பகிஷ்கரிக்க கூடாது என்கின்றவர்களை விட பகிஷ்கரிக்க வேண்டுமென்கின்றவர்களே கமிஷனிடம் கைகுலுக்குகிறார்கள்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ன்றொரு படலத்திலே இராமனுடைய குலவரலாற்றை விசுவாமித்திரன் கூறியதாகக் கம்பர் கூறுகிறார், அவ்வரலாற்றில் சில மன்னரே கூறப்பெறுவர். ஆனால் அவர்கள் செய்த செயல்களை (வரல் மீதி ஒன்றும் கூறாதிருக்க) கம்பர் கூறுகிறார், சனகன் கூறிய குலமுறையைக் கம்பர் கூறவேயில்லை.

குலமுறைகிளத்து படலத்தில் கம்பர் இராமன் பிறந்த வரலாற்றை விரித்துக் கூறுகிறார், அது இவ்விடத்துக்கு வேண்டாததே. அவ்வாறு கூறுமிடத்துக் கம்பர் பின்வரும் பாடலொன்று கூறுகிறார்.

"சிலைக்கோட்டு நுதற் குதலைச்செங்கனி
வாய்க் கடுநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு
மிடையாரை
முலைக்கோட்டு விலங்கென்றங் குடனணுகி
முன்னின்ற
கலைக்கோட்டுப் பெயர் முனியாற்றுயர் நீங்
கக் கருதினன்"

இப்பாடலில் தாசிப்பெண்களைக்கலைக்கோட்டு முனிவன் தனங்களாகிய இரண்டு கொம்புகளுடைய மிருகங்களென்று நினைத்தானெனக் கூறுகிறார். இதனால் கலைக்கோட்டு முனிவனுடைய கல்வியும் அறிவும் எவ்வளவு சிறந்தனவென அறியலாம். இனிமேற் செல்லுதும்.

மலையாளம் மதனகாமேஸ்வரி லேகியம்.

பெயர் பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் செலவு 6 அணா காலண்டரும் கியாட்லாக் இனாம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி K. A.
போஸ்டு முல்லச்சேரி, தென் மலையாளம்.

இனாம்! இனாம்!
ஸில்க் அங்க வஸ்திரம்.
பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டூப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொருமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனாம் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் சிடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனாம் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனாம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும்.

இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்வி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்களை நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விபரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூல்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை. புதுச்சேரி

சுயமரியாதை பெற்றால்
சுயராஜ்யம்
பெறலாம்.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

ஐந்து (5) குணம் ஔஷதங்கள்.

சுயமான கஸ்தூரி தோலா 1-க்கு விலை 1-ம் நெ. ரூ. 75.
2-ம் நெ. ரூ. 50. 3-ம் நெ. ரூ. 40. 4-ம் நெ. ரூ. 35.

குங்குமப்பூ தோலா 1-க்கு விலை	ரூ. 4.
கோரோஜனை ,, ,, ,, ...	ரூ. 19.
பச்சை கற்பூரம் ,, ,, ,, ...	ரூ. 4.
காபூல் பெருங்காயம் 10 தோலா டப்பி 1-க்கு	ரூ. 1.

காசி வயிரவர் பிரசாதக்கயிறு 100-க்கு விலை 1-ம் நெ. ரூ. 3.
2-ம் நெ. ரூ. 2½. 3-ம் நெ. ரூ. 2.

உத்திராக்ஷ ஜெபமாலைகள், கண்டிகள், கெவுடு தனி மணிகள், பித்தளைப் பாத்திரம், பட்டு தினுசுகள் சகாய விலைக்கு அனுப்பப்படும். விலை ஜாபிதா இனாம்.

மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைகக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி கிருஷ்ண ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு 3½x2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை. ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார் செய்த அருணாக்கொடி தினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு, கடகம், மயிர்மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவி சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம் வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்குக் கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

S. K. மாணிக்கம் செட்டி,
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்ப்பேட்டை
சேலம்.

அசோகி.

ஸ்திரீகளுக்கு உயரிய ஓர் திவ்ய ஔஷதம்.

ஸ்திரீகளுக்கு கர்ப்ப ஆசயத்தில் உண்டாகும் கெடுதல்களாகிய சிறுவயதில் ருதுகம் நின்றுபோதல், காலக்கிரமம் தவறி ஆதல், குறைவாகக் காணுதல், அதிகம் காணுதல், ருதுக வயற்றுவலி, பெரும்பாடு ஆகிய சகல கர்ப்பக் குற்றங்களையும் 'அசோகி' என்னும் திவ்ய ஔஷதம் பூரணமாகக் குணப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும் சந்தான விருத்தியையும் தருவதில் நிகரற்றது. கர்ப்பகாலத்தில் உபயோகிப்பதால் சுகப்பிரசவம் உண்டாகிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

பாரத டிஸ்பென்ஸரி,
ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்

ஆரூடம்

எதிர்கால சம்பந்தமாக நியாய விருத்தமான நான்கு கேள்விகட்கு ரூ 1 மேல் ஒவ்வொருகேள்விக்கும் 4 அணா கடிதம் எழுதும் நேரத்தை குறிப்பிட்டனுப்பவும்.

ஜாதகம்.

பஞ்சாங்கப்படி கிரக சக்கர பாவச்சக்கர சகிதம ஜாதகம் கணிக்க	ரூ 2—0—0
விவாஹ முகூர்த்தம் பார்க்க	ரூ 2—0—0
உபநயனம் கிரஹாரம்பம் கிரகப் பிரவேசம், சீமந்தம் முதலானவற்றிற்கு	ரூ 2—0—0
ஜாதகப்பலனுக்கு 1 வருஷத்திற்கு	2—0—0
ஸ்த்ரீபுருஷ ஜாதகங்கட்குபரிகார சகிதப்புத்திர பாவத்திற்கு	10—0—0

குறிக்கபடாத மற்றுமுள்ள விபரங்கட்கு 1 அணா முத்திரை அனுப்பி எழுதிதெரிந்து கொள்ளலாம். முன்பணம் அனுப்புவது இன்றியமையாதது. கடிதப்போக்குவரவு ஆங்கிலத்திலும் தமிழிலும்.

திரு. சோ. சதாசிவம் பிள்ளை,
ஷண்முக விலாசம், திருவானைக்காவல்.

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

வர்த்தகக்கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டியது எவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் இந்த புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து இந்த கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பெக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னடிஸ மெஸ்மரிஸ மென்னும்

மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மசராஸ்.

திரிமூர்த்தி உண்மை

அல்லது

விலை அணா 12 தேவர்களின் இரகசியம் விலை அணா 12

முழு முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

சூடன் அண்டு கோ., 14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை

அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸ் நல்ல தங்கள் வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே சூவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி சினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்

ஆநந்த குணபோதினி

மூன்றும் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரிக்கு இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

பொருள் செய்வகை.

(விலை ரூ. 1)

திரவியோற்பத்தி செய்யும் அநேக இரகசியங்களையுடையது. அநேக வியாபார தந்திரங்களடங்கி யிருக்கின்றன. இது கதையல்ல, நாவலல்ல, கைத்தொழிற் சாஸ்திரமல்ல, மிகுந்த திரவியம் சம்பாதிக்க விரும்புவோர் கற்க வேண்டிய வியாபார சாஸ்திரம். எல்லா வியாபாரிகளுக்கும் அவசியமானது. கிரம வியாபாரம், துணிந்து செய்யும் வியாபாரம், ஒப்பந்த வியாபாரம், முதலில்லாமற் செய்யும் வியாபாரம, சினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறியும் விவரம், இன்னும் அநேக இரகசியங்களும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியத்தை சம்பாதிக்க வல்லவராவார்கள்.

ஸத்ய தேவி
அல்லது
தர்ம சங்கடம்.

பிரஞ்சு பாஷையில் மிகப் பிரசித்திபெற்ற கொர்னேய் என்பவரால் எழுதிய சரித்திரங்களில் ஒன்றை அநுசரித்து இந்த ஸத்ய தேவி எழுதப்பட்டிருக்கிறது. வாசிக்க வாசிக்க மிகவும் இன்பத்தைக் கொடுக்கும். அருமையான படங்கள், இனிய காதல், ஒப்பற்ற வீரம் இவைகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற நாவல் இதுவே. இதன் விலை ரூபாய் 1.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.